கல்கி

KALKI 6-2-1977 75 காசு





ப்ளீச் செய்யாமலே கருநிற மேனியை சிகப்பாக்கும் க்ரீம்



உலகு காணும் புதுமை: நிறத்தைக் கரைக்காமலே (ப்ளீச் செய்யாமலே) கரு மேனியைச் சிகப்பாக்கும் சாதனம் எக்காலத்திலும் இருந்ததில்லை. சருமத்தைச் சிவப்பாக்க இதுநாள்வரை செய்த முயற்சிகள் எல்லாமே முரட்டு முயற்சிகள், முரட்டு முறைகள். ப்ளீச்சுகளின் சங்கதி உங்களுக்குத் தெரியும்: இருக்கும் நிறத்தையும் கரைத்து வெளிற வைத்து விடும். அடிக்கடி உபயோகிப்பதோ ஆபத்து: காரணம், சருமத்தையே பாதிக்கும் அவற்றின் கடுங்குணம்.

விடிவெள்ளி காட்டும் விந்தையான சாதனையாம் ஃபேர் அண்ட் லவ்லி இரு வழிகளில் வேலை செய்கிறது:

1. உள்ளூர வேலை செய்யும் வைட்டமின் ஒன்று அதிலுள்ளது.

இந்தக் க்ரீமை இடும்போதே, இதிலுள்ள வைட்டமின் சருமத்தினுள் இறங்குகிறது. இழைத்துத் தடவும் போதே உணருவீர்கள் இதன் செயல்வேகத்தை: பரவும் சருமக் கருமையினை மெல்லத் திசைதிருப்புகிறது இது. வேளாவேளை ஆறு வாரங்கள் உபயோகித்துவந்தால் மேனி வண்ணம் மாறக் காண்பீர், பிறரும் காண்பார்.

2. வெளிப்புறத்திலிருந்து பாது காப்பதற்கு, சூரிய ஒளி படாதபடி தடுக்கும் சாதனம் அடங்கியுள்ளது.

நிறம் கருப்பதற்குக் காரணமான கதிரொளியை சருமத்தின் மீது படவிடாமல் தடுத்து விலக்கி, மேனியைக் காத்திடுகிறது ஃபேர் அண்ட் லவ்லி.

சிகப்பழகு தந்து, மேலும் பல வகையில் சிறப்பூட்டும் க்ரீம் ஃபேர் அண்ட் லவ்லி.

ஒப்பனைக்கு அடிப்படையாக தினமும் ஒரு முறை இடத்தக்கது ஃபேர் அண்ட் லவ்லி; இரு முறை உபயோகித்தாலோ நிறைவான பலனுண்டு. வேளாவேளை உபயோகித்துவாருங்கள், மங்காத சிகப்பு நிறத் தங்க மேனி மனம்போல் உங்களுக்கே.

சிகப்பான மேனியழுகுக்கு மென்மையான வழி- ஃபேர் அண்ட் லவ்லி

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் கிடைக்கும்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லிண்டாஸ்-FALOV-6-140 TM [R]

மூட்டுப் பிடிப்பா?




ஆற்றுவது அயொடெக்ஸ்

தேய்த்து ஆற்றும் நிவாரணம்.

வலி தணிக்கும் களிம்புகள் பல இருக்கலாம்; ஆனால் வலி தணித்து அதே சமயம் ஆற்றிவிடுவது அயொடெக்ஸ். ஆற்றக் காரணம் அதில் உள்ள அயொடின்.

தசை வலிக்கும் சரி, மூட்டு நோவுக்கும் சரி,— ஆற்றும் களிம்பு ஒன்றுதான் : அயொடெக்ஸ்.





போடுவீர் அயொடெக்ஸ், புறப்படுவீர் ஓடியாட.

லின்டாஸ்-IODEX-4-140 TM



Creative Unit-A 2352 -Tam




கல்கி

1977 பிப்ரவரி 6

[illegible]

தை 24




போடு புதிர்!

பதினாறு அங்குல நீளம், ஒன்பது அங்குல அகலமுள்ள செவ்வக பேப்பரைச் சதுரமாக்க வேண்டும். பேப்பரை எப்படி வேண்டுமானாலும் வெட்டலாம். ஆனால் இரண்டே துண்டுகளாகத்தான் இருக்க வேண்டும்.

—வி. கோவிந்தராஜன்

விடை (39)ம் பக்கம்







படம் 1-ல் மூன்று வட்டங்களை மட்டும் மாற்றி அமைத்துப் படம் 2-ல் உள்ள அமைப்பு வருமாறு செய்ய வேண்டும்.

—பிருந்தா ஐயர்

விடை (39)ம் பக்கம்





கட்டக்கிலும் ஒரு கல்யாண

நகர்வலம்





- பாராபாடி ஸ்டேடியத்தின் எழில்மிகு முகப்புத் தோற்றம்.
- கட் கஜுரா காட் குளியல் துறை.
- மீன் வள ஆராய்ச்சி நிறுவனத்தில்.
- பாலி ஜாத்ரா விழா.



கல்கத்தாவிலிருந்து புறப்பட்ட புரி எக்ஸ்பிரஸ் கட்டக்கில் நின்ற பொழுது விடியற்காலை நாலரை மணி.

நண்பர் கிருஷ்ணசாமியின் முகவரி என்னிடம் இருந்தது. அதில் 'பென்ஷன் லேன்' என்று போட்டிருக்கவே, சைக்கிள் ரிக்ஷாக் காரரிடம் இடத்தைக் கூறி அங்கு விடச் சொன்னேன். ஸ்டேஷனிலிருந்து ஏழெட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பென்ஷன் லேனுக்குக் குறுக்கே புகுந்து, நெடுக்கே புறப்பட்டு ஐந்தரை மணிக்கெல்லாம் கொண்டு விட்டார்.

தெரு விளக்கடியில், முகவரியைப் பார்த்த பொழுது, கதவு இலக்கத்தைக் காணவில்லை. குளிர் காலப் பின் இரவு ஆதலால் வீட்டுக் கதவுகளும் திறக்கவில்லை; மக்கள் நடமாட்டமும் அதிகம் இல்லை. இருந்தாலும், கிராமங்களில் வீட்டுக்கு வீடு சென்று சாப்பிடக் கூப்பிடுவார்களே, அப்படிப் படி ஏறி இறங்கி விட்டேன். பிறகுதான், ஒருவர் ''அப்படித் திரும்பி இப்படிப் போங்கள்!'' என்று வழி காட்டினார். அவர் சொன்ன இடத்தில் கிருஷ்ணஸ்வாமியின் வீடு இருந்தது.

நான் போவதும் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி உள்ளே நுழைவதும் சரியாயிருந்தது. உள்ளேயிருந்து அவர் சகதர்மிணி, ''அழைத்து வந்து விட்டீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தாள். பாவம், நண்பர் என்னைத் தேடி ஸ்டேஷனுக்கே வந்திருக்கிறார். எப்படியோ ஒருவரை யொருவர் தவற விட்டு விட்டோம்.

''ஆமாம், கட்டக்கில் வீடுகளுக்கு நம்பர் கிடையாதோ?''

''ஏன், உண்டே! ஆனால் பலரும் தெரியும் படியாகப் போட்டிருக்க மாட்டார்கள்.''

''கடிதம் வருவது கூடக் கஷ்டமாயிற்றே?''

''யார் சொன்னது? தபால்காரர் கணக்காகக் கொண்டு வந்து கொடுத்து விடுவார். அவர்களுக்கு இதெல்லாம் அத்துப்படி!''

கல்கத்தாவிலே விட்டு நம்பரைத் தேட வேண்டும் என்றால் எதிரும் புதிருமாகத் தேட வேண்டும். கட்டக்கிலே முகவரி தெரியத் தபால்காரர்களைக் கேட்க வேண்டும் போதும்!

தமிழில் ஒரிஸ்ஸா என்று வழங்கும் உடீஸா ராஜ்யம் இருக்கிறதே, இது வரலாற்றுப் புகழ் கொண்டது. அசோக சக்கரவர்த்திக்குப் போரைத்தொடர்ந்து அறிவுரையும் அறவுரையும் வழங்கிய பெருமை இதனைச் சேர்ந்த



கலிங்கப் பகுதிக்கு உண்டு. ஒரிஸ்ஸா என்ற இன்றையப் பெயரைத் தாங்கி நிற்பதற்குக் கன்னடர்களோ, ஆந்திரர்களோ மூல காரணம். 'ஒக்கலகார்' என்னும் கன்னடச் சொல் 'உத்கல' என்ற பெயரைத் தந்தது. 'ஒடிஸா' என்ற தெலுங்குச் சொல் ஒரிஸ்ஸா என்ற பெயரைத் தந்தது. இவ்விரு சொற்களுக்குமே பொருள்: 'விவசாயி.

விவசாயத்தைக் கலையாக வளர்த்து அதனையொட்டிப் பல அருங் கலைகளை வளர்த்துக் கொண்ட ஒரிஸ்ஸா ராஜ்யத்தின் பழைய தலைநகரம் கட்டக். புதுப் பொலிவு பெறவில்லையென்றாலும் பழைய பொலிவைப் பாதுகாத்து வருகிறது.

மதிய உணவை முடித்துக் கொண்டு ஸ்ரீமதி நந்தினி ஸத்பதியின் தந்தையும் ஒரிய மொழி இலக்கியத்துக்கு வளம் சேர்த்தவருமான ஸ்ரீ காளிந்திசரண் பாணிக் கிராஹியைக் காணச் சென்றேன்.

இங்கு அதிகமாக வழங்கும் வாகன வசதி சைக்கிள் ரிக்ஷாதான். இவற்றைக் கையாள்பவர்கள் பெரும்பாலும் ஆந்திரர்கள். அக்கிரமமான வாடகை கேட்டு அதிகமாக ஆத்திரத்தைக் கிளறத் தெரியாதவர்கள். ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய்க்குச் சென்னையைக் காட்டிலும் பன்மடங்கு தூரம் கொண்டு போய் விடுகிறார்கள்.

டவுன் பஸ் உண்டு, அத்தி பூத்தாற்போல! வெளியூர் செல்ல, வேண்டிய பஸ்கள் உள்ளன. கட்டக்குக்கும் புவனேசுவருக்கும் ஓடும் 'ஷேர் டாக்ஸி'கள் கூடியவரை நன்றாகப் பணியாற்றுகின்றன.

பிராயம் முதிர்ந்த பாணிக்கிராஹி அவர்கள் அன்போடு பார்க்க வேண்டியவைகளைப் பற்றி யெல்லாம் கூறி விட்டு ஒரிஸ்ஸா மக்களைப் பற்றிப் பெருமையாக ஒரு விஷயம் கூறினார்: ''என்னதான் ஏழையானாலும் இவர்கள் கை நீட்டிப் பிச்சை எடுப்பதில்லை!''

கேட்கப் பெருமையாக இருந்தது. இருந்தாலும் பெரியவரின் மனம் புண்படாதவாறு, ''புரியில் மட்டும் பிச்சைக்காரர்கள் அதிகம் போலிருக்கிறதே!'' என்றேன்.

''அதுவா? புரியில் பிச்சை எடுப்பது பாவம் இல்லை. ஆண்டவன் சந்நிதியில் அத்தனை பேரும் பிச்சைக்காரர்கள் தானே?'' என்றவரின் முகத்தில் இளநகை இழையோடியது.

கட்டக் நகரத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டு ஓடும் ஆறுகள் இரண்டு. ஒன்று **மகாநதி**; மற்றொன்று அதன் கிளையான **காட்ஜோடி**.

ஒரு தரம் நாமும் நகர்வலம் வந்தால் கட்டக் நகரம் முட்டை வடிவில் இருப்பதை உணர்வோம். கட்டக்குக்கும் பட்னாவுக்கும் ஓர் ஒற்றுமை. ஆறு மேடாகவும் நகரம் பள்ளமாகவும் இருக்கிறது. கங்கை வெள்ளம் பட்னா



நகரத்துக்குள் புகுந்து விடுவது போல் இங்கும் நீர் பாய்ந்துவிடும் வாய்ப்பு உண்டு. அப்படி ஏற்படாமல் இருக்க காட்ஜோடி ஆற்றில் ஒரு கல்லணை கட்டியிருக்கிறார்கள். இன்று நேற்றல்ல; எட்டாம் நூற்றாண்டில். இன்றும் அழியாக் கருக்குடன் நிற்கும் இந்த அணையைக் கட்டியவன் மன்னன் மரகத கேஸரி. கருங்கற்களை இணைத்து உருவாக்கப்பட்டிருக்கும் இந்த அணை பொறியியல் நுணுக்

ரா. வீழிநாதன்

கத்துக்கு ஒரு சான்று. நம் தமிழ் நாட்டிலும் ஒரு கல்லணை என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருந்தாலும் இந்த அணையின் பெருமையையும் பார்த்துப் பரவசப்பட வேண்டியதுதான்.

மகா நதிப்பக்கம் வந்தோமானால், ஆற்றைக் கடக்க அந்த நாட்களில் கட்டியிருந்த பாலத்தை 'ஜோபரா'வில் காணலாம். இப்போதைய புது பாலமும் பார்ப்போர் கண்ணை விட்டு அகலாதுதான்.

ஆற்றுக்கு அக்கரையில் சௌதவார், பகத்பூர் என்னும் இடங்களில் நெசவாலையும் நூலாலையும் இருக்கின்றன.

மகாநதியின் குளியல் துறை ஒன்று **கட் கடியா காட்** என்னும் பெயரோடு வழங்கி வருகிறது. ஸ்ரீ சைதன்ய மகாப்பிரபு இத்துறையில் படுத்துப் புரண்டு புனிதத்துவம் ஏற்றியிருக்கிறார். இங்கேயே அவர் நீர் சமாதி அடைந்ததாகவும் கூறுகிறார்கள்.

இதன் கரையில் ஸ்ரீ ராமன், சிவன், ஹநுமான் ஆகியோருக்குக் கோயில் இருக்கிறது. இங்கு குடியேறியுள்ள நம் தென்னக மக்கள் இக் கோவிலை ஒட்டினாற்போல் விநாயகருக்கும் முருகனுக்கும் கோவில் எடுத்து வழிபட்டு வருகிறார்கள்.

வரலாற்றுப் பெருமை கொண்ட கட்டக் நகரத்துக்குப் பெருங்கோட்டை ஒன்றுமுண்டு.

பாரா பாடி என்று வழங்கும் அதன் இடிபாடுகள் கூட இடிபாடுகளாகி விட்டன. ஒன்பது அடுக்கு மாளிகை இருந்திருக்கவேண்டும் என்று எண்ணக் கூடிய இடத்தில் கல்மேடு இட்டுக் கிடக்கிறது. நாற்புறமும் ஓடும் அகழித் தடம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இன்று இந்தப் பகுதிக்குப் புகழ் சேர்ப்பது பாராபாடி ஸ்டேடியம். இந்த நகரத்துக்கு அணி சேர்ப்பதோ பாராதீப் நெடுஞ்சாலை. மற்றபடி நம் பக்கத்துப் பெருநகரங்களின் சிறு தெருக்கள்தாம்.

கார்த்திகை மாதத்துப் பௌணர்மி அன்று விசேஷமாகக் கட்டக்கில் கொண்டாடப்படும் விழா **பாலி ஜாத்ரா**. கார்த்திகை தீபத்தின் பொழுது நாம் நினைவுகூறும் மகாபலிக் கதை என்று எண்ணினால், அது தவறாக முடியும். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்னும் பழமொழியைப் பின்பற்றி மகாநதியில் படகு ஏறிக் கடல் மார்க்கமாக மக்கள் பாலி, ஜாவா, சுமத்ரா போன்ற தீவுகளுக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் நினைவாக வாழைப்பட்டை, சர்க்குச்சியால் படகு தைத்து அலங்கரித்து அதில் விளக்கேற்றி மகாநதியில் மிதக்க விடுகிறார்கள். பெரு நிலவிலே ஒளி பாய்ச்சிச் செல்லும் இப் படகுகள் மகாநதியை ஒளி வெள்ளமாக்கி விடுகின்றன. சாதாரண மக்கள் இதனை 'போஇத பந்தன்' அதாவது படகு வழிபாடு என்று கூறுகிறார்கள்.

கட்டக்கின் உடைகள் பிரசித்தம் என்றால் அதைக் காட்டிலும் பிரசித்தம் வெள்ளி வேலைப்பாடு. வெள்ளியை மிக மெல்லிய கம்பியாக — நூலிழைபோல் இழுத்து அவற்றைக் கொண்டு அருமையான கலைப்பொருள்களைச் செய்வதில் வல்லுநக் கலைஞர்கள் இங்கு இருக்கிறார்கள். தார்கஷி அல்லது ஃபில்குரி என்று அழைக்கப்படும் இக்கலைச் செல்வங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை.

கட்டக்கிலிருந்து தலைநகரம் புவனேசுவரத்துக்கு மாறி விட்டாலும், கட்டக்கின் பெருமையைப் பறைசாற்ற இங்கு இயங்கி வரும் இரு நிறுவனங்களைக் கூற வேண்டும்.

ஒன்று சி. ஆர். ஆர். ஐ. என்று வழங்கும் நெல்வள ஆராய்ச்சி நிலையம். மற்றொன்று மீன் வள ஆராய்ச்சி நிறுவனம்.

நெல்வள ஆராய்ச்சி நிலையத்தின் தலைவராக விளங்குபவர் — இன்றும் ஆலோசகராகத் திகழ்பவர் ஸ்ரீ எஸ். வி. பத்மநாபன்.

இவர் தம் சகாக்களோடு செய்திருக்கும் சோதனையை ஸ்ரீ விஜயராகவன் என்னும் நண்பர், ''எத்தனை திருமணங்கள் செய்து வைத்திருக்கிறோம், தெரியுமா?'' என்று குறிப்பிட்டார்.

''திருமணமா?''

வியப்புக்குக் கிடைத்த பதில், ''சோதனை மூலம் எத்தனையோ ஒட்டு வகைகளைக் கண்டு பிடித்திருக்கிறோம். குறைந்த செலவில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய பல்வகை நெல்களை இணைப்பால் உண்டாக்கி யிருக்கிறோம். அதைத்தான் இவர் இப்படிக் கூறுகிறார்!'' என்ற விளக்கமாக வந்தது.

குட்டைப் பயிர், நெட்டைப் பயிர் என்றெல்லாம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். நீர்ப்பஞ்சம் ஏற்படும் காலத்தில் குட்டைப் பயிர் பயன் தரும். நீர் மிகுந்து விட்டால், தண்டு அழுகாமல் நெட்டைப் பயிர் நீண்டு வாழும். பயிர்களை அழிக்கும் பூச்சிகளுக்கும் கொல்லிகள் கண்டுபிடித்திருக்கிறது இந்தச் சோதனைச்சாலை. இதன் சாதனைகளை நுணுக்கமாகத் தெரிந்துகொள்ள இத்துறை வல்லுநர்களையே நாட வேண்டும்.

நண்பர் ஸ்ரீ ராமச்சந்திரன் மீன்வளத்துறையில் பணியாற்றுபவர்.

இவர் துறையும் முக்கியத்துவத்தில் பயிர்த்தொழிலுக்குச் சிறிதளவும் சளைத்ததில்லை. மீன் விவசாயத்தில் ஏக்கருக்கு ஏழாயிரம் ரூபாய் செலவிட்டால், இருபதினாயிரம் ரூபாய்க்கு அறுவடை செய்யலாமாம். நஷ்டம் என்று ஏற்பட்டால், மீன் வளத்துறையில் ஏற்படும் நஷ்டம் போட்ட முதலையும் இழுத்துக் கொண்டு போய் விடுமாம்.

இதையெல்லாம் எடுத்துக் கூறியவர், கெண்டை. மீனைக் குட்டை மீனாக்கி விவசாயம் செய்வதையும் கூறினார்.

கெண்டை. மீன் ஆற்றின் ஓட்டத்தில் கிடைப்பது. இதைத் தேங்கிய நீரில் வளர்ப்பது சிரம சாத்தியமான காரியம். அதைச் சுலபமாக்க இவர்களது நிறுவனம் முயன்றுள்ளது.

கட்டக்கில் இவ்விரு முக்கிய துறைகளிலும் வளம் காண்பதில் நம் தமிழர்களின் பங்கு பெருமைப்படக் கூடிய ஒன்று.

கல்கத்தாவிலே காளி, கட்டக்கிலே சண்டியாக வழிபாடு பெறுகிறாள். உலகமே ஒரு சக்திக்குட்பட்டதுதானே? நம் பக்கத்தில் எல்லைத் தெய்வமாக நிற்கும் ஐயனார் இங்கு 'தக்கினி'யாக நிற்கிறார்.

இனியும் கட்டக் புகழை நீட்டினால், 'டக்' கென்று கட்டுரையைக் 'கட்' பண்ணச் சொல்ல மாட்டீர்களா!

எந்த முகப்பரு க்ரீம், பருக்களுக்கு சிகிச்சை யளிப்பதோடு வடுப் படியாமல் தடுக்கவும் உதவுகிறதோ அதுவே உங்களுக்கு உகந்தது:




எஸ்கமெல்*

முகப்பரு க்ரீம்



டாக்டர்கள் சிபாரிசு செய்யும்
முகப் பரு க்ரீம்


எச்சரிக்கையோடு இருக்கத் தவறினீர்களானால், பருக்கள் உங்கள் முகத்திலே கோரமான வடுக்களை விட்டுச்செல்லக்கூடும். (அரிப்புத் தோன்றினாலும் சரி) பருக்களைத் தொடாமலிருப்பதே நல்லது. அதோடு, எஸ்கமெல் உபயோகியுங்கள்: முகப் பருக்களுக்கு சிகிச்சையளிப்பதோடு, வடுப் படியாமலும் தடுத்திடும் முகப் பரு க்ரீம் அது.



தொடாதீர்கள்! அரித்தாலும், சொரிந்தாலும், தொட்டாலும் கூட முகப் பருக்கள் பரவும்.



சோப்புக் கொண்டு முகத்தின் மீது எஸ்கமெல் இடுங்கள்.



பருக்கள் பரவாத படி தடுத்து, சருமத்தில் எண்ணெய்ப்பசையும் பிசுக்குத் தன்மையையும் குறைத்து முகப்பருக்களை விரைவில் மறையச் செய்கிறது எஸ்கமெல்.

SK&F ஸ்மித், க்லைன் & ப்ரென்ச் தயாரிப்பு.
*எஸ்கமெல் என்பது ஒரு ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க் ஆகும்.

லின்டாஸ்-ESK-2-203 TM

ப்ரு: அதன் சுவையே தனி,
ஸ்ட்ராங்கானதில் அது பாங்கானது



சிறப்பான காபி
விரும்பும் அனைவருக்கும்

ப்ருவின் தனிப்பட்ட சுவை, அதற்கு நாடெங்கும் மகத்தான வரவேற்பு அளித்திருக்கிறது. மேலும் இன்ஸ்டன்ட் காபிகளில் இதற்கு முதன்மையான இடம் அளித்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் அதன் தனிப்பட்ட சுவையும் ஸ்ட்ராங்கான குணமும் வெகுவேகமாகப் பரவுகிறது. ஒவ்வொரு முறையும் ப்ருவின் சுவையும் மணமும் குணமும் உங்களுக்கு நிறைவையே தரும். இன்றே ப்ரு காபி பருகிப்பாருங்கள்.

தென்னிந்தியாவின் முதன்மையான இன்ஸ்டன்ட் காபி ப்ரு
வெகுவேகமாக நாடெங்கும் எல்லோரும் விரும்பும் காபியாகி வருகிறது.

OBM-4756A/3 TAM

மாற்றுத் திட்டம் மலரட்டும்!

கல்கி மலர் 36 இதழ் 28

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

பாகற்காய் என்ற பெயரைப் பரங்கிக்காய் என்று மாற்றி விட்டதால் கசப்புப் போய்விடாது.

கூட்டணி என்ற பெயரைக் கட்சி என்று மாற்றி விட்டதால் மக்கள் ஏமாந்துவிட மாட்டார்கள்.

பல்வேறு கட்சித் தலைவர்களும் தங்கள் தங்களுக்குள்ள தனிப் பிரபையை, முக்கியத்துவத்தை, செல்வாக்கை இழக்கத் தயாராக இல்லை; சுயநலம் குறுக்கிடுகிறது; தேச நலன் பின்னணிக்குப் போய் விட்டது என்பது மக்களுக்குப் புரியாமல் போகாது.

ஆளும் கட்சிக்கு மாறுபட்ட கொள்கைகளை உடைய ஒரே கட்சியாக இயங்கினாலன்றி ஆட்சிக்கு வர நேர்ந்தால் ஆளுக்கொரு பக்கமாக இழுக்க மாட்டார்களா என்ற சந்தேகம் மக்களிடம் எழவே செய்யும்.

அங்கம் வகிக்கும் கட்சிகளின் அமைப்புக்கள் மாறாமலேயே தேர்தல் உடன்பாடு கண்டு போட்டியிடும்போது கிடைக்கும் வரவேற்பு முழு மனத்துடன் இராது.

ஆனால் இந்த ஒரு காரணத்துக்காக மட்டும் மக்கள் ஜனதாக் கட்சியை ஒரேயடியாக ஒதுக்கி விடவும் மாட்டார்கள். இணைப்பு சாத்தியமில்லாதபோது இணக்கத்துக்காவது வழிவகுத்தார்களே என்று மகிழும் பலர், ஐக்கியப்படுவதற்கு முதல் படி இந்தக் கூட்டணி என்று கருதிப் போற்றவும் செய்வார்கள்.

நான்கு கட்சிகளும் சேர்ந்து தங்கள் அனைவருக்கும் சம்மதமான ஒரு குறைந்தபட்சத் திட்டத்தை வகுத்துக் கொண்டு செயலாற்றுவது சாத்தியமே.

ஆனால் இப்போதைக்கு — இதை எழுதும்வரை — நாம் காண்பது பொழுது விடிந்தால் பொழுது போனால் ஆட்சியை இவர்கள் குறை கூறுவதைத்தான்.

'எங்கள் தொண்டர்கள் அனைவரையும் இன்னும் விடுவிக்கவில்லையே, நாங்கள் எப்படிப் போட்டியிட முடியும்? தேர்தலைப் புறக்கணிக்கும்படியிருக்கும்' என்று மிரட்டுகிறார் ஜனசங்கத் தலைவர். தேர்தலிலிருந்து இவர்கள் ஒதுங்கினால் நஷ்டம் ஆளும் காங்கிரஸுக்கு அல்ல; ஜனதா கட்சிக்கும் அல்ல; பாரத ஜனநாயகத்துக்குத்தான்.

'நெருக்கடி நிலையை ரத்துப் பண்ணவில்லையே; அ.இ.ரே.யில் பிரசாரம் பண்ண எங்களுக்கு வாய்ப்பில்லையே; அரசியல் சாசன மாறுதல்களும் தேர்தல் சட்ட மாறுதல்களும் எங்கள் வேலையைக் கடினமாக்கி விட்டனவே' என்றெல்லாம் அங்கலாய்த்துக் கொண்டிருப்பதில் புண்ணியமில்லை. ஆளும் கட்சியைத்தான் நீங்கள் சர்வாதிகாரம் என்று வர்ணித்து விட்டீர்களே! அதை ஏற்பதானால் அவர்களிடம் வேறு எதை நீங்கள் எதிர்பார்க்க முடியும்?

'ஐயையோ! ஆட்சியினர் அநியாயம் பண்ணுகிறார்களே!' என்று புலம்புவதை விடுத்து, நீங்கள் பதவிக்கு வந்த பிறகு என்ன சாதிக்கப் போகிறீர்கள் என்பதை மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள். சீக்கிரம், நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது.

நெருக்கடி நிலைப் பிரகடனத்தை உடனடியாக ரத்து செய்வதுடன், அரசியல் சாசன மாறுதல்களால் குறைக்கப்பட்டுள்ள மக்கள் சுதந்திரங்களை முழுமையாகத் திரும்பவும் அவர்களுக்கு வழங்கப் போகிறீர்களா?

குறைந்தபட்ச வோட்டைப் பெற்றே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற வாய்ப்பு அளிக்கிற இந்தத் தேர்தல் முறையை மாற்றி யமைக்கப் போகிறீர்களா? விகிதாசாரப் பிரதிநிதித்வம் போன்ற மேனாடுகளில் அமுலிலிருக்கும் சிறந்த முறைகளை இங்கு கொண்டு வரப் போகிறீர்களா?

லஞ்ச ஊழலை ஒழிக்க உங்கள் திட்டம் என்ன? உயர் மட்டங்களில் நிலவும் லஞ்ச ஊழல்களை விசாரிக்க 'அம்புட்ஸ்மான்' போன்ற அமைப்பு உங்கள் ஆட்சியில் உருவாகுமா?

வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதையே முதல் நோக்கமாகக் கொண்டு திட்டங்களை நீங்கள் வகுப்பீர்களா?

உற்பத்தியைக் குறைந்த பட்சம் பதினைந்து சதவீதம் அதிகரிக்கச் செய்து

பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுவதாய் உத்தரவாதம் அளிப்பீர்களா?

அ. இ. ரேடியோவையும் டெலிவிஷனையும் சுதந்திரமாக இயங்கும் அரசுச் சார்பற்ற தனி நிர்வாகத்திடம் ஒப்படைப்பீர்களா?

ரேடியோ லைசென்ஸுக் கட்டணத்தை ஒழித்துக் கட்டுவீர்களா?

ஏட்டுக் கல்வி பெற்று வேலைக்குத் திண்டாடும் நிலை மாறத் தொழில் கல்விக்கு முக்கியத்துவம் தருவீர்களா?

உயர்ந்து கொண்டே போகும் விவசாய நில வரிகளைக் கணிசமாகக் குறைப்பதுடன் சிறிய நிலச்சுவான்தார்களுக்கு உள்ள பல தொல்லைகளை நீக்குவீர்களா?

அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள் நன்கொடை அளிப்பதற்குத் தடை விதிப்பதோடு தேர்தல்களில் பணத்தின் செல்வாக்கு விளையாடாமல் இருக்க வகை செய்வீர்களா?

விலைவாசிகள் குறையும் என்று காரண காரியங்களுடன் உத்தரவாதம் அளிப்பீர்களா?

அயல்நாட்டுக் கொள்கைகளைப் பொறுத்த வரையில் கம்யூனிஸ்ட் ருஷ்யாவுடன் நட்புறவை விட்டுக் கொடாத அதே நேரத்தில் அதன் மறைமுகமான செல்வாக்குக் குறைய வழி வகுப்பதாகச் சொல்வீர்களா?

இவற்றிலும் இவைபோன்ற இன்னும் பல பிரச்னைகளிலும் உங்கள் கருத்தை அறிய மக்கள் காத்திருக்கிறார்கள். குறைந்தபட்சக் கொள்கை ஒருமைப்பாடு, அதிகபட்சமாக எத்தனை அம்சங்களில் உள்ளது என்பதை உங்கள் தேர்தல் அறிக்கை உணர்த்தட்டும்.

தி. மு. க. துணை வேண்டாம்!

சுதந்திரக் கட்சி, ஜனதா கூட்டணியில் அங்கம் வகிக்கத் தான் தயாராக இருப்பதாகக் கூறியதோடு நில்லாமல் தி. மு. க. வையும் கூட்டணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளது!

இதைவிட வேடிக்கை, பாரதிய லோக தளம், தி. மு. க.வை ஜனதா கூட்டணிக்கு வரவேற்கிறது; சுதந்திரக் கட்சியை அனுமதிக்கலாகாது என முட்டுக்கட்டை போடுகிறது!

'அடடா, ✶ எப்பேர்ப்பட்ட அரசியல் ஞானம்!' என்று வியந்து போகிறோம்!

நல்லவேளை, ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் திரு பி. ராமச்சந்திரன் — இந்த விநாடி வரை — அர்த்தமுள்ள வார்த்தைகளைப் பேசி வருகிறார். சுதந்திரக் கட்சியை வரவேற்றவர், தி. மு. க.வுடன் கூட்டுச் சேருவது பற்றித் தம்மிடம் திட்டம் ஏதுமில்லை என்று சொல்லியிருக்கிறார்.

கொள்கை வேறுபாடுகள் ஒருபுறமிருக்க, ஒன்று, இரண்டா எத்தனை குற்றச்சாட்டுகள் தி.மு.க. தலைமை மீது! ஸர்க்காரியா விசாரணையிலேயே இருபத்தெட்டு. இவை போதாவென்று ஸி. பி. ஐ. வழக்குகள், தனி நபர் தொடுத்த வழக்குகள் வேறு.

குற்றச்சாட்டுக்கள் எதுவும் இன்னும் நிரூபணமாகவில்லை என்பது உண்மையே. ஆனால் இத்தனை பழிகளைச் சுமந்து கொண்டிருக்கும் ஒரு தலைமை, சிறிதளவேனும் ஜனநாயகப் பண்பு பெற்றிருந்தால் என்ன செய்யும்? தலை வணங்கித் தளபதிகளிடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைக்கும். களங்கம் தீர்ந்த பின் மீண்டும் தலைமை ஏற்பதாகக் கூறும். ஆனால் தலை போனாலும் தலைமைப் பதவியை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பவர்களிடம் பேசுவதற்கு என்ன இருக்கிறது? இத்தகையவர்களுடன் கூட்டுச் சேருவது பற்றி நினைப்பதே குற்றம்.

இருபத்தெட்டுக் குற்றச்சாட்டுகளில் எட்டின் மீது விசாரணை முடிந்து, ஸர்க்காரியா அறிக்கை அரசிடம் சென்று விட்டது. தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன் அந்த அறிக்கை பத்திரிகைகளில் பிரசுரமாகி அது தி.மு.க. தலைமைக்குப் பாதகமாகவும் விளங்குமானால்....?

ஜனதா கட்சிக்குச் சொல்லிக் கொள்கிறோம். தி.மு.க. தலைமை போகுமிடமெல்லாம் சேரும் கூட்டத்தைக் கண்டு ஏமாறு கிறீர்கள்.

தி.மு.க.வைத் துணை சேர்த்துக்கொண்டு ஜனதா கட்சி வெற்றி பெறுவதை விட, ஆளும் காங்கிரஸுக்குத் தமிழகத்தை விட்டுக் கொடுத்து விடுவது எவ்வளவோ மேல்!

ராஜாஜி சிந்தனை

சாசுவதமான நல்வழி

உபநிஷத்துக்களின் முக்கிய கருத்து என்னவென்றால், இவ்வுலகத்தில் பொருள் சம்பாதித்துப் பெறக்கூடிய போகங்களினாலும், அக்காலத்தில் முற்றிலும் உண்மை என்று கருதப்பட்ட வேதத்தில் சொல்லிய வேள்விகளைச் செய்து அவைகளின் பயனாக அடையும் சுவர்க்க போகங்களினாலும்கூட, மனிதன் நிலையான சுகம் பெறமாட்டான்; ஆத்ம ஞானமே நம்மைப் பரம்பொருளுடன் ஒன்றுபடுத்திக் கரும பாசத்திலிருந்து விடுவிக்கக் கூடியது. அதுவே உலகத்துக்குப் பழுதற்ற சாசுவதமான நல்வழி என்று போதிப்பதாகும். இந்த உண்மையைப் படிப்படியாக உபதேசிக்கும் நோக்கத்துடன் சொல்லப்பட்ட உபநிஷத்து மந்திரங்கள் சில இடங்களில் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றும். ஆனால் படிப்படியான உபதேச முறையைக் கவனத்தில் வைத்துப் பூரண முறையில் ஆராய்ந்தால், முரண் நீர்ந்து பொருள் விளங்கும்.

— ''அச்சமில்லை'' என்ற நூலில்



கிஸான் சின்னத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு கிஸான் சின்னத்தில் வோட் போடுங்கள்!
தீபம் சின்னம் ஞாபகத்தில் கொண்டு கிஸான் சின்னத்தில் வோட் போடுங்கள்!
குடிசை சின்னம் மனதில் கொண்டு கிஸான் சின்னத்தில் வோட் போடவும்
ராட்டை சின்னம் மறக்க வேண்டாம். கிஸான் சின்னத்தில் வோட் போடவும்!
கிஸான்சின்னம் மறக்காமல் ராட்டை சின்னத்தில் வோட் போடுங்கள்!
பாரதிய லோக் தள்
ஜனசங்கம்
சோஷலிஸ்ட்
ஸ்தாபன காங்கிரஸ்
ஜனதா கட்சி
இந்திரா காங்கிரஸ்
ஐந்து அம்சம்... ஐந்து அம்சம்... ஐந்து அம்சம்
தேர்தல்
சஞ்சய்
அசோக் மேத்தாவைப் பார்த்தேன்!... பிலு மோடியைப் பார்த்தேன்!... வாஜ்பாயைப் பார்த்தேன்!... பட்நாயக்கைப் பார்த்தேன்! அப்புறம்...
அப்புறம் சர்க்காரியா அறிக்கையைத் தான் பார்க்கணும்! அது ஒன்று தான் பாக்கி!

ஆக்கசக்தி நெருக்கடியினால் ஏற்பட்ட சங்கடமான நிலை டாடா ஸ்டீலிலுள்ள எங்கள் இளம் நிபுணர்களுக்கு அதைத் திறம்பட சமாளிக்கும் ஆற்றலை அளித்தது.

ஆக்கசக்தி உபயோகத்தில் சேமிப்பு பற்றிய தீவிரமான ஆராய்ச்சிகள் பல புது வழிகளைப் புலப்படுத்தியுள்ளன. கம்பஸ்சன் ஏர் கண்ட்ரோல் ஸிஸ்டம்களைப் பல தொழிலிடங்களில் நிறுவி வியர்த்தமாகும் காஸினால் ஏற்படும் உஷ்ண நஷ்டத்தைக் குறைக்க வழி செய்யப்பட்டுள்ளது; தவிர எரிபொருள் தரமும் சீராக்கப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் வேஸ்ட்ஹீட் ரெகூப்பரேட்டர் ஸிஸ்டம்கள் மீண்டும் நிறுவப்பட்டிருப்பதோடு அவற்றின் செயலாற்றலை உச்சநிலைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஃபர்னஸ்களில் இன்ஸுலேஷன் செய்யப்பட்டதோடு அவற்றில் காலத்திற்கேற்றவாறு புதுமைகள் செய்யப்பட்டுள்ளன. உச்சநிலையில் மறு-உபயோக முறைகளின் பயனாக குளிர்ச்சிக்கான தண்ணீர் பம்ப் செய்வது குறைக்கப்பட்டுள்ளது.

மொத்த உற்பத்திச் செலவில் மூன்றில் ஒரு பங்கு ஆக்கசக்திக்காகச் செலவிடும் தொழிற்துறையில் இந்த சேமிப்புகள் மிக மதிப்புள்ளவையாகும். காரணம், தாங்கமுடியாத ஆக்கசக்திச் செலவின் பளுவை சமாளிக்க இவை உதவுகின்றன.

இளமை மிடுக்கோடு இருப்பவர்கள் என்றென்றும் புதுப்புது சோதனைகளை வரவேற்பார்கள்.



டாடா ஸ்டீல்



"ஆறுகால்" ஸ்தோத்திரம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி
காமகோடி சங்கராசாரிய
ஸ்வாமிகள்

இப்போது முதல் ச்லோகத்திலிருந்து ஆரம்பிக்கலாம். இந்த முதல் ச்லோகத்தில் எதை வேண்டிப் பிரார்த்தனை பண்ண வேண்டும் என்று நமக்கு ஆசார்யாள் சொல்லிக் கொடுக்கிறார்.

பகவானை எதற்காகப் பிரார்த்தனை பண்ண வேண்டும் என்பதில் அபிப்பிராய பேதம் உண்டு.

இந்த லோக வாழ்க்கையில் நமக்கு எண்ணி முடியாத கஷ்டங்கள், சிரமங்கள், கிலேசங்கள், துக்கங்கள் ஏற்படுகின்றன. சரீரக் கஷ்டம், மனச் சஞ்சலம், பண முடை, பயம், அவமானம் இப்படியாகக் கணக்கே யில்லாமல் அவதிப்படுகிறோம். இவை தீருவதற்கு வேறு வேறு வழிகளைத் தேடுகிறோம். உடம்பு சரியில்லை என்றால் டாக்டரிடம் போகிறோம். பணக்கஷ்டம் என்றால் கடன் கொடுக்கக் கூடியவர்களிடமும் போகிறோம். ஆவிகள் சேஷ்டை என்றால் மாந்திரிகரிடம் போகிறோம். பலவிதமான பிரச்னைகள் தீர ராஜாங்க அதிகாரிகளிடம் போகிறோம். இப்படிப் பல பேரிடம் போனாலும், இந்தக் கஷ்டங்கள் தீர பகவானையும் பிரார்த்தனை பண்ணிக் கொள்கிறோம். நாம் கஷ்டம் தீர யாரைத் தேடிப் போகிறோமோ அவர்கள் நமக்கு அநுகூலமாக இருப்பதற்கு பகவானைப் பிரார்த்திக்கிறோம். டாக்டர் மருந்துதான் கொடுப்பார். அது நமக்குப் பலிக்க வேண்டுமே! இதற்காக பகவானை வேண்டிக் கொள்கிறோம். ஒருத்தர் சகாயம் செய்வார் என்று அவரிடம் போகிறோம். ஆனால் போகிற வழியிலேயே நமக்கு ஒரு விபத்து வந்து விட்டால் என்ன பண்ணுவது? இதற்காகப் பிரார்த்தனை பண்ணுகிறோம்.

இந்த மாதிரியெல்லாம் பிரார்த்தனை பண்ணுவது தப்பு என்று சில பேருக்கு அபிப்பிராயம். நம் கர்மாவுக்காகத்தான் கஷ்டம் வருகிறது. பகவானேதான் இந்தக் கஷ்டங்களைக் கொடுத்துத் தண்டித்து, கர்மாவைத் தீர்க்கிறான். அதனால் இந்த மாதிரி லௌகிக விஷயங்களுக்குப் பிரார்த்தனை பண்ணவே கூடாது. பகவானுக்கே நமக்கு எதை, எப்போது, எப்படித் தரவேண்டும் என்று தெரியும். அதனால் அவனை எதுவும் பிரார்த்திக்கவே கூடாது. அவனை ஸ்மரித்தால் அது பேரானந்தமாக இருக்கிறதல்லவா? இந்த ஆனந்தம் ஒன்றுக்காக மட்டுமே ஸ்மரிக்க வேண்டும். பக்தி பண்ணுவதற்குப் பலன் பக்தியில் கிடைக்கிற மன நிறைவேதான்; இந்தப் பெரிய நிறைவை விட்டு விட்டு, பக்தியைச் சின்னச் சின்ன தாற்காலிக நிறைவுகளுக்கு ஓர் உபாயமாக வைத்துக் கொள்வது ரொம்பவும் தப்பு. ஆகையால், அது வேண்டும், இது வேண்டும் என்று வேண்டவே கூடாது. எதற்காவது பிரார்த்தனை பண்ணலாமானால் அது நம்முடைய ஆத்ம பரிசுத்தி ஒன்றுக்காகத்தான் — என்று இப்படிச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

பகவானே சொல்கிற வாக்குதான் நமக்குப் பெரிய பிரமாணம். கீதையில் இவ்விஷயமாக ஸ்வாமி என்ன சொல்கிறார்? (தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

அத்தியாயம் 3

மாரப்பன் புன்னகை

விக்கிரமன் செண்பகத் தீவில் இருந்த காலத்தில் தாய்நாட்டையும் தாய் நாட்டில் உள்ளவர்களைப் பற்றியும் அடிக்கடி சிந்தனை செய்வான். அருள்மொழி, சிவனடியார், பொன்னன், வள்ளி, காஞ்சி நகர்ப் பெண் ஆகியவர்கள் அவனுடைய உள்ளத்தில் இடைவிடாமல் தோன்றுவார்கள். அவர்களுக்கிடையில், மாரப்ப பூபதியும் சில சமயம் அவனுடைய நினைவுக்கு வருவான். அப்போது விக்கிரமனுடைய உள்ளமும் உடலும் அருவருப்பினாலும் அவமானத்தினாலும் சுருங்கிப் போகும். சித்தப்பா தன்னை வஞ்சித்து நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டாரென்று சிராப்பள்ளி மலையில் அவன் புலிக் கொடியை உயர்த்த முயன்ற அன்றைத் தினமே வெளியாகி விட்டது. அந்த முயற்சிக்கு மாரப்ப பூபதி பூரண உதவி செய்வதாய் வாக்களித்திருந்ததற்கு மாறாக அவர் அச்சமயம் அருகில் வராமலே இருந்து விட்டது மாத்திரமில்லை; — அவரே முன்னதாகப் பல்லவ சேனாதிபதிக்குத் தகவல் தெரிவித்தவர் என்பதும் அவனைச் சிறைப்படுத்திக் காஞ்சிக்குக் கொண்டு போன வீரர்களின் பேச்சிலிருந்து தெரிந்து விட்டது.

ஆகையால், மாரப்ப பூபதியைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் விக்கிரமனுடைய உள்ளம் கசந்ததோடு, நாவும் கசந்தது. சோழ வம்சத்தில் இப்படிப்பட்ட மனிதர் ஒருவரும் பிறந்ததை எண்ணி எண்ணி அவன் மனம் குன்றினான்.

இவ்வாறு அவனுடைய அருவருப்புக்கும் அவமான உணர்ச்சிக்கும் காரணமாயிருந்த மாரப்ப பூபதி இப்போது சற்றும் எதிர்பாராத சமயத்தில் திடீரென்று எதிரில் நின்றதும், விக்கிரமனுக்கு எப்படி இருந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

இரத்தின வியாபாரியின் முகத்தில் தோன்றிய திகைப்பை மாரப்ப பூபதி கவனித்தவனாய், ''ஏனய்யா இப்படி மிரளுகிறீர்? ஏதோ திருடனைப் பற்றிப் பேச்சு நடந்ததே? ஒருவேளை நான்தான் திருடன் என்று நினைத்துக் கொண்டீரோ?'' என்று சொல்லி மீண்டும் ஏளனச் சிரிப்புச் சிரித்தான்.

இதற்குள் விக்கிரமன் ஒருவாறு சமாளித்துக் கொண்டு விட்டான்.

''இந்த நாட்டுத் திருடர்கள் எப்படி இருப்பார்கள் என்று எனக்குத் தெரியாது. ஐயா! நான் இந்த நாட்டான் அல்ல. ஆனால் நரசிம்ம சக்கரவர்த்தியின் ஆட்சியில் திருட்டுப் புரட்டே கிடையாதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையால் நீர் திருடராயிருக்க முடியாது!'' என்றான்.

''அசலூர்க்காரனாயிருந்தாலும், அகம்பாவத்தில் மட்டும் குறைச்சல் இல்லை. நீர் எந்தத் தேசம் ஐயா? உமது பெயர் என்ன? எதற்காக இந்த நாட்டுக்கு வந்திருக்கிறீர்?'' என்று பூபதி கேட்டான்.

''உமக்குத் தெரிந்தேயாக வேண்டும் என்றால் சொல்கிறேன். என் பெயர் தேவசேனன்; இரத்தின வியாபாரம் செய்ய வந்திருக்கிறேன்.''

''ஓகோ! இரத்தின வியாபாரம் செய்வதற்கா வந்திருக்கிறீர்? அப்படியா சமாசாரம்? இரத்தின வியாபாரி ஒவ்வொரு கல்தச்சனைக் கூப்பிட்டு எதற்காக இரகசியம் பேச வேண்டும்? பல்லவ நாட்டிலிருந்து சிற்பிகளைக் கலைத்து அழைத்துப் போகிறவர்களுக்கு நரசிம்ம சக்கரவர்த்தி என்ன தண்டனை விதிப்பார், தெரியுமா?''

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

''எனக்குத் தெரியாது, ஐயா! நான்தான் அயல் நாட்டான் என்றேனே! இவ்வளவு விசாரணை புரியும் நீர் யார் என்று எனக்குத் தெரியவில்லையே?''

மாரப்ப பூபதி கடகட வென்று சிரித்தான். ''நான் யார் என்று தெரியவில்லையா? நல்லது; வெண்ணாற்றங் கரைப் போர்க்களத்தில் உயிரை விட்ட பார்த்திப மகாராஜாவுக்கு உடன்பிறந்த





சகோதரன் நான். தற்சமயம் சோழ நாட்டின் பிரதம சேனாதிபதி!...''

இப்படிச் சொல்லியபோது இரத்தின வியாபாரியின் முகத்தில் ஏதாவது மாறுதல் தெரிகிறதா என்று மாரப்பன் உற்றுப் பார்த்தான். ஒன்றும் தெரியாமல் போகவே, ''என்னுடைய கீர்த்தி உம்முடைய காதுக்கு எட்டியிராவிட்டாலும், வீராதி வீரரும் சூராதி சூரருமான பார்த்திப மகாராஜாவின் புகழ் கண்டிப்பாய் எட்டி யிருக்க வேண்டுமே? அந்தப் பெயரைக் கூடக் கேட்டதில்லையா? அப்படி எந்தக் கண்காணாத தேசத்து மனுஷர் ஐயா நீர்?'' என்று கேட்டான்.

இரத்தின வியாபாரி சற்று யோசிப்பவன் போல் காணப்பட்டான். பிறகு அவன் மாரப்பனை ஏறிட்டுப் பார்த்து, ''ஆமாம்; பார்த்திப மகாராஜாவின் புகழை நிச்சயம் கேள்விப் பட்டிருக்கிறேன். அவருடைய புதல்வர் விக்கிரமர்தான் இப்போது எங்கள் செண்பகத் தீவுக்கு அரசர். நான் அவருடைய பிரஜை. ஆகையால், பார்த்திப மகாராஜாவைப் பற்றிக் கெடுதலாகவோ பரிகாசமாகவோ எதுவும் என் காது கேட்கச் சொல்ல வேண்டாம்!'' என்றான்.

மாரப்பனுடைய முகத்தில் இப்போது சிறிது திகைப்புக் காணப்பட்டது. ஆயினும் அவன் உடனே சமாளித்துக் கொண்டு கூறினான்: ''ஓஹோ! அவ்வளவு ராஜ பக்தியுள்ள பிரஜையா நீர்? உம்முடைய முகத்தில் விழித்தாலே புண்ணியம் ஐயா! அதனால்தான் உம்மை விட்டுப் போகவே மனம் வரமாட்டேன் என்கிறது. ஆமாம், உமது பெயர் என்னவென்று சொன்னீர்?''

''தேவசேனன்.''

''தேவசேனன் — ஆகா! என்ன திவ்யமான பெயர்! — இவ்வுலகில் பெயர், புகழ் எல்லாம் பொய் என்று சொல்வது எவ்வளவு பிசகு? உம்முடைய பெயருக்காகவே உம்மிடம் இரத்தினம் வாங்கலாம். இருக்கட்டும்; கோமகள் குந்தவி தேவி இரத்தினம் வாங்குவதற்குத்தானே உம்மை அரண்மனைக்கு வரச்சொல்லி யிருக்கிறாள்?''

''கோமகள் குந்தவி தேவியா? யாரைச் சொல்கிறீர்?'' என்று இரத்

தின வியாபாரி உண்மையான வியப்புடனே கேட்டான்.

''இப்போது பல்லக்கில் போனாளே, அந்தத் தேவியைத்தான்.''

''அவள் குந்தவிதேவியின் தோழி மாதவி அல்லவோ?''

''ஓஹோ! உன்னிடம் அப்படி ஒரு பொய் சொல்லி வைத்தாளாக்கும்? அப்பாவுக்கு ஏற்ற பெண்தான். நீ இந்தத் தேசத்து மனுஷன் அல்லவென்று நிச்சயமாய்த் தெரிகிறது. அல்லது இந்தத் தேசத்தை விட்டு வெளியேற்றப்பட்டவனாயிருக்க வேண்டும்...''

இந்த இடத்தில் மாரப்ப பூபதி தனக்குத்தானே பேசிக் கொண்டான். பிறகு திடீரென்று தேவசேனனை உற்றுப் பார்த்து, ''ஆமாம்; உங்கள்



தேசத்து ராஜா விக்கிரமன் என்று சொன்னீரே? அவனுடைய தாயார் அருள்மொழி ராணிக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி அவனுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

இந்தக் கேள்வியினால் மாரப்ப பூபதி என்ன எதிர்பார்த்தானோ, அது சித்தியாகிவிட்டது. இத்தனை நேரமும் மாறாமல் பதுமை போலிருந்த இரத்தின வியாபாரியின் முகம் மாறிவிட்டது. அளவிலாத பீதியுடனும் ஆத்திரத்துடனும், ''என்ன? அருள்மொழி ராணிக்கு என்ன?'' என்று அவன் அலறிக்கொண்டு கேட்டான்.

மாரப்பன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

அதே சமயத்தில் அவர்களுக்குப் பின்னால் வெகு சமீபத்தில் ஒரு பெரும் கோலாகல கோஷம் எழுந்தது. ''வாதாபியை அழித்து வாகை சூடிய நரசிம்ம பல்லவேந்திரர் வாழ்க!'' ''ஜய விஜயீ பவ!'' என்று ஏக காலத்தில் அநேகம் குரல்களிலிருந்து வாழ்த்தொலிகள் கிளம்பி ஆரவாரித்தன. ''சக்கரவர்த்தி வருகிறார்'', ''சக்கரவர்த்தி வருகிறார்'' என்று பலர் பேசுவது காதில் விழுந்தது.

அத்தியாயம் 4

வழிப்பறி

சக்கரவர்த்தி கம்பீரமான பட்டத்து யானை மீது ஆரோகணித்து வந்தார். அவர் நெடுங் காலத்துக்குப் பிறகு மாமல்லபுரத்துக்கு வந்தபடியாலும், முன்னறிவிப்பு இல்லாமல் எதிர்பாராத விதமாக வந்தபடியாலும் நகரவாசிகள் பட்டத்து யானையைச் சூழ்ந்து கொண்டு அளவில்லாத ஆரவாரங்களைச் செய்தார்கள்.

இந்த ஆரவாரம் காதில் விழுந்ததும் மாரப்ப பூபதி குதிரையைச் செலுத்திக்கொண்டு அவசரமாக அங்கிருந்து நழுவிச் சென்றான். தேவசேனன் வீதி ஓரமாக ஒதுங்கி நின்றான். அவன் நெஞ்சு பட படவென்று அடித்துக் கொண்டது. சக்கரவர்த்தியைத் தான் பார்க்கக் கூடாதென்று பல்லைக் கடித்துக்கொண்டு வேறு திசையை நோக்கி நின்றான். ஆனால் பட்டத்து யானை அவன் நின்ற இடத்துக்கு நேராக வீதியில் சென்றபோது அவனுடைய உறுதி குலைந்தது. சோழ வம்சத்தின் பரம வைரியானாலும், உலகெல்லாம் புகழ் பரப்பிய வீராதி வீரரல்லவா நரசிம்ம சக்கரவர்த்தி? அவனை அறியாமலே அவனுடைய பார்வை அவர் மீது சென்றது. அச்சமயத்தில் சக்கரவர்த்தியும் அவன் நின்ற பக்கமாகத் தம்முடைய கண்ணோட்டத்தைச் செலுத்தினார். அந்தக் கண்ணோட்டத்தின்போது இரத்தின வியாபாரியின் முகமும் ஒரு விநாடி நேரம் அவருடைய பார்வைக்கு இலட்சியமாயிற்று. ஆனால், அப்படிப் பார்க்கும்போது அவருடைய கண்களில் தினையளவேனும் மாறுதல் காணப்படவில்லை. கண்ணிமைகள் சிறிது மேலே போகக்கூட இல்லை. அவனுடைய முகத்தைத் தாண்டிக் கொண்டு அவருடைய பார்வை அப்பால் சென்றுவிட்டது.

பட்டத்து யானையும் மேலே சென்றுவிட்டது. இரத்தின வியாபாரி பெரும் ஆபத்திலிருந்து தப்பியவன் போல் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். ஜனக் கூட்டம் எல்லாம் போகும் வரைக்கும் சற்று நேரம் அங்கேயே நின்று அவன் யோசனை செய்து கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் பெருங் குழப்பம் உண்டாயிற்று. முக்கியமாய் மாரப்ப பூபதியை அங்கே சந்தித்ததை எண்ணிய போது நெஞ்சம் துணுக்கமுற்றது. சித்தப்பாதான் இப்போது சோழ நாட்டுச் சேனாபதியாமே! அவருடைய துரோகத்துக்குக் கூலி கிடைத்து விட்டதாக்கும்! தன்னிடம் ஏன் அவ்விதம் பேசினார்? ஒருவேளை அடையாளம் கண்டு கொண்டிருப்பாரோ? — அந்தப் பெண் உண்மையில் சக்கரவர்த்தியின் குமாரி தானோ? அப்படியானால் தன்னிடம் எதற்காகப் பெயரை மாற்றிக் கூறினாள்? அரண்மனைக்கு வரும்படி ஏன் வற்புறுத்திச் சொன்னாள்? நாலு புறத்திலும் தன்னை அபாயங்கள் சூழ்ந்திருப்பதாகத் தேவசேனனுக்குத் தோன்றியது. இனிமேல் மாமல்லபுரத்தில் இருந்தால் விபரீதங்கள் நேரலாம் என்று நினைத்தான். மேலும், அருள்மொழித் தேவியைப் பற்றி மாரப்ப பூபதி மர்மமாகச் சொன்னதை நினைத்தபோது அவனுடைய நெஞ்சு துடித்தது. முதலில் உறையூருக்குப் போய் அன்னையைப் பார்க்க வேண்டும். மற்ற காரியங்கள் எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

மாமல்லபுரத்தில் ஒரு குதிரையை வாங்கிக் கொண்டு உறையூருக்குப் போகலாம் என்ற உத்தேசம் விக்கிரமனுக்கு இருந்தது. அந்த உத்தேசத்தை இப்போது கை விட்டான். குதிரை வாங்குவதற்குப் பிரயத்தனம் செய்தால் அதனால் என்ன விளையுமோ, என்னமோ? மாரப்பன் மறுபடியும் தன்னைப் பார்த்து விட்டால், அவனிடமிருந்து தப்புவது கஷ்டமாகலாம். நல்லவேளையாக அந்தச் சமயத்தில் சக்கரவர்த்தி வீதியிலே

பப்பு ஃபீடரின் குணச்சிறப்பைக் கண்டறிய தேவை– அன்னையின் கண்ணோட்டம்


* தனிப்பட்ட அமைப்பு. தாய்ப்பால் குடிப்பதைப் போன்ற மகிழ்ச்சி குழந்தைக்குக் கிடைப்பதுடன், வயிற்றில் காற்றும் குறைவாக புகுகிறது.

* சரளமாக பால் பாய்ந்து வருகிறது. எனவே குழந்தை எளிதாக பால் குடிக்கிறது.

* புத்தம்புதிய ரப்பரால் ஆனது. எனவே அடிக்கடி கொதிக்க வைத்தாலும், சீக்கிரம் தொய்ந்து போகாது. துர்நாற்றம் வீசாது.

* ஒவ்வொரு நிப்பிளிலும் பப்பு முத்திரை— தரத்துக்கு உத்தரவாதம்.

* இரண்டு திணுசுகள்—ஊடுருவி பார்க்கக் கூடியது மற்றும் வார்த்தெடுக்கப்பட்டது.



துடிப்பான குழந்தைப் பருவத்தின் இனிய துணை



பப்பு

ஃபீடர் மற்றும் நிப்பிள்

U-P-7 TAM

வந்தார்! அருள்மொழியைப் பற்றி மாரப்பன் ஏதோ சொன்னதும் தான் பதறிவிட்டது விக்கிரமனுக்கு ஞாபகம் வந்தது. ஒருவேளை தன்மீது சந்தேகம் கொண்டு உண்மையைக் கண்டுபிடிப் பதற்காகத்தான் அப்படி வஞ்சகமாகப் பேசினாரோ? இன்னும் ஒரு விநாடிப் பொழுது சக்கரவர்த்தி வராதிருந்தால் சித்தப்பா தன்னைக் கண்டுபிடித்திருப் பார்! கண்டுபிடித்து என்ன செய் திருப்பாரோ? — மாரப்ப பூபதிதான் இப்போது சோழ நாட்டுச் சேனாபதி என் பது மறுபடியும் விக்கிரமனுக்கு நினைவு வந்தபோது அவனை என்னவோ செய் தது. மாமல்லபுரத்துக்கு அவர் எதற் காக வந்திருக்கிறார்? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார்? எதுவா யிருந்தாலும், அவர் இப்போது இங்கே இருக்கும்போதே, தான் உறையூருக்குப் போய் அன்னையைப் பார்த்து விட்டுத் திரும்பிவிட வேண்டும். இன்றைக்கே இவ்விடமிருந்து கிளம்பிவிட வேண்டும். வழியிலே எங்காவது குதிரை கிடைத் தால் வாங்கிக் கொள்ளலாம்.

இவ்விதம் தீர்மானம் செய்து கொண்டு விக்கிரமன் — அவனுடைய உண்மைப் பெயராலேயே இனி நாம் அழைக்கலாம் — தான் தங்கியிருந்த சத் திரத்தை நோக்கி விரைந்து சென்றான். போகும்போது முன்னும் பின்னும் அடிக் கடி பார்த்துக் கொண்டான். குதிரைச் சத்தம் கேட்டால் உடனே கூட்டத்தில் மறைந்து கொள்வான். இவ்விதம் சென்று சத்திரத்தை அடைந்ததும், அங்கு வழிப் பிரயாணத்துக்காகத் தான் சேகரித்து வைத்திருந்த பொருள்களை எடுத்துக் கொண்டு மூட்டைகளைச் சுமந்து வருவதற்காகக் குள்ளனையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான். தான் சத்திரத்துக்குள்ளே சென்றிருந்த போது, குள்ளன் வெளியில் காத்திருந்த ஒரு மனிதனிடம் சமிக்ஞை மூலம் ஏதோ பேசியதை அவன் கவனிக்கக் கூடவில்லை.

விக்கிரமன் குள்ளனுடன் மாமல்ல புரத்தை விட்டுக் கிளம்பினபோது அஸ்த மிக்க ஜாமப் பொழுது இருக்கும். நகர வாசலைக் கடந்து அவன் வெளியே ராஜபாட்டையில் நடக்க ஆரம்பித்த சமயம் மாலைக் கதிரவனின் கிரணங்கள் பசும்பொன் நிறத்தை அடைந்திருந்தன.

அந்தக் காலத்தில் மாமல்லபுரத்தி லிருந்து காஞ்சி நகருக்கும், காஞ்சியி லிருந்து உறையூருக்கும் ராஜ பாட் டைகள் சென்றன. மாமல்லபுரத்தி லிருந்து காஞ்சி செல்லும் பாதையானது எப்போதும் ஜனங்களின் போக்கு வர வினால் ஜே ஜே என்று இருக்கும். குதி ரைகள் மீதும் யானைகள் மீதும் பல்



குடும்பம்

ஒரு சமயம் அமெரிக்க ஜனாதிபதி ஆபிர காம் லிங்கன் தம்முடைய குடும்ப பரம் பரையைப் பற்றிப் பேச்சு எழுந்ததும், "என்னுடைய பாட்டனார் யார் என்பதை நான் அறியேன். ஆனால் நான் கவலைப் படுவதெல்லாம் அவருடைய பேரன் எத் தகையவனாக இருக்க வேண்டும் என்பது பற்றியே" என்றார்.

"இனிய கதைகள்" என்ற நூலிலிருந்து
நன்றி: 'குமரி மலர்'

லக்குகளிலும் ஜனங்கள் போய்க் கொண்டே இருப்பார்கள். அந்த ராஜ பாதை நெடுகிலும் ஒன்றுக் கொன்று வெகு சமீபத்தில் ஊர்கள் உண்டு. கோவில்களும், மடாலயங்களும், சத்தி ரங்களும், தண்ணீர்ப் பந்தல்களும், பல விதக் கடைகளும், பாடசாலைகளும் நெடுகிலும் காணப்படும். இதனாலெல் லாம் வெளி நாடுகளிலிருந்து புதிதாக வருகிறவர்களுக்கு மாமல்லபுரத்தி லிருந்து காஞ்சி வரையில் ஒரு பெரிய நகரந்தானோ என்று தோன்றும்.

இத்தகைய ராஜ பாட்டையிலிருந்து இடையிடையே பிரிந்து சென்ற குறுக் குப் பாதைகளும் ஆங்காங்கு இருந் தன. இந்தக் குறுக்குப் பாதைகளில் ஒன்று மாமல்லபுரத்துக்குக் கொஞ்ச தூரத்துக்கப்பால் பிரிந்து, அடர்ந்த காடுகளின் வழியாகச் சென்றது. மாமல் லபுரத்திலிருந்து நேரே உறையூருக்குப் போக விரும்புவோர் இந்தக் குறுக்குப் பாதை வழியாகப் போனால் காஞ்சிக்குக் கொஞ்ச தூரம் தெற்கே உறையூர் ராஜபாட்டையை அடையலாம். குறுக்கு வழியில் செல்வதால் மூன்று காததூரம் அவர்களுக்கு நடை மீதமாகும்.

ஆனாலும், அந்தக் காட்டுப் பாதை வழியாக ஜனங்கள் அதிகமாகப் போவ தில்லை. முக்கியமாக, இரவில் யாருமே போக மாட்டார்கள். அந்தப் பாதை யில் சில இடங்களில் துஷ்ட மிருகங் களின் தொல்லை அதிகமா யிருந்தது. இது மட்டுமல்லாமல், பிரசித்தமான பத்திரகாளி கோயில் ஒன்றும் அந்த வழியில் இருந்தது. சக்கரவர்த்தியின் கட்டளைக்கு மாறாக இந்தப் பத்திரகாளி கோயிலில் 'சாக்தர்' 'கபாலிகர்' முதலி யோர் சிலசமயம் நரபலி கொடுப்ப துண்டு என்ற வதந்தி இருந்தபடியால், இரவு நேரத்தில் அந்தப் பாதை வழி யாகப் போக எப்பேர்ப்பட்ட வீரர் களும் தயங்குவார்கள்.

இதையெல்லாம் அறிந்திராத விக்கிர மன் குள்ளனால் வழிகாட்டப்பட்டவனாய் சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் அந்தக் குறுக்குக் காட்டுப்பாதை பிரியும் இடத் துக்கு வந்து சேர்ந்தான். (தொடரும்)

வறண்ட குளமா? வறண்ட மனமா?

● ''அவன் ஒரு சரித்திரம்'' திரைப்படத்தின் விமர்சனம் கண்டு திடுக்கிட்டேன்! தேசியப் பத்திரிகை என்று கருதப்படுகிற 'கல்கி'யில் இத்தகைய விமர்சனம் வெளியாகியிருப்பதைக் கண்டு மெத்த வருத்தப்படுகிறேன்!

தேசிய உணர்ச்சியை உயிரோட்டமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கதையை —காந்தியத் தத்துவம் இந்தத் தேசத்து இளைஞர்களின் மத்தியில் மிக ஆழமாகப் பதிய வேண்டும் என்ற ஆசையில் உருவாக்கப்பட்ட கதையை, தங்கள் பத்திரிகை விமர்சகர்—'அபத்தமான கதை' என்று குறித்திருப்பதைக் கண்டு மிகவும் வருந்துகிறேன்.

நில ஆர்ஜித விஷயமாக கெஜட்டில் வெளியாகியிருப்பதாக, வேதாசலம் நாடகமாடியிருக்கலாம் அல்லவா? அடுத்த காட்சியில் நஷ்ட ஈடு கொடுப்பது விஷயமாக நேரில் பேச தாசில்தாரும் சப்-கலெக்டரும் வந்திருப்பதாகச் சொல்கிறாரே! கவனிக்கவில்லையா?

சதிச் செயல் செய்து ரயிலைக் கவிழ்க்கப்



போகும் சேதியைக் கேட்டவுடன் எந்த மனிதாபிமானமுள்ளவனும் நேரடியாகச்சென்று தடுக்க முயற்சி செய்வானே தவிர — போலீஸ் படையை ஏவிவிட்டு, பேசாமல் வீட்டுக்குப் போயிருக்க மாட்டான்.

தன்னுடைய நடவடிக்கைகளுக்கு நியாயமான முடிவுகள் கிடைக்கவில்லை என்று தெரிந்த பின்னர் ராஜினாமா செய்துவிட்டுப் பத்திரிகைத் தொழில் புரிவது தவறு? தங்கள் கருத்துக்களைக் கூறவென்றே எத்தனையோ பேர் பத்திரிகைத் தொழிலில் ஈடுபடவில்லையா?

மேலைநாடு சென்று வந்த கல்பனுக்கள் இந்த நாட்டுக்காக உழைப்பதில், சமூக சேவை செய்வதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக்கூடாதா?

வறண்ட குளத்தில் மீன்கள் நீந்த முடியாது—ஒத்துக் கொள்கிறேன். நாட்டுப் பற்றுக்கு இடமில்லாத வறண்ட மனமா உங்கள் விமர்சகருடையது?

சென்னை-14 செல்வபாரதி
20—1—77
(''அவன் ஒரு சரித்திரம்'' கதாசிரியர்)

● அரசு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்ற அளவுக்குத் திட்டமிட்டு ஒரு சிலர் பிரசாரம் செய்து வரும் ஒரு தமிழ்ப் படத்தைப் பற்றி கல்கி தனது விமர்சனத்தை நேர்மையாக, அதே சமயம் துணிச்சலுடன் செய்திருப்பது பாராட்டத் தக்கதாகும். அவன் ஒரு சரித்திரம் விமர்சனத்தைத் தான் சொல்கிறேன்.

திருவனந்தபுரம்
22—1—77 எஸ். எஸ். மணி

● இதில் வரும் கதாநாயகன் போன்ற அதிகாரியைத்தான் அரசு நாடுகிறது. தன்னை ஈன்ற தகப்பன் நிலம் — வம்சாவழி சொத்து நாட்டுக்குப் பயன்படுகிறது என்கிற போது அதை நாட்டுக்காக இழப்பதைப் பெரிய பாக்கியமாகக் கருதுகின்றான் நாயகன். இதைப் போய் வெட்கக்கேடு என எழுதி விட்டாரே!

அவிநாசி
24—1—77 டி. செங்கோட சுப்பிரமணியம்

● தாங்கள் அனுப்பிய 23—1—77 கல்கி இதழ் கிடைத்தது.

அதில் கும்பகோணம் மின்சார நிறுவனத்தைத் தமிழ்நாடு மின்வாரியம் ஏற்ற பிறகு உள்ள நிலைமை பற்றி நான் எழுதியதாக ஒரு கடிதம் வெளி வந்திருக்கிறது. அக் கடிதத்தை நான் எழுதவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தக் காரணத்துக்காகவோ என் பெயரையும் விலாசத்தையும் பயன்படுத்தி யாரோ எழுதியுள்ளார்கள்.

கும்பகோணம்
22—1—77 வி. சுப்பிரமணியம்

● திருநெல்வேலி கிராமங்களில் ஒரு பகுதிக்கு மின்சப்ளை, கம்பெனியார் மூலம் நடைபெற்றது. அப்பொழுது குறிப்பிட்ட தொகைக்கு மேல் போனாலும் கூட நோட்டீஸ் தருவார்களேயொழிய அபராதமோ, வட்டியோ போட்டு ஹிம்சிப்பதில்லை. இப்பொழுது நடைபெறுகிற விஷயம் முற்றிலும் மாறானது. அரசு கம்பெனியை எடுத்துக் கொண்டு நடத்தின பிறகு மீட்டர் சார்ஜ் கூடுதல் ஆயிற்று. அத்துடன் பூட்டி இருக்கிற வீட்டுக்கு, மின்சாரமே உபயோகிக்காமல் இருக்கிற நிலையில் குறைந்த விகிதமான 2.50 (கம்பெனியார் நடத்துகிற போது.) ரூபாயை ஐந்தாக ஆக்கியும் அபராதமோ, வட்டியோ ஒரு ரூபாய் வசூலிக்கிற கொடுமை இப்பொழுது நடைபெறுகிறது.

பில் தங்கள் பார்வைக்குச் சாட்சியாக இத்துடன் வருகிறது.

விட்டலபுரம்
22—1—77 வி. எஸ். வெங்கடாச்சாரி

வட்டமேஜை!





சுவாமி, அம்மன் கோயில்கள் இரண்டினையும் ஒருங்கே வலம் வருவதற்கேற்ற வகையில் அமைத்த வீதி தான் ஆடி வீதி. இது கற்கள் பாவப்பட்ட பெரிய முற்றமே யாகும். இதைச் சுற்றியுள்ள பெரிய மதில், கோயிலின் வெளிச் சுற்று மதில். 847 அடி நீளமும் 792 அடி அகலமும் கொண்டது கோயிலின் உள் பரப்பு.

கீழ ஆடி வீதி பெரும்பாலும் மண்டபங்களைக் கொண்டது. மற்ற மூன்று ஆடி வீதிகள் திறந்த வெளிகளாக இருக்கின்றன. ஆனால் மதிலை ஒட்டிக் கட்டப்பட்ட மண்டபங்கள் (மங்கம்மா கட்டியது) இப்போது பல அறைகளாகத் தடுக்கப் பெற்று, அலுவலகங்களாக உபயோகிக்கப் படுகின்றன. மேற்கு ஆடி வீதியில் ஊஞ்சல்... இளப்பூங்குடி (பசுமடம்) உள்ளது.

ஆடிமாதத்தில், அம்மன் மட்டுமே கலந்து கொள்ளும் முளைக் கொட்டு உற்சவம் பத்து நாட்களுக்குக் கொடி ஏற்று விழாவுடன் ஆரம்பித்து நடக்கிறது. அங்கயற் கண்ணி ஆடி வீதிகளில் பவனி வருகிறாள்.

6

லாவண்யாவுக்கு ஒரு தனி குணம் உண்டு. யாரிடமாவது ஒரு நல்ல தன்மையைக் கண்டு விட்டால் தானும் அவர்களைப் போலவே இனி இருக்க வேண்டும் என்று அவள் மனம் நினைக்கும். ஒரு தோழியின் வீடு சுத்தமாகத் துப்புரவாக இருந்தால், தன் வீட்டு அறையையும் அதேபோல் வைத்துக் கொள்ள வேண்டும் என்று திட்டம் போடுவாள். யாராவது ஒருவர் அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு நெற்றி நிறைய விபூதியும் குங்குமமுமாகக் கோயிலுக்குச் செல்வதைக் கண்டால், மறு நாளிலிருந்து தானும் கோயிலுக்குப் போக வேண்டும் என்று முடிவு செய்வாள்.

ஆனால் இத்தகைய எண்ணங்கள் லட்சியங்கள், திட்டங்களெல்லாம் மூன்றே முக்கால் நாழிகைக்கு மேல் அவள் உள்ளத்தில் உட்கார்ந்ததில்லை. எவ்வளவோ பேர்களைப் போலத் தானும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏதோ ஒரு காற்று போல் வீசி விட்டுப் போகுமே அல்லாது மனம் தீவிரமாக அதைச் செயல்படுத்த முனையாது. இதை நாளடைவில் அவளே அனுபவ ரீதியாகப் புரிந்து கொண்டாள்.

அவள் அவள்தான். அவளுடைய அலாதித் தன்மையை, தனித்துவத்தை அவளால் மாற்றிக் கொள்ள முடியாது. பிறருடைய உதாரணங்கள் அவளை மாற்றவும் சக்தி இல்லாதவை.

பஸ்ஸை விட்டு இறங்கும் வரையில், அம்மாவுக்காக வாழும் க்யூமொட்டையைப் போலத் தானும் வாழ வேண்டும் என்று ஒரு புது வேகத்துடன் சங்கற்பம் செய்துகொண்ட லாவண்யா, பஸ்ஸை விட்டு இறங்கியதுமே எல்லாவற்றையும் மறந்து விட்டாள். மனத்தில் ஒட்டிக் கொண்டிருந்த க்யூமொட்டை இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டாள். கான்வேயை அவள் எப்போதோ மறந்தாகி விட்டது. அவளுடைய நினைவு தன் மீதே திரும்பியது.

மறுநாள் ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு கோஷ்டி வருகிறது. ஓர் இருபது ரூபாயும் நிச்சயம் கூடவே வருகிறது. வீட்டில் இஸ்திரி போட்ட புடவை என்ன இருக்கிறது? அதன் நிறத்துக்கேற்ற சோளியும் கலர்க்குங்குமமும் இருக்கின்றனவா? வலது செருப்பில் கட்டை விரலுக்குக் கீழே ஆணி இலேசாகக் குத்துகிறது. அதைச் சரி செய்ய வேண்டும். இல்லாமற் போனால் தூய வெள்ளை நைலக்


ளைக் கட்டிக் கொண்டு, வெள்ளைப் பிளாஸ்டிக் செருப்பை உபயோகிக்க வேண்டும். வெள்ளை சிறிதே மங்கியிருக்கிறது.

வழக்கம் போலவே டவுன் ஹால் ரோடு பிதுங்கி வழிந்து கொண்டிருந்தது. இந்தத் தெருவைப் பார்க்கும் போதெல்லாம், நேரு என்றைக்கோ எப்பவோ சொன்ன தேசிய ஒருமைப்பாடு அவளுடைய நினைவுக்கு வரும். டவுன் ஹால் ரோடு வழியாகச் சென்று வருகிறவர்களை எண்ணிப் பார்த்தால் ஒரு நாளுக்குக் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேராவது இருக்கும். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில், குஜராத்திலிருந்து அஸ்ஸாம் வரை எல்லா இந்தியர்களும் இந்த மதுரைக்கு வருகிறார்கள். இந்தத் தெரு வழியாகத்தான் கோயிலுக்குச் செல்லுகிறார்கள்.

சந்தைப் பேட்டைக்குத் திரும்பும் முனையில் ஒரு பழக்கடை இருக்கிறது. ஆப்பிளும் சாத்துக்குடியும் திராட்சையும் கொட்டிக் கிடந்தன. கடையின் நீளத்துக்குக் கயிறுகள் கட்டி மலை வாழைப் பழத்தைச் சீப்புசீப்பாகத் தொங்க விட்டிருந்தான் கடைக்காரன்.

வீட்டுக்கு ஏதானும் பழம் வாங்கிக்கொண்டு போனால் என்ன என்று லாவண்யா தன்னையே கேட்டுக் கொண்டாள். என்ன பழத்தை எவ்வளவு என்று வாங்குவது? வீட்டில் ஐந்து பேர்கள். ஆப்பிள் என்றால் ஐந்து ரூபாய் ஆகும். மலைவாழைப்பழம் டஜன் ஒன்னே முக்கால் ரூபாய். திராட்சை புளிக்கும். இடீரென்று அப்பாவின் கான்சர் நினைவில் ஒட்டிக் கொண்டது. அப்பாவுக்கு மட்டும் நாலைந்து சாத்துக்குடி வாங்கினால் என்ன? உடம்புக்குத் தெம்பு இருக்குமே?

மறுகணமே தன் பைத்தியக்காரத்தனத்தை எண்ணி மனத்தை மாற்றிக் கொண்டாள். அப்பா கான்சரை வைத்துக் கொண்டு இன்னும் வேலை செய்கிறார். தெம்புக்கு ஒன்றும் குறைச்சல் வந்து விடவில்லை. ஒருநாள் இரவு மட்டும் சாத்துக்குடியைப் பிழிந்து குடித்தால் போதுமா? மேலும் அம்மா வீட்டு வேலைத் தொந்தரவில், 'எல்லாம் அப்புறம் பிழியலாம். இல்லாமல் போனால்



உனக்கு என்ன வேலே. உன் அப்பாவுக்கு நீயே பிழிந்து கொடு" என்பாள். லாவண்யா வுக்குச் சாத்துக்குடி பிழிய எங்கே நேரம்?

மின்னல் தோன்றி மறையும் நேரத்தில் பழப்பிரச்னை தோன்றி மறைந்து விட்டது. அவள் பழக் கடையை இரண்டாம் முறை பார்க்காமலேயே சந்தைப்பேட்டைத் தெரு வில் பிரவேசித்து, காக்காத்தோப்பு மூலை யைப் பார்த்துக் கொண்டே நடந்தாள்.

வீட்டில் அம்மாவைத் தவிர யாரும் இல் லாததைக் கண்ட லாவண்யா, ''ஏம்மா, நீலா எங்கே?'' என்று கேட்டாள்.

''நீர்க்க சுமங்கலிக்குப் போயிருக்கிறாள்..''

''பழைய படமாச்சே....''

''எனக்கு என்னடீ தெரியும்? பழசு புதி செல்லாம்? விஜயா அதிலே சுமங்கலியாவே போறளாம். அதைப் பார்த்துட்டு வரேன்னு, கெரோஸினுக்கு வைச்சிருந்த ரெண்டு ரூபா யையும் எடுத்துண்டு போனு...."

''என்ன புடவை கட்டிண்டு போனு?''

''சங்கரி, நான் அவகிட்ட ஆயிரம் தடவை சொன்னேன். உன் புடவையைத் தொடக் கூடாதுன்னு. அவ கேட்கலே...''

''என்ன புடவை?''

''வெள்ளே.''

''வெள்ளேயிலே நைலக்ஸ் ஒண்ணுதான் என்கிட்டே உண்டு. தடிச்சி, அதைத் தூக் கிண்டுட்டாளா?'' லாவண்யாவின் கண்கள் செருப்பு இருக்கும் மூலையைத் துழாவின.

''வெள்ளே பிளாஸ்டிக் செருப்பையும் போட்டுண்டு போயிருக்கு சனியன்.''

''சங்கரி?''

''உம்.''

''அந்தத் தடிச்சி, அந்தச் சனியன் யாரு?''

''......''

''ஏண்டீ பேசாம விரைச்கப் பார்க்கிறே? சொல்லு. இந்தச் சனியன் தடிச்சி எல்லாம் யாரு? உன் தங்கையடீ. என் வயத்தைத் தொறந்து நான் உன்னைப் பெத்த கையோடே கிழிச்ச வயத்தைத் தைச்சிருக்கணும்.. இல்லா மப் போனு செத்துத் தொலேஞ்சிருக்கணும்.''

சிதாமணி தன் மனத்தின் பொருமலேக் கக்கினள்.

''சரியம்மா, கத்தாதே.''

''இல்லேடீ... நான் கத்தித்தான் ஆக ணும். ஆண்டி பெத்தது அஞ்சும் குரங்குங்கிற மாதிரி, நான் மூணைப் பெத்திருக்கேன். ஒண் ணும் சரியில்லே.''

''போரும்மா புராணம் நிறுத்து. எனக்குத் தலேயை வலிக்கிறது.''

''நீ உன் நிழலேயே பார்த்துண்டு வாழு றதை நிறுத்து. ஒரு மனுஷனுக்கு ஓரளவு சுய நலம் அவசியம்தான். ஆனு முழுக்க முழுக்க அதிலேயே மூங்கி மூங்கி மூழ்கப்படாது.. நாளேக்கு உனக்கும் புழு புழுவாப் பிள்ளேகளும் பெண்களும் பிறப்பா. உன் மனசுக்கும் கண் ணுக்கும் எல்லாம் ஒண்ணுத்தான் தெரியும்.''

''நீ எங்கேயோ போறே...''

''எங்கேயும் போகலே... உங்கிட்டேயே தான் இருக்கேன். நீ இதுவரை சம்பாதிச் சதிலே இன்னி வரைக்கும் எனக்குன்னு இல்லே உன் அப்பாவுக்குன்னு ஒரு காசு கூட நான் உங்கிட்டே கேட்டதில்லே. நீயும் நீயாகத் தந்ததில்லே. அம்மாவுக்கு ஒரு முழம் பூ, அப்பாவுக்கு ஒரு மேல் துண்டு நீ வாங்கிண்டு வந்ததில்லே.... பரவாயில்லே, உனக்குத் தெரியாமப் போயிட்டுதுன்னு விட் டுத் தள்ளறேன்... ஆனு இதுவரையிலே என் னிக்காவது ஒரு நாள், தங்கை, தம்பின்னு பாசத்தைக் காட்டியிருக்கியா?''

''காசும் பணமும் கொடுத்துத்தான் பாசத் தைக் காட்டறதுன்னு நான் அதைப் பண் ணினதில்லே. பண்ணவும் மாட்டேன்.''

'' 'எனக்கு', 'என்னுடது'ங்கறதையெல் லாம் விட்டு ஒழிடீ சங்கரி!''

''சரி சரி... உபதேசம் போறும். ராத்திரி என்ன சமையல்?''

''சாதம் மட்டும் வடிச்சிருக்கேன்... கார்த் தாலே வைச்ச குழம்பு இருக்கு...''

''தொட்டுக்க?''

''ஒருத்தரை ஒருத்தர் தொட்டுண்டு சாப் பிடுங்கோ... வாட்டி வைக்க அப்பளாம் இல்லே... கறி வைக்கலாம்னு காய்கறி இல்லே...''

''அது இருந்தாலும் தாளிக்க எண்ணெய் இருக்காதே'' என்றள் லாவண்யா.

''அதுவும் வாஸ்தவம்தான்... ஏதோ கொஞ்சம் கட்ட எண்ணெய்தான் இருக்கு!'' என்றள் சிதாமணி யதார்த்தமாக. பெண் ணின் இடக்கும் நெக்கலும் மனத்தைக் குத்த அங்கே இடமில்லே.

''நேத்து ஆறு ரூபாய் தந்தேன். முந்தா நாள் ஆறு ரூபா... அதுக்கு முந்தினநாள்..''

''தெரியும்டீ. இந்த நாலு நாளுக்குள்ளே பதினெட்டு ரூபாய் தந்திருக்கே... நான் அதை எந்தப் பாங்கியிலும் போடலே... என் பிறந்த வீட்டுக்கும் அனுப்பலே. உன் அப்பா வேறே பதினஞ்சு ரூபா தந்தா. ரேஷன் இல்லாமப் போனு இந்த மாசம் எப்படிச் சாப்பிடறது... குழம்பு கறின்னு இல்லாமல் போனுலும் பரவாயில்லே. ரெண்டு கவளம் சோறு இல்லாம எப்படி இருக்க முடியும்?''

''அப்பா இந்த மாசம் சம்பளத்தையே இன்னும் கொண்டு வரலேயா?''


''வாங்கினதிலே அம்பதை எங்கிட்டக் கொடுத்தார். நாற்பதை வாடகைக்குக் கொடுத்தேன். பத்து ரூபாய்க்குச் சில்லறைச் சாமானே வாங்கினேன்.... நூத்தம்பதை டாக்டருக்கு அழுதார்.''

''என்னமோ நீங்கள் எல்லாரும் அப்பா வுக்குக் கான்சர், அப்பாவுக்குக் கான்சர்னு சொல்றேள். எனக்குத் தோணலே. அவருக்கு கான்சர்னு.''

சிதாமணி பெண்ணே ஓர் அலட்சியத் துடன் பார்த்துவிட்டு அருகே வந்தாள்.

''உனக்கு என்ன தோணறது?'' கேள்வியில் 'நீ என்ன பெரிசாக் கண்டுபிடிச்சிருக்கே?' என்ற பாவனேதான் ஒளிர்ந்தது.

'' லங்ஸ்லே கான்ஸர்னு இப்படியா இருக்கும்?''



வாழ்க்கையில் உயர வாழ்த்து!

சென்னே இந்தியன் எக்ஸ்பிரஸ் அலுவலகத்தில் காணப்பட்ட புத்தாண்டு வாழ்த்து: MAY YOU GO UP IN LIFE MORE IN 1977. இது ஒட்டப்பட்டிருந்த இடம்: லிஃப்ட் !

— கே. ஆர்.

இந்து

உற்பத்தித்திறனின் உச்சத்தை அடைந்துவிட்டது...



ஆம், இந்து தனது உற்பத்தித்திறனை 100% முழுமையாக பயன்படுத்திக் கொண்டுள்ளது!

1975-76 ஒரு மறக்க முடியாத வருடம். சிறந்த திறமை, அதிகப்படியான விற்பனை, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரம், அதிக உற்பத்தி— இவையெல்லாம் 100% உற்பத்தித் திறனை பயன் படுத்தியதன் பலன்கள்! இருந்தாலும் இந்து மற்ற துறைகளில் இன்னும் திறமை காட்ட முடியும். (காட்டியும் உள்ளது). அதாவது தரம், சேவை, புதிய ரகங்கள்—இவற்றை உயர்த்துவதன் மூலம் மேலும் சிறந்த சேவையை அளித்தல் ஆகும்.

இன்று, இந்து தன் உற்பத்தித் திறனை 100% முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

1975-76ம் ஆண்டில் மொத்த விற்பனைத்தொகை மூன்று வருடங்களுக்கான தொகையில் மும்மடங்காகப் பெருகி உள்ளது; அதாவது ரூ. 23 கோடிகளாக! (1973-74ல் இது ரூ. 7.8 கோடிகளாக இருந்தது). 1976ம் வருடம் மார்ச் 31ம் தேதி முடிய இந்து ரூ. 16 லட்சம் வரி போக லாபம் சம்பாதித் துள்ளது! உண்மையிலேயே ஒரு வெற்றிச் சாதனைதான்.

முன்னேற்றப் பாதையில் இந்து

பாலியெஸ்டர் மெடிக்கல் எக்ஸ்ரே பிலிம் பிரதி உற்பத்தி ஒரு பெரிய திருப்பு முனையாகும். நமது கருவிகள், மனித சக்தி, தொழில் நுணுக்கம்—இவையே முழுமையாக உபயோகப் படுத்தப்பட்டன. இது அயல் நாட்டுத் தயாரிப்புகளுக்கு இணையான தரத்துடன் இருப்ப தோடு மட்டுமில்லாமல் எந்த மதிக்கான சிறந்த சூழ்நிலை யினையும் உருவாக்கியுள்ளது.

1980களுள் மெடிக்கல் எக்ஸ்ரே பிலிமின் தேவை இருமடங்காகி விடும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இந்து கைவசமுள்ள கருவிகளின் துணைகொண்டு இச்சவாலை சமாளிக்க ஏற்கனவே தயாராக உள்ளது.

அதுமட்டுமல்ல, கலர் ஜம்போ ரோல்களிலிருந்து கலர் பாஸிடிவ்வாக மாற்றப்பட்ட ரோல்கள் தொடர்ந்து சிறப்பாக அமைந்துவருகின்றன. நவீன தொழில் நுணுக்க முறைகளைக் கையாண்டு உயர்ந்த ரகத் தொழில் முறைகளின் மூலம் இவை மாற்றப்படவேண்டும்.

இதன் பலனாக இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், தான் தயாரிக்கும் பிலிம்களின் மூலப் பொருட்களில் 97% வரை உள்நாட்டுப் பொருட்களாக இருக்கும்படி பார்த்துக் கொண்டுள்ளது.

இந்து — முன்னணி யாளர்களுடன் முன்னணி யில் நிற்கிறது.

இந்துவின் சிறந்த தரத்திற்கு உறுதியான சான்று—தலைசிறந்த தொழில்முறை போட்டோ கிராபர்கள், படத்தயாரிப் பாளர்கள், திரையரங்கு திரைப்பட இயக்குனர்கள், ரேடியாலஜிஸ்ட்டுகள்—இவர்கள் எல்லோரும் இந்துவையே விரும்பித் தேர்ந்தெடுப்பதேயாகும். அவர்களுக்குத் தெரியும், இன்று எங்கெல்லாம் தரம் என பேசப் படுகிறதோ அங்கெல்லாம் இந்துவின் பெயரும் இணைந் திருக்குமென்பது.

ஆம், இன்று இந்து தன்னிறைவு பெற்று மேன்மேலும் சிறப்பாக இயங்குகிறது. அதனால்தான் நாங்கள் உறுதியுடன் கூறுகிறோம்: "இந்து என்றால் பிலிம்"

INDU®

இந்து என்றால் பிலிம்- போட்டோ-சினி-எக்ஸ்ரே.

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் மானுபாக்சரிங் கோ., லிமிடெட் (இந்திய அரசு நிறுவனம்) இந்து நகர், உதகமண்டலம் 643 005.

S.A.A./HPF/2161

எனக்குத் தெரியுமே நம்பகமானது க்ளைகோடின்—

இருமல் தொல்லை இவளை விரைவில் விட்டகல...





இந்தியாவின் வேறெந்த இருமல் மருந்தையும் விட அதிக அளவிலே இருமலை நிறுத்தியுள்ளது க்ளைகோடின்.

எனவேதான் அது முதல்தரமானது

இருமல் பாதித்த எல்லா உறுப்புகளிலும் அது விரைந்து செயல்பட்டுத் தவறாமல் துரிதமான ஆறுதல் அளிக்கிறது.

- தொண்டைக் கமறலுக்கு இதமளிக்கிறது.
- ஜலதோஷத்தோடு வரும் இருமலை விலக்கிச் சளியடைப்பைத் தளர்த்துகிறது.
- நிம்மதியான உறக்கத்தைத் தூண்டி, மார்புத் தசைகளை இளைப்பாற்றி மூச்சு விடுதலை எளிதாக்குகிறது.

எவ்வித இருமலையும் முழுதும் கட்டுப்படுத்த உறுதுணை க்ளைகோடின்.

Alembic

க்ளைகோடின்—இந்தியாவில், இருமலை முறியடிக்கும் சேம்பியன்—
நம்பகமான மருந்துகளை நமக்குத் தரும் அலெம்பிக் நிறுவனத்திடமிருந்து.

everest/519/ACW-tm

''பின்னே எப்படி இருக்கும்னு நீ சொல்றே?''

''படுத்த படுக்கையா யிருக்கும். பிராணன் போற மாதிரி வலிக்கும். வேலையே செய்ய முடியாது.''

''நீ ஆஸ்பத்திரிக்குப் போனவாளைப் பார்த்துட்டுப் பேசறே... அப்பா இனிமேத்தான் ஆஸ்பத்திரிக்குப் போகணும். இப்பத்தான் அவருக்கு ஆரம்பிச்சிருக்கு.''

''இதெல்லாம் யார் சொன்னு?''

''போய் ரமணியைக் கேளு.''

''ரமணியை விடு. டாக்டர் என்னதான் சொல்றாராம்?''

''ரெண்டு கண்ணு, ரெண்டு காது மாதிரி ரெண்டு சுவாசப் பை இருக்கே... அதிலே ஒண்ணுலேதான் காளான் முளைச்சிருக்கு. அதை வெட்டி எடுத்துட்டா இன்னொண்ணை வைச்சுண்டு காலம் தள்ளலாமாம்.''

''அப்படியா?''

''மெட்ராஸுக்கு அழைச்சுண்டு போகணுமாம். அங்கே அடையாற்றிலே கான்சர் ஆஸ்பத்திரி இருக்காம். அங்கே காட்டிட்டு அப்புறம் ஆப்ரேஷனை....''

லாவண்யா இடைமறித்தாள். ''இதுக்குத்தான் நேத்துப் பணம் கேட்டியா?''

''ஆமாம்.''

''ஏன், அப்பா வேலே பார்க்கிற ஹோட்டல் பெரிய ஹோட்டலாச்சே? இருபத்தைஞ்சு வருஷமா உழைச்சிருக்காரே.... முதலாளி கொடுத்து உதவலாமே?''

''மூவாயிரம் தரூர்.''

''பின்னே என்ன?''

''போறுது.''

''எவ்வளவு இருந்தால் போறும்?''

''இன்னும் ஏழாயிரம்!''

''ஏழாயிரமா... ஏழாயிரம் எதுக்கு? அடையாறு கான்சர் இன்ஸ்டிடியூட்டிலே ஏழைகள்னு அதிகச் செலவே கிடையாது.''

''ஆபரேஷனை அமெரிக்காவிலே வைச்சுக்கலாம்னு ரமணி சொன்னுன்.''

''அமெரிக்கா எங்கே மானாமதுரைக்குப் பக்கத்திலே இருக்கா...?''

''இந்தப் பத்தாயிரம், விமானச் செலவுக்கு மட்டும்.... யார் மூலமாவோ ஆபரேஷனைக் காசு இல்லாமல் நடத்தலாம்னு ரமணிதான் சொன்னுன்...''

''ரமணிக்கு என்ன, வாய் புளிச்சதோ மாங்காய் புளிச்சதோன்னு எதையாவது சொல்லிட்டுப் போயிடுவார். அவரா கையிலேந்து கொடுக்கப் போறூர்?''

''ஆனு உன் நாக்கிலேந்து இன்னும் பணம் தரேன்னு ஒரு வார்த்தை வரலே, சங்கரி!''

''நான் யோசிச்சுண்டு இருக்கேன்.''

''என்ன?'' திடீர் என்று சீதாமணியிடம் ஒரு நம்பிக்கையும் அதைத் தொடர்ந்து ஆர்வமும் தோன்றின. பெண் என்ன யோசிக்கிருள்? ''இவ்வளவு பணத்தைக் கொட்டி அமெரிக்காவுக்கு அனுப்பினுல் அப்பா பிழைச்சுப்பார்னு நிச்சயமிருக்கா?''

''என் துக்கிரி மாதிரிப் பேசறே? உன் தங்கை தீர்க்க சுமங்கலி போயிருக்கா. அது சினிமான்னுலும் எனக்கு நல்ல சகுனமாப் பட்டது. ஆனு நீ உன் வாயாலேயே என் பொட்டை அழிக்கப் பார்க்கறே.''

''பேத்தாதேம்மா. இன்னும் பத்தாம் பசலியா யிருக்கே... நெருப்புன்னு வாய் வெந்து விடும்னு மதுரையிலே எல்லார் வாயும் புகைதான் கக்கிண்டிருக்கணும். இந்த மாதிரி விஷயங்களிலே நாம வெறும் உணர்ச்சிகளுக்கு மட்டும் பிராதான்யம் கொடுக்கக் கூடாது. ஒரு செலவு செய்யறது பெரிசில்லே. அந்தச் செலவாலே என்ன லாபங்கறதையும் யோசிச்சுப் பார்க்கணும்.''

''நீ உன் பி. ஏ. மண்டையாலே யோசிச்சுப் பார்க்கறப்போ அதிலே என்ன வெளிச்சம் தெரியறது?''

''சரி, உன் வழிக்கே வரேன்... அப்பா அமெரிக்கா போறூர்; ஆபரேஷன் நடக்கிறது. ஒரு சுவாசப் பையை அங்கேயே விட்டுட்டு இன்னொண்ணேடே திரும்பி வரூர்.... அப்புறம்? அப்புறம் சொல்லு.''

''அப்புறம் என்ன இருக்கு சொல்றதுக்கு?''

''அப்பாவாலே பழைய மாதிரி வேலே செய்ய முடியாது.''

''சங்கரி போதும்... நீ இந்த வீட்டைப் பத்திக் கவலேப்படாதே... உன்னேயோ, நீலாவையோ, ஏன், சுந்தரத்தையோ கூட நான் நம்பலே. நீங்க ரெண்டு காசு சம்பாதிச்சு எங்களுக்குப் போடுவேன்னு உங்களே நாங்க வளர்க்கவுமில்லே. அப்பா சம்பாதிக்கா விட்டால் உலேயிலே வேகாதுன்னு நினைக்கிறியா? அதுதான் இல்லே...!''

''பின்னே!''

''ஒரு தெவசத்துக்குச் சமைச்சாப் பத்து ரூபா, கார்த்தாலேயும் சாயங்காலமும் சமைச்சு இறக்கிட்டு வந்தா ஆறு ரூபா... கல்யாணம், பூணுலுக்குப் பட்சணம் பண்ணிக் கொடுத்தா அம்பதும் நூறும்... எங்க ரெண்டு வயத்துக்கு யதேஷ்டம்.''

''சரியம்மா, நீ என்னென்னமோ பேசறே. என்னேக் கேட்டா இந்த அமெரிக்க ஆபரேஷனே அனுவசியம். மெட்ராஸிலே இல்லாத டாக்டர்களா... ஆயிரமோ இரண்டாயிரமே செலவழிச்சால் போதும்.''

''உன்னேக் கேட்டாத்தானே? உன்னேக் கேட்கலே...''

லாவண்யா சிரித்தாள்.


''எல்லாத்துக்கும் ஒரு பதிலே வைச்சிருக்கே அம்மா.''

''ஆனு நீதான் பதில் சொல்லாமே இருக்கே. மழுப்பறே... தட்டிக் கழிக்கப் பார்க்கிறே...''

''இது விஷயமா நான் ஒரு முடிவு எடுத்தாச்சு.''

என்ன என்று சீதாமணி கேட்கவில்லே. பெண் தானுகச் சொல்லட்டும் என்று காத்திருந்தாள். (தொடரும்)


கொடி உடல்! கொடி உடல்!




உடல் மெலிவதற்கு மேற்கு ஜெர்மானியப் பெண்மணிகள் ஒரு நூதன வழியைக் கடைப்பிடிக்கிருர்கள். முன்பு தாங்கள் ஒல்லியாக இருந்தபொழுது எடுத்த படம் ஒன்றைச் சாப்பாட்டு மேஜை மேல் ஃபிரேம் போட்டு வைத்துக் கொள்கிருர்கள். அதன் பக்கத்திலேயே இப்போதைய குண்டான தோற்றத்தையும் புகைப்படம் எடுத்து ஃபிரேம் போட்டு வைத்துக் கொள்கிருர்கள். இரண்டு படங்களேயும் மாறி மாறிப் பார்த்தபடி சாப்பிடும்போது ....

வெகு சீக்கிரம் மெலிந்து விடுகிருர்கள்! -ஜெர்மன் ட்ரிப்யூன்







- [illegible]
- 1974ல் மாணவர்களே தயாரித்த பெஞ்ச் லேத் தமிழ் நாட்டில் அந்த ஆண்டின் சிறந்த மாணவர் முயற்சியாகப் பாராட்டுப் பெற்றது.
- டிப்ளோமா மாணவர்கள் நவீன பொறி இயல் இயந்திரமொன்றைக் கையாளப் பயிற்சி பெறுகிறார்கள்.

சர்க்கார் தொழில் நிறுவனம் ஒன்றில் 32 காலி ஸ்தானங்களை நிரப்ப ஒரு விசேடப் பொறி இயற் பரீட்சை நடத்தினார்கள். அதற்கு இம்மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் டிப்ளோமா பெற்ற மாணவர்கள் வந்திருந்து போட்டியிட்டார்கள். முடிவில் 32 ஸ்தானங்களில் திருச்சி "சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி" மாணவர்கள் முப்பது இடங்களைக் கைப்பற்றி விட்டார்கள்!

இவ்வளவு கெட்டிக்கார மாணவர்களைப் பெற்ற தொழிற்கல்விக் கூடம் தோன்றியது எப்படி?

சேஷசாயி மாணவன், பேஷான சான்றிதழ்!

1952-ல் தமது அறுபதாண்டு நிறைவு மணிவிழாவைக் கொண்டாடிய திருச்சித் தொழிலதிபர் திரு வி. சேஷசாயி, நண்பர்கள் வழங்கிய நிதி அத்தனையையும் திருச்சியில் ஒரு தொழில் கல்விக்கூடம் (பாலிடெக்னிக் ஸ்கூல்) தொடங்க வழங்கி விட்டார்.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இப் பயிற்சிக் கூடம் எஸ். எஸ். எல். ஸி. வரை படித்த மாணவர்களுக்கு ஸிவில், எலெக்ட்ரிகல், மெக்கானிகல் ஆகிய மூன்று பொறி இயல் துறையில் பயிற்சியளித்து டிப்ளோமா வழங்கும் ஒரு முழு பாலிடெக்னிக் கல்விக்கூடமாக வளர்ச்சி பெற்றது.

காலஞ்சென்ற திரு வி. சேஷசாயி தனியார் துறையில் மின்சார உற்பத்தி ஸ்தாபனத்தைத் தொடங்கித் தஞ்சை திருச்சி ஜில்லாக்களில் கிராமந்தோறும் மின்சாரத்தைப் பரப்பி ஒளிமயமாக்கி வந்தார். இவர் தொடங்கிய இந்த ஸவுத் மதராஸ் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன் இந்தப் பள்ளி வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் 30,000 ரூபாய் 1974 வரை வழங்கி வந்தது. அதற்குப் பிறகு ஏன் வழங்கவில்லை என்றால், காரணம்—இந்த நிறுவனம் தேச உடைமையாக்கப்பட்டு விட்டதுதான்! மேட்டூர், ஈரோடு, திருச்சியிலுள்ள வேறு பல தொழில் நிறுவனங்களும் தாராளமாக நிதி உதவி வந்துள்ளன.

1962-ல் இதற்கு இன்னொரு பொறுப்பும் சேர்ந்தது. அதாவது எட்டாவது வகுப்பில் தேறி உயர்நிலைப் பள்ளிக்குப் போகும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து மூன்று வருட

மெட்ரிகுலேஷன் படிப்புடன் தச்சு, கருமார் வேலே, வெல்டிங் முதலிய சில தொழில்களிலும் பயிற்சியளிக்கிறார்கள். இப்படிப் பயிற்சி பெற்று எஸ். எஸ். எல். சி. தேறிய மாணவர்கள் விரும்பினால் தொடர்ந்து படித்து டிப்ளோமா பெறலாம்; அல்லது வேறு துறைகளில் படிக்கச் செல்லலாம்.

இந்த டெக்னிகல் ஹைஸ்கூலில் இன்று 181 பேர் படிக்கிறார்கள். டிப்ளோமா படிப்பு வகுப்புக்களில் 570 பேர் இருக்கிறார்கள்.

750 பேர் படிக்கும் தொழிற் கல்விக்கூடத்தில் இருக்கும் தொழில் பட்டறைகள் சோதனைச் சாலேகளின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? பதினெட்டு லட்சத்துக்கு மேல்! ஒவ்வொரு தொழிற் பயிற்சிச் சாலேயிலும் இயங்கும் இயந்திரங்கள் மிக நவீனமானவை.



இந்தக் கல்விச் சாலேயின் முன்னாள் முதல்வர் திரு ஜி. சுந்தரம் அவர்களேச் சந்தித்தீர்களானால் தமது மாணவர்கள் பெருமைகளேச் சொல்லிச் சொல்லி ஓயவே மாட்டார்.

1962-லிருந்து 74 வரை முதல்வராகப் பணியாற்றியிருக்கிறார். முதல்வர் பதவியிலிருந்து விலகிய பின்னரும் பள்ளிக்கூட நிர்வாகக் குழுவின் செயலாளராக இருந்து பணியாற்றி வருகிறார்.

"அன்று மாலே ஐந்து மணியாகி விட்டது. பள்ளிக்கூட அட்மிஷனுக்கு விண்ணப்பங்களே மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள். எல்லோரும் மூன்று மணிக்கே சமர்ப்பித்து விட்டுப் போய் விட்டார்கள். நானும் காரில் ஏறி வீட்டுக்குப் போக இருந்தேன். அப்போது ஒரு சிறு பையன் கையில் ஏதோ புத்தகத்துடன் நின்று கொண்டிருப்பதைக் கவனித்தேன். அவன் யார் என்று விசாரித்ததில் அவன் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஓர் அனாதைச் சிறுவன் என்பது தெரிய வந்தது. அவன் கையிலிருந்ததோ எஸ். எஸ். எல். சி. புத்தகம். அவன் வாங்கியிருந்த மார்க்கைப் பார்த்தால் வியப்பாக இருந்தது. 500-க்கு மேல் வாங்கியிருந்தான். அவனுக்கு இப்பள்ளியில் சேர வேண்டும் என்று ஆசை. கையிலோ விண்ணப்ப பாரம் வாங்கக்கூடப் பணமில்லே. நான் காரை விட்டு இறங்கி, என் கையை விட்டுப் பணம் கொடுத்து விண்ணப்ப பாரம் வாங்கி, பையனே மனுவைப் பூர்த்தி செய்ய வைத்துப் பெற்றுக் கொண்டேன். இன்று அந்தப் பையன் மிக உயர்ந்த பதவியில் இருக்கிறான்" என்று தாம் முதல்வராயிருந்த போது நடந்த ஒரு சம்பவத்தை நினைவுகூர்கிறார் திரு ஜி. சுந்தரம்.

இப்படி எத்தனையோ பையன்களுக்குப் பரீட்சைக்குப் பணம் கட்டியிருக்கிறார். புத்தகங்கள் வாங்கித் தந்திருக்கிறார். அது மட்டுமல்ல, பரீட்சையில் தேறி வெளி வந்தவுடன் வேலேகளும் வாங்கித் தந்திருக்கிறார்.

இங்கு பயிற்சி பெறும் மொத்தம் 751 மாணவர்களுக்கு 77 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அதாவது 10 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் இருக்கிறார் என்றால் இக் கழகத்தின் கல்வித் தரம் மிக உயர்வாக இராமல் வேறு எப்படியிருக்க முடியும்?

■ கழகப்படிக்கு அத்தாத பள்ளி மாணவர்கள் பட்டயம் பயிற்சி பெறுகிறார்கள்.

■ திரு ஜி. சுந்தரம்.



இக் கழகத்தின் வளர்ச்சியில் திருச்சிராப்பள்ளி பிரமுகர்களாகிய திரு டி. எம். நாராயணசாமி பிள்ளே, திரு கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோரின் பங்கு மிகப் பெரிது.

தற்போதைய நிர்வாகக் குழுவின் தலேவராக விளங்கும் திரு எச். கே. ராமசாமி இக்கழகத்தின் ஆரம்ப நாளிலிருந்தே முக்கிய பங்கு கொண்டவர். தொழில் பிரமுகர். இக் கழகத்தின்பால் அக்கறை கொண்டவர்களுள், பி.எச்.இ.எல். சேர்மனுகிய திரு வி. கிருஷ்ணமூர்த்தி, சித்ரா எஸ். நாராயணசாமி, சேஷசாயி காகித நிறுவன நிர்வாக இயக்குனர் எஸ். விசுவநாதன், மேட்டூர் கெமிக்கல்ஸின் நிர்வாக இயக்குனர் கே. வி. ரமணி ஆகியோரைக் குறிப்பிட வேண்டும்.

இளம் சமுதாயத்தினருக்கு அரும் பணியாற்றி வரும் சேஷசாயி பொறி இயற் கழகம் வருகிற பிப்ரவரி 7-ம் தேதி வெள்ளி விழா கொண்டாடுகிறது. ஸ்ரீ ஆர். வேங்கடராமன் அவர்கள் விழாவில் பங்கேற்றுச் சிறப்பிக்கிறார்.

மாநில பொறி இயல் கல்வி இயக்குனர் டாக்டர் குழந்தைசாமி அவர்களும் இவ்விழாவில் பங்கு கொள்கிறார்.

வெள்ளி விழாவை யொட்டி, இக் கழகத்தில் டெலிவிஷன் பயிற்சியளிக்க வகை செய்ய வேண்டும். எதிர்காலத்துக்கு அது இன்றியமையாதது. —எஸ். வி. எஸ்.

மார்கோ சோப்

உங்கள் சருமத்தை சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு மட்டு மல்ல. இது அதிக வலுவையும் திடத்தையும் உடலுக்கு அளிக்கிறது.

இது இந்நாட்டின் ஒரு முக்கிய இரசாயன சாலையின ஆராய்ச்சி மூலம் அறியப்பட்ட ஒரு மகத்தான உண்மை இயற்கையின் அன்பளிப்பான 'நீம் எண்ணை' கொண்டு தயாரிக்கப்படும் ஒரே சோப் மார்கோ தான்.
மார்கோவில் மட்டுமே இந்த நீம் எண்ணை யின் குணமும் மணமும் அமைந்துள்ளது. உங்கள் உடலை சுத்தமாக வைப்பதோடு மட்டுமல்லாமல் திடமாகவும் இருக்க மார்கோ உதவுகிறது. ஆகையால்தான் மார்கோ சோப் 1920-ம் வருடம் முதல் நிலையான புகழுடன் விளங்குகிறது.



மார்கோ சோப்
எக்காலத்திற்கும் எல்லா
வயதினருக்கும்
ஏற்றது.

IDL/MGN-1Ta

கல்கத்தா கெமிக்கலின் ஒரு தயாரிப்பு



நல்ல அழுத்தமான கதை கிடைத்து விட்டால் படம் நிச்சயமாக நன்றாயிருக்கும் என்பதை ராஸ்லீலா பிக்சர்ஸாரின் ''உயர்ந்தவர்கள்'' படம் நன்கு நிரூபிக்கிறது. ஊமையும் செவிடுமான ஓர் ஆணும் பெண்ணும் (ஆர்த்தி—ஆறுமுகம்) ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொண்டு காதலித்துத் திருமணமும் செய்து கொள்ளுகின்றனர். இருவரும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; உழைப்பால் உயர்ந்தவர்கள்.

சுஜாதாவும், கமலஹாசனும் ஒருவரையொருவர் மிஞ்சும் வகையில் அதியற்புதமாக நடித்திருக்கின்றனர். அவர்கள் இருவருக்கும், ஒருவரை யொருவர் விளங்கிக் கொள்ள நேரும் சவால் விடும் சந்தர்ப்பங்களை யெல்லாம் அநாயாசமாகச் சமாளித்திருக்கின்றனர். கண் பார்வைகளையும் கைகளின் அசைவுகளையும் மட்டுமே கொண்டு உரையாடி ரசிகர்கள் உள்ளங்களைக் கவர்ந்து விட்டனர். வீட்டுக்கு வீடு நியூஸ் பேப்பர் போடும் பையன் ஆறுமுகத்துக்கும் ஆர்த்திக்கும் ஏற்படும் முதல் சந்திப்பே சுவாரசியமாக இருக்கிறது. ஆர்த்தியும் அவன் தாயாரும் பேசிக் கொள்வது சுவையோடு நெகிழ்வையும் தரும் காட்சி. சுஜாதா, கமலஹாசன் இருவருக்கும் '' உயர்ந்தவர்கள் '' ஒரு வெற்றிப் படம்.

உயர்ந்தவர்கள்

நகைச்சுவைக் காட்சிகளிலேயே பார்த்துப் பழக்கப்பட்ட தேங்காய் சீனிவாசன் பார்வையற்றவனாக வந்து மிகவும் உருக்கமாக நடித்திருக்கிறார். செவிடும் ஊமையுமான ஏழைத் தம்பதிக்கு இந்தக் குருடன் பேருபகாரமாயிருக்கிறான். தேங்காய்க்குள் சுவையான இளநீர் இருப்பதுபோல், தேங்காய் சீனிவாசனிடம் அருமையான நடிப்புத் திறன் இருக்கிறது என்பதை அவர் நன்கு நிரூபித்து விட்டார்.

ஊமைப் பெண் ஆர்த்தியின் தாயாக வரும் பண்டரிபாய் தமது அநுபவ நடிப்பின் சிறப்பை அருமையாகக் காண்பித்திருக்கிறார்.

''கோஷிஷ்'' (முயற்சி) என்ற ஹிந்திப் படத்தின் தமிழ் வடிவம்தான் ''உயர்ந்தவர்கள்''. சஞ்சீவ்குமாரும், ஜெயாபாதுரியும் நடித்த வெற்றிப் படம். அப்படியே பல இடங்களில் கார்பன் காப்பியாக இருந்தாலும், திரைக்கதையில் ஒரு சில நல்ல மாறுதல்களையும் செய்திருக்கின்றனர். நகைச்சுவைக் காட்சிகளை விரசம் இல்லாமல் சேர்த்திருப்பது பாராட்டுக்குரியது. டி. என். பாலு திரைக் கதை தயாரித்து அருமையாக வசனமும் எழுதியிருக்கிறார். டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா ஒரு சிறு கச்சேரியே செய்திருக்கிறார்.

கதாநாயகன் — கதாநாயகி இருவரும் ஊமைச் செவிடுகளாய் இருக்க, 'டூயட்' இல்லாமல், 'டிஷ்யூம் டிஷ்யூம்' சண்டைக் காட்சிகள் இல்லாமல் ஓர் அருமையான படம் வந்திருக்கிறதே என்று மகிழ்ச்சியால் பூரிக்கும் நேரத்தில் ஒரு சிறு உறுத்தல் — மூலக்கதை தமிழாயில்லையே-என்று!

— காந்தன்




"ஜகதீசா! ஏனோ தெரியவில்லை. திடீரென்று நெஞ்சு வலிக்கிறது. நீ உடனே வருகிறாயா?" ஆத்மநாதன் ஃபோனில் கூறினார்.

ஆத்மநாதன் ஊரில் இருக்கும் பெரிய பணக்காரர்களில் ஒருவர். அத்துடன் பால்ய நண்பர். டாக்டர் ஜகதீசன் உடனே விரைந்தார். அவர் வந்து சேரும் முன்னரே ஆத்மநாதனின் நிலை மோசமாகி விட்டிருந்தது. பத்து நிமிடங்களில் அவரது நர்ஸிங்ஹோமிலிருந்தும், அந்த ஊர் 'பெரிய' ஆஸ்பத்திரியிலிருந்தும் சாவுடன் போராடக் கூடிய கருவிகள் வந்து இறங்கின. 'புவனா மாளிகை' பரபரப்பின் நிலைக்களனாயிற்று.

"டாக்டர்!" நர்ஸ் குமுதாவின் பீதி நிறைந்த குரல் அரைகுறையாகத் தொண்டையிலேயே அடைத்துக் கொண்டது. ஒரு மணி நாற்பத்தைந்து நிமிட நேரம். எந்த விதப் பயனுமில்லாமல் போராடிய பிறகு இப்போது ஆத்மநாதனே அவர்களது போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். அவரது கடைசி மூச்சு அவரை 'அது' ஆக்கிவிட்டது.

நர்ஸ் குமுதாவுக்குப் பரபரப்பாகச் சில உத்தரவுகளை மெல்லிய குரலில் பிறப்பித்துவிட்டு வெளியே வந்தார் டாக்டர்.



நாழிகைக் கணக்கு

ஆத்மநாதனின் மனைவி அம்புஜம், மகள் கனகவல்லி, மைத்துனன் கமலநாதன், அண்ணன் மகன் சிவகுருநாதன், சமையற்காரர் சபேசய்யர், டிரைவர் சுந்தரம், வேலைக்காரர் ஜம்பு, வேலைக்காரி அன்னம் எல்லோரும் அவர் முகத்தைப் பார்த்தே விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டார்கள். ஆத்மநாதனின் மகன் மட்டும்தான் ஊரில் இல்லை. அவன் பெயர் கார்த்திகேயன். ஆத்மநாதனின் அம்மாவும் அங்கில்லை. கீழே, ஒரு தனி அறையில் இத்தனை களேபரங்களையும் பற்றி ஒன்றுமே அறியாத குருடாய் அமர்ந்திருந்தாள். அவளிடம் யாரும் இன்னும் எதுவுமே சொல்லவில்லை.

மாடிப் படியின் கடைசிப் படியில் டாக்டர் கால் வைத்தபோது எதிர்ப் புறத்திலிருந்த தனியறையிலிருந்து பூரணியம்மாளின் குரல் கேட்டது. "அடி கனகா! கொஞ்சம் தினசரிக் காலண்டரைப் பார்த்து இன்னிக்கு என்ன நட்சத்திரம் என்று சொல்லேன். நானும் எத்தனை நேரமாகக் கேட்கிறேன். பூசமாயிருந்தால் ஆத்மாவுக்குப் பிறந்த நாள். நட்சத்திரம் எத்தனை நாழிக்கு இருக்கு என்று பார்த்துச் சொல்லேன்."

இன்று ஆத்மாவுக்குப் பிறந்த நாளோ இல்லையோ, நிச்சயமாக இறந்த நாள் என்று துயரத்துடன் நினைத்துக் கொண்ட டாக்டர் ஒரு கணம் பூரணியம்மாளிடம் சென்று தாமே விஷயத்தைச் சொல்லலாமா என்று நினைத்தார். உடனே மனம் மாறிவிட்டது. அந்தக் கிழவியின் பரிதாபத் துயரைப் பார்க்கும் சக்தி தமக்கு இல்லை என்று நினைத்துக்கொண்டார். நேராக ஹாலுக்குச் சென்று அங்கிருந்த சோபாவில் சாய்ந்தார்.

ஆத்மநாதன் இறந்த விஷயத்தைக் கார்த்திகேயனுக்குச் சொல்லி அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்படாமலே எதிர்பாராத விதமாக அவர் இறந்த ஒரு மணி நேரத்தில் அவனே வந்து விட்டான். போன காரியம் முடிந்து விட்டதென்று! அவன் காரியம் முடிந்து வரு முன் அவன் தந்தையின் கதையே முடிந்து விட்டதுதான் ஓர் அவலக் கதை.

அப்போது கலைந்த தலையும், அழுக்குப் பனியனும், புஸ்தி மீசையுமாக ஒருவன் டாக்டரை அணுகினான்.

"ஐயா! இந்த வீட்டுக்கு வேலைக்கு ஆள் தேவை என்று யாரோ...."

அவனைச் சமையற்காரச் சபேசய்யரிடம் அனுப்பி வைத்தார் டாக்டர். ஆத்மநாதனின் தந்தை காலத்திலிருந்தே இருப்பவர். 'சின்னய்யா, சின்னய்யா' என்று ஆத்மநாதன் மீது அவ்வளவு பாசம் வைத்திருந்தார். அவரது அகால மரணம் உறவுக்கும் மேலாக அவரைத் தாக்கி நிலைகுலையச் செய்து விட்டிருந்தது.

"எங்க எஜமானரே நேற்று இறந்து விட்டார் அப்பா. உனக்கு என்ன வேலை தருவது?" என்று சிறு குழந்தையாகக் குமுறினார் அவர். வந்தவனுக்கும் கண்கள் கலங்கி விட்டன.

"மன்னிச்சுடுங்க. நான் தெரியாமல் வந்து விட்டேன்." உடைந்த குரலில் ஏமாற்றம் தொனிக்கப் பேசியவன் சற்றுத் தயங்கி அங்கேயே நின்றான்.

"ஆமாம், உங்க எஜமானனுக்கு உடம்பு சரியில்லாமல் இருந்ததா?"

யாரிடமேனும் மனப் பாரத்தை இறக்கி வைக்கத் தயாராக இருந்த சபேசய்யர் அனுதாபமாகக் கேட்கும் இந்தப் புது வாலிபனிடம் கடகடவென்று நடந்ததைக் கூறினார்.

"டாக்டர்!" தலை கவிழ்ந்து சிந்தனையில் மூழ்கியிருந்த அவர் நிமிரவில்லை.

"டாக்டர்... டாக்டர்!"

சற்று உரத்த குரலில் குமுதா அழைத்ததும் கனவு கலைந்தது போல் திடுக்கிட்டு நிமிர்ந்தார் அவர்.

"என்ன ?"

"நீங்க சொன்ன 'டெஸ்ட்' செய்தேன், டாக்டர். ரிஸல்ட்...."

நடுங்கும் கைகளால் அவள் நீட்டிய வெள்ளைக் காகிதத்தில் ஜக



பிரகதா சங்கரன்

தீசனின் கண்கள் நிலைக்குத்தி வெறித்தன: 'பாஸிட்டிவ்'

"நர்ஸ்! ஆர் யூ ஷ்யூர்?"

"அதற்குத்தான் டாக்டர் வந்தேன். எதற்கும் நீங்கள் வந்து பார்த்தால்..."

உடனே எழுந்து அவள் பின்னால் 'லாப்'புக்குச் சென்றார். அரை மணி நேரத்துக்குப் பிறகு....

"நர்ஸ்! நீ சொன்னது சரிதான். இது ரொம்ப ஆபத்தான விஷயம். தப்பித் தவறிக் கூட இது பற்றி யாரிடமும் பேசிவிடாதே. உனக்கு நான் அதிகம் சொல்ல வேண்டிய தில்லை. இன்னும் இரண்டு நாட்களில் முழு விவரமும் தெரிந்து விடும்."

அவரது எச்சரிக்கையின் அவசியத்தைப் புரிந்து கொண்டு குமுதா சரியெனத் தலையசைத்தாள். டாக்டர் ஆழ்ந்த சிந்தனையுடன் தமது ஆபீஸ் அறையை நோக்கி நடந்தார்.

அந்த ஊரில் 'ஹோட்டல் அன்னபூரணா' ஒன்றுதான் சற்றுச் சுமாராக இருக்கும்.. கமலநாதன் அங்கு தனது வழக்கமான மூலையில் போய் அமர்ந்து கொண்டான். "ஸர்வர் தம்பி மாறாமல் கொண்டா." பெரிய குரலில் அதிகார தோரணையில் கூறிவிட்டு ஜன்னல் வழியாக வேடிக்கை பார்க்கத்தொடங்கினான்.

"எக்ஸ்க்யூஸ்மீ. நானும் உங்களுடன் உட்காரலாமா?" அரும்பு மீசையும், கவரும் புன்னகையும், கண்களில் கறுப்புக் கண்ணாடியுமாகத் தன் எதிரில் நிற்கும் அந்த நாகரிக வாலிபனைக் கண்களாலேயே அளவிட்டான் கமலநாதன். இதற்கு முன்னால் அவன் பார்த்ததில்லை அவனை! அப்புறம்தான் அவன் கேள்வி நினைவுக்கு வந்தது.

"ஓ! தாராளமாக. உட்காருங்கள்."

"நான் இப்போதுதான் ஸார் இந்த இடம் எவ்வளவு சௌகரியம் என்று தெரிந்துகொண்டேன்." இரகசியம் புரிந்தது போல் கண்ணடித்தான் புதியவன்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"இல்லை ஸார்! நான் இந்த ஊருக்குப் புதிது. எனக்கு இந்த ஊரில் பெண் பார்த்திருக்கிறது. அவள் பக்கத்து டவுனில் கல்லூரியில் படிக்கிறாள்."

சொல்ல வந்ததை முடிக்காமல் மீண்டும் கண்ணடித்தான் அந்தப் புதியவன். கமலநாதனுக்கு இப்போது புரிந்து விட்டது. சிரித்தான்.

"ஓஹோ! வருங்கால மனைவியை ரகசியமாகப் பார்க்க வந்தீர்களா? அதற்கு இந்த இடம் ரொம்பச் சௌகரியம். கல்லூரி விட்டு இங்கு திரும்பி வரும் பெண்கள் இதைத் தாண்டித்தான் போக வேண்டும். அதுவும் இந்த மேஜையிலிருந்து ரொம்ப சௌகரியமாகப் பார்க்கலாம். நான்கூடத் தினமும்.."

மேலே சொல்லாமல் நிறுத்தி விட்டான்.

"ஏன் ஸார், ஏதாவது ரகசியமா? என்னிடம் சொல்லக் கூடாத விஷயமென்றால் பரவாயில்லை. சொல்ல வேண்டாம்."



''சேச் சே! அப்படி ஒன்றுமில்லை.''

திடீரென்று தோன்றிய ஓர் உந்துதலில் தன் காதல் ரகசியத்தை இந்தப் புதியவனிடம் பகிர்ந்து கொள்ளும் ஆர்வத்துடன் பேசத் தொடங்கினான் கமலநாதன். அந்தப் புதியவனும் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டான்.

'புவனா மாளிகை'யில் பூரணி அம்மாளைத் தவிர மற்ற அனைவரிடமும் துக்கம் கேட்க யாரார்ரோ வந்து போயினர். ஆனால் ஆத்மநாதன் இறந்து இரண்டாவது நாளன்றுதான் யாரோ ஒரு புதியவன் பூரணியம்மாளைத் தேடி வந்தான். ஒளியற்ற குருட்டு விழிகளால் சத்தம் வந்த திசையை நோக்கிய பூரணி அம்மாள், ''யாரப்பா நீ? எதற்காக என்னைத் தேடி....?'' என்று கேட்டாள்.

''அம்மா! உங்களுக்கு என்னைத் தெரியாது. உங்கள் மகன் ஆத்மநாதனுக்குத் தெரியும். அவர் எனக்குத் தெய்வம் போன்றவர். நான் வளர்ந்து, படித்து, இன்று ஒரு நல்ல வேலையில் இருக்கிறேன் என்றால், அதற்கு அந்தத் தெய்வ மனிதர்தானம்மா காரணம். அப்படிப்பட்ட தெய்வத்தைப் பெற்ற தெய்வமான உங்களை வந்து தரிசிக்க எனக்கு நெடுநாட்களாக ஆவல். ஆனால் அது இப்படிப்பட்ட சந்தர்ப்பமாகப் போய் விட்டதே என்றுதானம்மா வருந்துகிறேன்.''

சமீபத்தில் காலமாகி விட்ட மகனைப் பற்றிய புகழுரைகள் அதிகத் துயரத்தைக் கிளப்பி விடவே, அது தாயின் வாயிலிருந்து புலம்பலாக ஒலித்தது.

ஏதேதோ சற்று நேரம் புலம்பியவள், ''ஏனப்பா கொஞ்சம் தினசரிக் காலண்டரைப் பார்த்து, இன்னிக்கு என்ன திதி, எத்தனை நாழிகை இருக்கு என்று சொல்கிறாயா?'' என்று கேட்டாள். சரியென்று போய்ப் பார்த்தவன், ''அம்மா, இன்று சதுர்த்தசி. ஆனால் நாழிகை போடவில்லையே?'' என்றான்.

''இல்லையப்பா, போட்டிருக்கும். சரியாகப் பார்.''

''போடவில்லையம்மா.''

''நட்சத்திரம் என்ன?''

''மகம்.''

''அதற்கும் நாழிகை போடவில்லையா?''

''இல்லையம்மா.''

''எனக்கு என்னவோ சந்தேகமாக இருக்கு. அது 'குமார விகடன்' காலண்டர்தானே?''

''ஆமாம்.''

''அப்படியானால் உனக்குத்தான் பார்க்கத் தெரியவில்லை. தினம் காலையில் என் ஆத்மா வந்து தேதி கிழித்து விட்டுப் பிறகு அன்றுடம் என்ன நட்சத்திரம், திதி, எத்தனை நாழிகை என்றெல்லாம் எனக்குச் சொல்லிவிட்டுத்தான் போவான். ஆனால் அவன் செத்துப் போன அன்றுதான் எனக்கு எதுவுமே சொல்லவில்லை. உனக்குத் தெரியுமோ? அவன் செத்துப்போனது அவன் பிறந்தநாளன்றுதான்.'' மேலும் ஏதேதோ அவள் புலம்பவே தனக்குத் தெரிந்தவரையில் அவளுக்கு ஆறுதல் கூறி விடை பெறுவது அவனுக்குப் பெரும் பாடாகி விட்டது.

''டாக்டர், நான் இந்த ஊருக்கு வந்து ஐந்து வருடங்கள்தான் ஆகின்றன. என்றாலும் எனக்கு இங்கு அநேகமாக எல்லோரையும் தெரியும். நீங்கள் சொல்லும் விஷயம் நம்பக் கூடியதாக இல்லை. நீங்கள் சொல்வது போலவே யாராவது திட்டமிட்டு இப்படிப் பண்ணியிருந்தாலும், யார் என்று எப்படிக் கண்டுபிடிப்பது? இது ஏன் தற்செயலாக நடந்த விபத்தாக இருக்கக் கூடாது?''

இன்ஸ்பெக்டர் ஆராவமுதம் இத்தகைய கேள்விகளைக் கேட்பார் என்று டாக்டர் எதிர்பார்த்திருந்தவராகவே தோன்றினார். ஆகவே ஒரு வறண்ட புன்சிரிப்புடன் அவருக்குப் பதில் சொல்ல முற்பட்டார்.

''இன்ஸ்பெக்டர் ஸார்! இறந்து போனது என் நண்பன். மேலும் வெகு காலமாக நான் அவனுக்கு டாக்டர். ஆகவே இரண்டு விதத்திலுமே அவனது இந்தத் திடீர் மரணத்தின் மர்மத்தைத் தெளிவாக்கும் பொறுப்பு எனக்கு இருப்பதாக நான் கருதுகிறேன். தயவுசெய்து என் மீது கொஞ்சம் நம்பிக்கை வைத்து என்னுடன் இன்று மாலை 'புவனா மாளிகை'க்கு வரவேண்டும். உத்தியோக ரீதியில் வேண்டாம். 'மப்டி'யில் எனது நண்பராக வந்தால் போதும்.''

சற்று நேரம் யோசித்த பிறகு ஆராவமுதம் சம்மதித்தார்.

அன்று மாலை ஆறு மணி. புவனா மாளிகையில் அம்புஜம், கார்த்திகேயன், கனகவல்லி, கமலநாதன், சிவகுருநாதன், சபேசய்யர், ஜம்பு, சுந்தரம், அன்னம், எல்லோரும் வீட்டின் பெரிய ஹாலில் கூடியிருந்தனர். ஒரு மூலையில் சோபாவில் பூரணி அம்மாளையும் கொண்டு வந்து உட்கார வைத்திருந்தனர். ஆத்மநாதனின் உயிலைப் படிப்பதற்காக வக்கீல் பராங்குசம் அன்று வர இருந்ததுதான் காரணம்.

பராங்குசம் மட்டும் வரப் போகிறார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு அவருடன் இன்ஸ்பெக்டர் ஆராவமுதமும், டாக்டர் ஜகதீசனோடு ஒரு புதியவனும் வந்திருப்பதைக் காண வியப்பாயிருந்தது. என்றாலும் பராங்குசம் படிக்கப்போகும் உயிலில் ஆர்வம் காட்டினர்.

ஆனால் பராங்குசத்துக்கு முன்பாக டாக்டர், ''உங்கள் அனைவருக்கும் அதிர்ச்சியைத் தரக் கூடிய மிக முக்கியமானதொரு விஷயத்தைக் கூற நான் கடமைப் பட்டிருக்


லதாவுக்குத்
தேவை பொங்கி வரும் நுரை
தீபாவுக்குத்
தேவை பொலிவு தரும் சலவை
ரம்யா
இவர்கள்
இருவரையுமே
திருப்தி செய்கிறது
NEW
RAMYA
DEEP CLEANSING DETERGENT
SCIENTIFICALLY TESTED FORMULA
-WASHES SPOTLESSLY CLEAN
பொங்கி வரும் நுரை-
பொலிவு தரும் சலவை
NEW
RAMYA
DEEP CLEANSING DETERGENT
இத்தரமான தயாரிப்பை அளிப்போர்:
அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, தமிழ்நாடு
விற்பனையாளர்கள்: பாரி & கம்பெனி லிமிடெட்
SAA UP/2120

பரபரப்பூட்டும்
நம்பகமான மூன்று புதிய
பாலிஸிகளைப் பற்றி அறிந்து கொள்ள
உங்கள் எல்.ஐ.சி. முகவரைக்
கண்டீர்களா ?



'குறித்த காலத்தில் பணம் பெறும் பாலிஸி'

மற்ற திட்டங்களை விட விரைவாகவும், அதிகமாகவும், பாலிஸி முதிர்ச்சி அடைவதற்கு முன்பே இடை இடையே குறித்த காலங்களில் பணத்தைத் திரும்பப் பெறலாம்.

தவிர, முழு ஆயுள் பாதுகாப்பும் கிடைக்கிறது.

'பணம் மற்றும் பாதுகாப்பு (கேஷ் அண்ட் கவர்) பாலிஸி'

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தவணைத் தொகைகள் நிச்சயமாகக் கிடைப்பதுடன், முழுக் காப்புத் தொகையின் மீதும் போனஸ் கிடைக்கிறது. இத்துடன் உங்கள் ஆயுள் முழுவதும் பாதுகாப்பு கிடைக்கிறது.

'வளரும் பாதுகாப்புப் பாலிஸி'

புதுப் பிரேரணையோ மருத்துவப் பரிசோதனையோ இன்றி, உங்கள் பாலிஸியின் மதிப்பு குறிப்பிட்ட காலங்களில் கூடிக் கொண்டே போகிறது.

மாறிவரும் காலங்களுக்கும்...
மாறிவரும் தேவைகளுக்கும்.

லைப் இன்ஷ்யூரன்ஸ்
கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

daCunha/LIC/38 TAM

கிறேன்'' என்றவர், சற்றுத் தயங்கி, நிறுத்தித் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மேலே தொடர்ந்தார்: ''நீங்களெல்லாம் நினைத்துக் கொண்டிருப்பதுபோல் ஆத்மநாதனின் மரணம் இயற்கையானதல்ல. அது திட்டமிட்டுச் செய்யப்பட்ட குரூரக் கொலை.''

''இல்லே, இருக்காது. பொய், நம்ப முடியாது. ஐயையோ'' என்ற இத்தனைக்கிடையிலும் 'உண்மையாகவா?' என்ற ஒரு குரலும் தெளிவாகக் கேட்டது. அதைக் கவனித்தும் கவனியாதவர் போல டாக்டர் மேலே பேசலானார்:

''வேறு எதுவும் சொல்வதற்கு முன்னால், என்னுடன் வந்திருக்கும் இந்தப் புதியவரை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். உங்கள் அனைவருக்குமே இவரிடம் பழக்கம் உண்டு. ஆனால் இவன் யாரென்று தெரியாது. சமையல் சபேசய்யர், டிரைவர் சுந்தரம், ஜம்பு, அன்னம் ஆகியவர்களைப் பொறுத்தவரையில் இவர் இந்த வீட்டில் வேலை தேடி வந்த ஓர் ஆள். பூரணி அம்மாள், அம்புஜம் ஆகியவர்களுக்கு இவர் ஆத்மநாதனின் உதவியால் படித்து முன்னுக்கு வந்த வாலிபர்; கமலநாதனைப் பொறுத்த வரையில் இவர் தம் எதிர்கால மனைவியை ரகசியமாகப் பார்க்க வந்த புது மாப்பிள்ளை.


இப்படி பலரிடம் பலவிதமாக நடித்த இவர் உண்மையில் ஒரு ஸி. பி. ஐ. அதிகாரி. பெயர் சம்பத். ஆத்மநாதனின் மரணத்தை யொட்டியல்ல; அதற்கு முன்பாகவே கூட இந்த வீட்டையும் இதிலுள்ளவர்களையும் இவர் கண்காணிக்க நேர்ந்தது. ஆத்மநாதனின் மரணத்துக்குப் பிறகு இவரது கண்காணிப்பு இன்னும் தீவிரமடைந்தது. உங்கள் அனைவரையும் வெவ்வேறு விதமாகச் சந்தித்திருக்கிறான்.''


அவர்கள் அனைவர் முகங்களிலும் ஏதோ ஒரு விதத்தில் ஏமாற்றப்பட்டு விட்ட கோபமும், அவமானமும் பிரதிபலித்தன. இதுவரையில் அனைவரையும் பார்த்துப் பொதுப்படையாகப் பேசிக் கொண்டிருந்த டாக்டர் இப்போது பூரணி அம்மாளிடம் சென்று அவளது வயோதிகத்தால் சுருங்கிய கையைப் பிடித்துக் கொண்டார்.

''அம்மா! ஆத்மாவின் மரணம் எப்படி நிகழ்ந்தது, எந்த முறையில் அவர் கொலை செய்யப்பட்டார் என்ற முக்கியமான விவரம் உங்கள் உதவியினால்தான் எனக்குத் தெரிய வந்தது. ஆனால் விஷயத்தைச் சரியாக ஊகித்த பெருமை சம்பத்தைச் சேர்ந்தது.''


உணர்ச்சி வசப்பட்ட டாக்டரால் அதற்கு மேல் பேச முடியவில்லை. சம்பத் தொடர்ந்தான்:

''டாக்டருக்குப் பதிலாக விவரங்களை நானே சொல்கிறேன். மூன்று நாட்களுக்கு முன்பு திருவாளர் ஆத்மநாதன் அவர்கள் காலமானார். நல்ல ஆரோக்கியமான மனிதரான அவரது மரணம் இயற்கையானதுதானா என்ற சந்தேகம் உடனடியாக மனதில் எழவே, டாக்டர் உடனே செய்ய வேண்டிய கடமையைச் செய்தார். அதாவது அவரது மரணத்தைப் பற்றி உங்களிடமெல்லாம் சொல்வதற்கு முன்னரே நர்ஸின்





புதிர் விடை :



உதவியுடன் 'ஸ்டமக் பம்பிங்' செய்ததோடு, 'ப்ளட் ஸாம்பிளும்' எடுத்துக் கொண்டார். அத்துடனில்லாமல் அவரது உடல் முழுதும் சந்தேகப்படக் கூடிய காயமோ, வேறெதுவுமோ இருக்கிறதா என்றும் கவனித்தார். இறந்தவரின் வலது கைக் கட்டை விரலிலும் ஆள்காட்டி விரலிலும் உள்புறத்து முனையில் ஊசியால் குத்தியது போன்ற இரு சிறு அடையாளங்கள் இருந்தன. சோதனையில் மிகக் கொடிய விஷம் ரத்தத்தில் கலந்து, மரணம் ஏற்பட்டதாகத் தெரிந்தது.

''நான் சந்தித்த நபர்களுள் ஒருவர் சமையல் சபேசய்யர். அவர் இரண்டு தலைமுறைகளாக இந்த வீட்டில் உழைப்பவர். சின்னையாவின் மரணத்துக்கு மிகவும் வருந்துகிறவர். அவர் மூலம் நான் தெரிந்து கொண்ட மிக முக்கியமான ஒரு விஷயம் தினசரிக் காலண்டரில் திருவாளர் ஆத்மநாதனைத் தவிர வேறு யாருமே தேதி கிழிக்கக் கூடாது. அப்படிச் செய்தால் அவருக்குக் கோபம் வரும். தினமும் தாமே தேதி கிழித்துப் பிறகு அன்றுடம் என்ன நட்சத்திரம், திதி, எத்தனை நாழிகை என்ற கணக்கெல்லாம் பார்த்துத் தம் தாயாரிடம் சொல்லிவிட்டு வருவது அவரது முதல் கடமை. அது முடிந்த பிறகுதான் காப்பியே சாப்பிடுவார். அவரது இந்த வழக்கம் இந்த வீட்டில் இருக்கும் அனைவருக்கும் தெரியும்.

''நான் பூரணி அம்மாளைப் பார்க்க வந்த அன்று என்னிடம் அன்றைய நட்சத்திரம், திதி இவற்றுக்கு நாழிகை பார்க்கச் சொன்னார்கள். காலண்டரில் போடவில்லை. ஆனால் அந்த அம்மாள் எனக்குப் பார்க்கத் தெரியவில்லை என்று முடிவு கட்டி விட்டார்கள். அப்போதுதான் எனக்குக் காலண்டர் தான்கள் மாற்றப் பட்டிருக்குமோ என்ற சந்தேகம் வந்தது.

'' காலண்டர் விஷயமும், டாக்டரின் 'டெஸ்ட் ரிஸல்ட்டும்' சேர்ந்து நடந்தது கொலைதான் என்பதை ஊர்ஜிதம் செய்தன. உடனே ஆத்மநாதன் மரணம் மூலம் யாருக்கு லாபம் எனக் கண்டறிய முயன்றேன். வேலைக்காரர்கள் அனைவரையும் லிஸ்ட்டிலிருந்து எடுக்க வேண்டியதாயிற்று. எஞ்சியவர்கள் உறவினர்கள்தாம்.''

இதற்கு மேல் அவன் சொன்னால் நன்றாயிராது என்று உணர்ந்த டாக்டர் அவனைக் கையமர்த்திவிட்டுத் தாம் பேசலானார்:

'''புவனா மாளிகை'யில் ஆத்மாவின் நிழலில் அவனை அண்டியிருந்து வரும் உறவினர்களில் பூரணி அம்மாளைத் தவிர மற்ற அனைவருக்குமே அவர் பேரில் ஏதோ ஒரு கோபம். அம்புஜத்துக்கு அவர் தமக்கு ஆதரவாக இல்லை. மகனையும், மகளையும் அளவு மீறிக் கண்டிக்கிறார் என்று தாங்கல்.

''கமலநாதன் அக்காள் புருஷனின் சம்பாத்தியத்தில் காலை நீட்டி உட்கார்ந்து கொண்டு சாப்பிட்டு ஊர் சுற்றும் மைனர். உருப்படியான வேலை எதுவும் தெரியாது. கனகவல்லிக்கும் அவனுக்கும் காதல். ஆண்பிள்ளையாய் லட்சணமாய் ஓர் உத்தியோகம் பார்த்து நீ சம்பாதித்தால்தான் என் மகளை உனக்குத் தருவேன் என்று கூறிவிட்டார் ஆத்மநாதன்.

''சிவகுருநாதனுக்கு அண்ணன் மகனாகிய தனக்கும் ஆத்மநாதன் தம் வியாபாரத்தில் பொறுப்பு தரக்கூடாதா என்ற தாபம்.

''கடைசியாகக் கார்த்திகேயன் விஷயம். ஆத்மநாதனின் மரணத்துக்கு முன்பிருந்தே ஸி. பி. ஐ. சங்கர் இந்த வீட்டையும் அதிலுள்ளவர்களையும் நோட்டம் பார்த்துக் கொண்டிருந்தார் என்று கூறினேன். அது கார்த்திகேயன் காரணமாகத்தான். ஆத்மநாதன் மரணத்துக்குப் பிறகு நியாயமான சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள மரணமுற்றவரின் டாக்டராகிய என்னைத் தேடி ஸி. பி. ஐ. சங்கர் வந்தார். நான் கண்டுபிடித்த விவரங்களை அவருக்குச் சொன்னேன். சங்கர் தாம் அறிந்திருந்த விவரங்களை எனக்குச் சொன்னார்...''

சற்று நேரம் மௌனத்தில் கரைந்தது. கார்த்திகேயன் மௌனத்தைக் கலைத்தான்.

''டாக்டர்! உங்கள் சந்தேகம் நியாயமானதுதான். அப்பாவுக்குச் சமமாக பிஸினஸ் பொறுப்புக்களை நானும் ஏற்றேன். கொஞ்ச நாட்கள் நன்றாகத்தான் எல்லாம் நடந்தது. அதன் பிறகுதான் என்னைப் பிசாசு பிடித்து விட்டது. இருக்கும் பணம் போதாதென்று கள்ளக் கடத்தலில் இறங்கினேன். போலீஸார் கண்களில் மண்ணைத் தான் தூவ முடிந்தது. ஆனால் அப்பாவை ஏமாற்ற வில்லை. அப்பா சாவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் விஷயத்தைக் கண்டு பிடித்தார். அம்மாவுக்கும் சொன்னார். எனக்குச் சரியாக ஒரு வார அவகாசம் தருவதாகவும் அதற்குள் இந்த வேண்டாத சகவாசங்களைத் தொலைத்துத் தலை முழுகி விடும்படியும் சொன்னார். இல்லாவிட்டால் தாமே போலீஸில் ரிப்போர்ட் கொடுத்து விடுவதாக வேறு பயமுறுத்தினார். ஆனால் டாக்டர், இந்த மாதிரி சட்ட விரோதமான காரியங்களில் இறங்கி விட்டால் பிறகு மீள முடியாது: மீள விட மாட்டார்கள். நான் சொல்வது இன்ஸ்பெக்டர் ஆராவமுதத்துக்குப் புரியும். என்னைப் போன்ற பலரைத் தமது ஸி.பி.ஐ. உத்யோகத்தில் சந்தித்திருக்கக் கூடிய சங்கருக்கும் புரியும். ஆக என்னை எதிர் நோக்கியது ஒன்று போலீஸ்விலங்கு அல்லது கூட்டாளிகள் கையால் மரணம். தப்புவதற்கு வழி தெரியவில்லை. ஏதேதோ குறுக்கு வழிகள் நினைத்தேன். ஆமாம், அப்பாவைக் கொலை செய்து விடுவது உட்பட! அதற்காகத்தான் அந்த விஷத்தை வாங்கி வைத்தேன். அது என் கடத்தல் கூட்டாளிகள் கொடுத்தது. ஆனால் டாக்டர்! நான் இரகசியமாகக் கொண்டு வந்த விஷம் காணாமல் போய்விட்டது. யார் எடுத்தார்களோ? சத்தியமாக அப்பாவை நான் கொல்லவில்லை. தயவுசெய்து என்னை நம்புங்கள்.'' குலுங்கிக் குலுங்கி அழுதான் கார்த்திகேயன்.

டாக்டர் ஜகதீசன் அவனைத் தட்டிக் கொடுத்து, ''கார்த்திக், நீ கொலை பண்ணவில்லை. என்பதும், உண்மையான கொலையாளி யார் என்பதும் எனக்குத் தெரியும்'' என்றார்.

ஒரு தரம் அனைவரது முகங்களையும் நன்றாகப் பார்த்த டாக்டர், ''நான் சொல்ல வேண்டியது இன்னும் கொஞ்சம்தான் பாக்கி. அதையும் சொல்லி விடுகிறேன். தினம் காலையில் ஆத்மநாதன் தேதி கிழிப்பது வழக்கம். இதை அறிந்த கொலையாளி முதல் நாள் இரவே நான்கைந்து குண்டூசிகளில் விஷ மருந்தைத் தடவித் தேதி கிழித்தால் கையில் நிச்சயம் குத்தக் கூடிய இடத்தில் வைத்து விட்டான். கையில் ஊசி குத்தியவுடன் வாயில் வைத்துச் சப்பியதில் விஷம் வயிற்றுக்குள் போய்விட்டது. கையில் குத்தியதால் இரத்தத்திலும் விஷம் கலந்துவிட்டது. உடனே ஒரு தலை சுற்றலும் படபடப்பும் ஏற்படவே ஆத்மாவுக்கு மற்ற எல்லாம் மறந்து போயிற்று. காலண்டரில் இன்று மட்டும் ஏன் ஊசி குத்தியது என்பதைக் கவனிக்க மறந்தார். கொஞ்ச நேரம் சிரமத்துடன் தாமே திண்டாடிய பிறகு எனக்கு போன் செய்தார். நான் ஆத்மாவின் உயிர் காக்கப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த வேளையில் கொலையாளி, வீட்டின் பரபரப்பைப் பயன்படுத்திக் காலண்டரில் இருந்த குண்டூசிகளை எடுத்துவிட்டுக் காலண்டர் தாள்களையும் மாற்றியிருக்க வேண்டும். கொலையாளி கவனிக்கத்தவறிய விஷயங்கள் இரண்டு. ஒன்று, மாற்றிய தாள்களில் முந்தியவை போல் நாழிகைக் கணக்கு இல்லாதது. இரண்டு, கண் தெரியாததாலேயே காதுகள் கூர்மையாக இருக்கும் பூரணி அம்மாளின் அறையிலேயே காலண்டர் இருப்பது. நான் ஆத்மநாதனின் முடிவுக்குப் பிறகு கீழே இறங்கியபோது கொலையாளியைக் கூப்பிட்டுத்தான் பூரணி அம்மாள் நட்சத்திரம் பார்க்கச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.''

''நான் கனகாவைத் தானே கூப்பிட்டேன்'' என்றாள் பூரணி அம்மாள்.

''ஆமாம் அம்மா. அவள் தான் வந்து காலண்டர் தாள்களை மாற்றியவள். கல்யாணத்துக்கு முன்பே தாயாகி விடுவோமோ என்ற நிலையில் திருமணத்துக்குக் குறுக்கே நின்ற அப்பாவையே கொலை செய்து விட்டாள். அப்படித்தானே கனகா?'' டாக்டர் சொல்லி முடித்ததும் கலகலவென்று பைத்தியக்காரச் சிரிப்புச் சிரித்த கனகா சற்றைக்கெல்லாம் கண்கள் செருகத் தள்ளாடிக் கீழே சாய்ந்தாள். அவள் அப்பாவுக்குக் கொடுத்த விஷத்தின் மீதியிலேயே தனக்கும் முடிவு தேடிக் கொண்டு விட்டாள்.

ஒவ்வொரு தாயும் தன் குழந்தையின் உணவு பற்றி என்ன அறிய விரும்புகிறாா்?

அமுல்ஸ்ப்ரேயில் என்ன கிடைக்கிறது?

கே. என் குழந்தை ஆரோக்கியமாகவும் வலுவுட்டனும் வளருவதற்குத் தேவையான வைட்டமின்கள், கனிஜ பொருட்கள் மற்றும் புரதங்கள் அமுல்ஸ்ப்ரேயில் உள்ளனவா?

அமுல்ஸ்ப்ரேயில் பாலில் காணப்படும் எல்லா இயற்கையான சேர்க்கைப் பொருட்களும், கூடவே வைட்டமின்கள் மற்றும் கனிஜ பொருட்களும் உள்ளன. வைட்டமின்கள் நோய்த் தொற்றை எதிர்க்க, நன்ருக பசி எடுக்க, ஆரோக்கியமான நரம்புகள், ஈறுகள், கண்கள் மற்றும் பற்களுக்கு. நியாஸின்—சீரண சக்தியை வளர்க்க, உட்டல் உறிஞ்சிக் கொள்ள, மற்றும் ஆரோக்கியமான சருமத்துக்கு. கால்ஷியம், பாஸ்பரஸ் போன்ற கனிஜ சத்துக்கள் எலும்புகள் சீராக அமைய. இரும்புச் சத்து—ரத்த அமைப்புக்கு. புரதம், செல் அமைப்புக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையானது. அமுல்ஸ்ப்ரேயில் தரமுயர்ந்த புரதங்கள் போதிய அளவில் இருக்கின்றன.

கே. என் குழந்தையால் அமுல்ஸ்ப்ரேயை சீரணிக்க முடியுமா?

ஒவ்வொரு சொட்டுப் பாலும் மிக நுண்ணிய பவுடராக மாற்றப்படுகிறது. கொழுப்பும் அவ்வாறே மாற்றப் படுகிறது. இதனுல் குழந்தை இதை எளிதில் சீரணிக்க முடிகிறது—பிறந்த சில நாட்களான குழந்தையால் கூடத்தான்.

கே. அமுல்ஸ்ப்ரேயைத் தயாரிக்க நேரமாகுமா?

ஸ்ப்ரே-ட்ரை முறையால் தயாரிக்கப்படும் நுண்ணிய பவுடரான அமுல்ஸ்ப்ரே சுவையானது; விரைவில் தயாரிக்கக்கூடியது; எளிதில் கரைகிறது. இது பாட்டிலின் நிப்பிள் துவாரத்தில் அடைத்துக் கொள்வதில்லை. எனவே குழந்தை அதிக காற்றை விழுங்குவதில்லை.

கே. குழந்தைக்கு அமுல்ஸ்ப்ரே தருவதுடன், பாலஅமுல் எப்பொழுது தரத் தொடங்க வேண்டும்?

3-வது மாதத்தில் (அல்லது அவன் பெரியவனுகிவிட்டான் என்று டாக்டர் கூறும்போது) உங்கள் குழந்தைக்கு, அமுல்ஸ்ப்ரேயைத் தவிர, பாலஅமுல் தானிய உணவு தரத் தொடங்குங்கள்.

பாலஅமுல், முன்கூட்டியே பாலில் சமைக்கப்பட்ட குழந்தை உணவு. மற்ற தானிய உணவுகளைக் காட்டிலும் பாலஅமுலில் அதிக புரதமும், வைட்டமின் ஏ-யும் உள்ளன. தவிர, இந்த வயதில் குழந்தை வேகமாக வளருவதற்கு அவசியமான, நன்கு சமனிலை பெற்ற முழுமையான ஃபார்முலா பாலஅமுலில் அடங்கி இருக்கிறது. எனவே உங்கள் குழந்தைக்கு பாலஅமுல் உகந்தது.

இலவசம்:

அமுல் குழந்தை புத்தகம் மற்றும் பாலஅமுல் புத்தகம்—அதிக விபரங்களுக்கு. எழுதவேண்டிய முகவரி: த.பெ. எண் 10124, பம்பாய் 400 001. 60 பைசா தபால் தலையுடன் உங்கள் முழு முகவரியையும் அனுப்புக.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது

விற்பனைக்கு விடுப்போர்: குஜராத் கோ-ஆப்பரேட்டிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட், ஆனந்த்.

Indian Standards Institution

ASP-AS-29A

மகளிர் பகுதி...

ஜெர்மனியில் கற்றுக்கொண்ட குறள்!

எனக்கு அப்போது பன்னிரண்டு வயதிருக்கும். என் அப்பாவின் வேலை காரணமாக, என் பெற்றோரும், நானும் நான்கு ஆண்டுகள் மேற்கு ஜெர்மனியில் இருக்க வேண்டியிருந்தது. ஒரு சமயம் நாங்கள், எங்கள் காரில், பான் நகரில் போய்க் கொண்டிருந்தோம். வழியில் ஒரு போலீஸ்காரர் வண்டியை நிறுத்தினர். நாங்கள் வண்டியைத் தொடர்ந்து செலுத்த அனுமதி கொடுக்காது வெகு நேரம் தாமதித்தார். என் தந்தைக்கு அவசர வேலை இருந்ததால், இத் தாமதம் காரணமாய்க் கோபம் வந்து விட்டது. 'ஜெர்மனி தானே' என்ற எண்ணத்தில், அப்போலீஸ்காரரைப் பற்றி, என் தாயாரிடம், அவன் காதில் படும்படியாகவே கண்டபடி இரைந்தார். அவர் திட்டி ஓய்ந்த பின், அந்தப் போலீஸ்காரர் என் தந்தை அருகே வந்து நிதானமாக, ''நானும் சென்னையில் பத்து வருடங்கள் இருந்திருக்கிறேன்'' என்று தமிழில் கூறிவிட்டுச் சென்றார். என் தந்தையின் முகத்தில் ஈ ஆடவில்லை. அப்போதுதான் எனக்கு,

''யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு''

என்ற திருக்குறளின் பொருள் நன்றாகப் புரிந்தது.

- ரூபராதா



எனக்கென்று இருபது நிமிஷம்!

எனக்கு இருபத்தி மூன்றுவது வயது தொடங்கிய சில தினங்களுக்குள்ளேயே தலை முடி இங்கொன்றும் அங்கொன்றுமாக நரைக்கத் தொடங்கி விட்டது. எதனால் என்பது புரியவில்லை. ஆரம்பக் காலத்தில் நானும் அதனுடன் போராட்டம் நடத்திப் பார்த்தேன். பல கூந்தல் தைலங்களை உபயோகித்தும், பயன் இல்லை. டாக்டரிடம் ஆலோசனை கேட்டு வைட்டமின் மாத்திரைகளையும் இரும்புசத்துள்ள டானிக்குகளையும் விழுங்கி வைத்தேன். இளநீர், தேங்காய்ப் பால் என்று (தேங்காய் விற்ற விலையையும் பாராட்டாமல்) கூந்தலில் தடவிக் கொண்டு (அதற்கு வந்த யோகத்தைப் பாருங்கள்!) பார்த்தேன்.

வெள்ளரிக்காய், எலுமிச்சை என்று கறிகாய்களின் வரிசையும் தொடர்ந்தது. (பூசணிக்காய் நீங்கலாக வேறு எதையும் விட்டு வைக்கவில்லை!)

மேற்சொன்ன காய்கறிகளை அரைத்தோ ரசம் எடுத்தோ கூந்தலில் பூசிக் கொண்டு குளித்துப் பார்த்தேன். (என் கணவருக்குத் தெரியாமல்தான். தெரிந்திருந்தால் பைத்தியக்கார 'ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டிருப்பார்.) எதுவுமே பயன் தருவதாக இல்லை.

அப்போது பத்திரிகையொன்றில் வந்த விளம்பரம் தெம்பூட்டுவதாக இருந்தது: ''நரையற்ற முடியுடன் குறைவற்ற இளமையோடு விளங்குங்கள். குருவி மார்க் எண்ணெயை உபயோகித்து உத்தரவாதமுள்ள கருநிறக்கூந்தலைப் பெறுங்கள். திருப்தியில்லையேல் பணம் வாபஸ்.'' குறிப்பிட்ட விலாசத்துக்கு எழுதி வி. பி. பி.யில் அனுப்பும்படி கோரி இருந்தேன்.

தபால்காரர் வருகைக்காகத் தவம் கிடந்தேன். ஒவ்வொரு நாளாக நகர்ந்து கடைசியில் நாட்கள் நொண்டத் தொடங்கி விட்ட சமயம், (நிதி நிலைமையைப் பொறுத்தவரை சொல்கிறேன்) இருபத்தி ஐந்தாம் தேதியன்று மத்தியானம் சற்று கண்ணயர்ந்த நேரத்தில் தபால்காரரின் குரல் கேட்டு அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தேன்.

நான் எதிர்பார்த்தபடியே தைலம் வந்திருந்தது. தபால் செலவு உட்பட முப்பது ரூபாய் சொச்சம் தர வேண்டும் என்றதும் நான் மாட்டிக் கொண்ட கள்ளக் கடத்தல்காரரைப் போன்று விதிர்த்துப் போனேன்.

பர்ஸைத் துழாவியபோது நான்கே பத்து ரூபாய் நோட்டுக்கள் தட்டுப்பட்டன. அதில் முப்பது சொச்சம் போய்விட்டால்... மீதி நாட்களை எப்படிக் கழிப்பது? அதிலும் அம்மாதம் முப்பத்தொரு தேதி! எப்படியும் இழுத்துப் பிடிக்கலாம் என்ற துணிவில் பணம் கொடுத்துப் பெற்றுக் கொண்டேன். அடுத்த வீட்டு அருந்ததி எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்டு வந்து விட்டாள். அவளிடமிருந்து பார்ஸலை ஒளித்துத் தப்ப அரை மணியாயிற்று.

கதவைத் தாளிட்டுக் கொண்டு பார்ஸலைப் பிரித்தேன், பிரித்தேன், பிரித்துக் கொண்டே இருந்தேன்.

உள்ளிருந்த வைக்கோல்கள், காகிதத் துண்டங்களை அகற்றிய பின் முக்கால் சாண் சீசா ஒன்று நிமிர்ந்து நின்றது. அதைக் கையில் எடுத்துப் பார்த்தேன். பாட்டிலின் மீது குருவிப்படம். உள்ளே திரவம். தேங்காய் எண்ணெய் போல் இருந்தது. அடுத்துப் பெரிய குருவிக்குத் தோழகை ஒரு சின்னக் குருவி படம் உள்ள குப்பி தென்பட்டது. அதில் மையப் பொடித்த கரித்தூள் மாதிரி ஒரு பொடி. உபயோகிக்கும் முறை விளக்கத்தைப் படித்ததும் தூக்கிவாரிப் போட்டது.

ஒவ்வொரு முறை அந்த எண்ணெயை உபயோகிக்கும் முன்னர் ஒரு கிண்ணத்தில் அந்த எண்ணெயை ஒரு ஸ்பூன் விட்டு ஒரு சிட்டிகை பொடியைப் போட்டு ஐந்து முதல் பத்து

பஞ்சு...சொஞ்சு!

அப்போது நாங்கள் கங்கிணி குப்பம் என்கிற கிராமத்தில் இருந்தோம். என் பெரிய சகோதரிக்கான வரன் வேட்டையில் என் தந்தை மும்முரமாக ஈடுபட்டிருந்த சமயம். ஒருநாள் ஒரு முதியவரும் இளைஞரும் எங்கள் வீட்டுக்கு வந்தனர். எங்கள் தந்தையின் பெயரைக் கூறவே என் சகோதரர்களும் அவர்களை வரவேற்று உள்ளே அமரச் செய்தனர். தந்தை வெளியில் சென்றிருந்தமையால் அவர்கள் வந்திருக்கும் காரணத்தை வினவினர். வந்தவர்களோ 'நாங்கள் கடிதம் போட்டிருந்தோமே இன்று பெண் பார்க்க வருவதாக' என்று கூறினர்.

ஒரு சகோதரன் தந்தையை அழைத்துவர ஓட, என் தாயோ என் சகோதரியை அலங்கரிக்கச் சொல்லித் துரிதப்படுத்தி விட்டு, டிபன் காப்பி தயாரிப்பதில் ஈடுபட்டாள்.

என் தந்தையும் வந்தார். இப்போது மூவரும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர். அப்போதுதான் உண்மை புரிந்தது. அந்தத் தெருவில் நான்கு வீடுகள் தள்ளி இருக்கும் வீட்டில் இருப்பவரின் பெயரும் என் தந்தையின் பெயரும் ஒன்றே. அந்த வீட்டுக்குச் செல்ல வேண்டியவர் எங்கள் வீட்டுக்குத் தவறுதலாக வந்து விட்டார்கள். ஹாலில் நடந்த இந்த உரையாடல்கள் அம்மாவுக்கும் அக்காவுக்கும் எட்டுவதற்குள் அம்மா, அக்காவிடம் டிபன் கொடுத்து ஹாலுக்கு அனுப்பி விட்டாள். பிறகென்ன! வந்தவர்களும் பெண்ணைப் பார்த்தனர். 'நல்ல அழகு; அடக்கம். பிராப்தம்' என்று எண்ணி முழு மனத்துடன் திருமணத்துக்குச் சம்மதித்து விட்டனர். இது நடந்து இருபது ஆண்டுகள் ஆகி விட்டன.

நான்கு வீடுகள் தள்ளி இருந்த வீட்டுப் பெண் பிறகு எங்கள் மாமாவுக்கு மனைவியானாள்.

— கிருஷ்ணப் பிரேமி

நிமிடம் வரை கலக்க வேண்டுமாம். அது சேர்ந்து கொண்டதும் தலையில் பிரட்டும்படி கண்டிருந்தது. பாட்டிலைத் திறந்தால் அதன் நெடி வயிற்றைப் புரட்டி எடுத்தது. அதை உபயோகிக்கவும் மனமில்லை, கொட்டவும் முடியவில்லை. அது என் அலமாரியில் சிறிது காலம் அஞ்ஞாத வாசம் செய்து விட்டு வீடு மாற்றிய பொழுது குப்பைத் தொட்டியைச் சரண் அடைந்தது. என்னுடைய நரையும் அதிகரித்தது. குடும்பமும் வளர்ந்து அதிகமாயிற்று.

நான் விளம்பரங்களில் கண்ட வேறொரு சாயத்தை வாங்கி வந்தேன். அதைப் பயன்படுத்தும் முறை சுலபமாக இருந்தது. முதலில் அதைத் தலையில் தேய்த்துக் கொண்டு பத்து நிமிடங்கள் ஊற வேண்டும். பின் மேலே ஷாம்பூவைத் தடவி இன்னொரு பத்து நிமிடங்கள் ஊற விட்டுப் பின் தண்ணீரில் கழுவி விடலாம்.



சாய பாட்டிலை எடுத்துக் கொண்டு நான் குளியலறையை அணுகும் பொழுதுதான் இல்லாத பிரச்னைகள் எல்லாம் முளைத்துவிடும். எல்லாரும் அவசரப்படுவார்கள். எனக்காக என்று ஒருநாளில் இருபது நிமிடங்களைக் கூடவா செலவிட்டுக் கொள்ள முடியாது? நினைத்தாலே எனக்கு அழுகையாக வரும்.

எல்லோரும் பள்ளிக்கூடம் ஆபீஸ் என்று கிளம்பிப் போகத் தண்ணீரும் போய் விடும். அப்புறம் எப்படிக் குளிப்பது?


மாலைவேளையில் செய்து கொள்ளலாம் என்றால் அது வேறு விதமான கஷ்டம். தலையில் ஒரு கை வைத்துக் கொள்ளப்போகும் போது மிஸஸ் ஓஜா அவசரமாக டெலிபோனில் கூப்பிடுவாள்.

ஒரு பெண்ணானவள் தனக்கென்று ஒரு சில நிமிடங்களைக்கூட ஒதுக்கிக் கொள்ள முடியாத அளவுக்குக் குடும்பத்தில் எத்தனை பொறுப்புக்களும் பிரச்னைகளும் அவளைச் சூழ்ந்து நிற்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கும்போது பெருமையாகத் தோன்றும். அதே நேரத்தில் கண்களில் துளிக்கும் நீரைத் தவிர்க்க முடியாதவளாகவும் இருப்பேன்.

ஒருநாள் என் பெரிய பெண் தன் தோழி வீட்டில் ஏதோ விசேஷம் என்று அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டாள். நான் அவளை அருகில் அழைத்து என் கழுத்தில் தொங்கிய இரட்டை வடம் சங்கிலியை அவளுக்கு அணிவித்து விரல்களைச் சொடுக்கி திருஷ்டி கழித்தேன். அவள் தன் புடவை கசங்குமே என்று கூடப் பாராமல் அப்படியே என்னைக் கட்டிக் கொண்டாள். அம்மா நீதான் எத்தனை அழகு! எவ்வளவு பொறுமையாக அழகாகக் குடும்ப பாரத்தை யெல்லாம் தாங்குகிறாய் என்று சொன்னாள். அவள் போன பிறகு என்னை நானே கண்ணாடியில் பார்த்துக் கொண்டேன். நெற்றியில் இருபுறமும் இருந்த நரை அப்போது வருத்தம் தரவில்லை. அந்தக் கணத்திலிருந்து நரையைக் கறுப்பாக்கும் என் முயற்சியைக் கை விட்டேன். — லட்சுமி ரமணன்

டினோபால்*பெறும் புதிய பெயர்


ரானிபால்+



ரானிபால்+
(பருத்தித் துணிகளுக்கு)



ரானிபால்+-எஸ்
(செயற்கை இழை மற்றும் கலப்பு இழைத் துணிகளுக்கு)



அதே பொருள், அதே திறன், ஆனால் பெயர் மட்டும் புதிது !

சிறந்த வெண்மைச் சலவைக்கே ரானிபால்+

Suhrid Geigy LIMITED

+ சுஹ்ரித் கெய்கீ லிமிடெட்டின் ட்ரேட் மார்க் ஆகும்
• ஸிபா கெய்கீ லிமிடெட்டின் லைசென்ஸ்படி முன்னாளில் விற்பனை செய்யப்பட்டது.

Shilpi SGT 6A/76 tam

ஆயிரம் பிறை கண்ட 'அண்ணா'

'அண்ணா' என்றால் ஆஸ்திகப் பெருமக்களுக்குப் பண்பாளர் ஸ்ரீ என். சுப்பிரமணியம் அவர்கள்தாம்! பண்பு என்றால் என்ன? வெளி நடக்கையிலே காட்டுகிறாரே அந்த நாகரிக பக்குவம் மட்டும்தானா? அல்ல. உள்ளுக்குள்ளேயே பண்பட்ட இதயம் பெற்ற சான்றோர் நம் அண்ணா சுப்பிரமணியம் அவர்கள். அன்பு, பக்தி, ஞானம், ஸாதனை, படிப்பு, அடக்கம், அமைதி, சமத்வம், வைராக்கியம் இப்படி எல்லாவற்றின் உயர் நிலைகளை அறிந்தவராக விளங்குபவர் அவர்.

மெத்தப் படித்தவர், மகா பெரிய சாக்த உபாசகர் என்றால் நமக்குக் கொஞ்சம் நெருங்கவே தயக்கமாகத்தான் இருக்கும். ஆனால் பராசக்தியிலேயே முழுகியிருந்து, பண்டிதோத்தமராலும் போற்றப்பட்ட போதிலும் பச்சைக் குழந்தையாக அனைவருடனும் பழகி வந்த பரமஹம்ஸ ராமகிருஷ்ணரை குரு மஹாராஜாகக் கொண்ட அண்ணா அதற்கேற்ப ஸௌலப்யத்தின் வடிவமாக இருப்பவர்.

ஆதியில் மயிலை ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தில் பயின்ற ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் ராமகிருஷ்ண தர்மத்தையே வாழ்விலும் சதா பயின்று அதிலேயே பழுத்தவர். அவரது வெளிவாழ்வும் பல விதங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனுடனேயே பிரிக்க முடியாமற் பிணைந்தது. மாணவர் இல்ல ஸ்தாபகர்களான ஸ்ரீ ராமு — ராமாநுஜ சோதரருக்கு இன்னொரு சோதரரானார். அதுமட்டும்தானா? அனைவருக்குமே மூத்த சகோதரராக, 'அண்ணா' வாக ஆனார். ஸ்ரீ ராமகிருஷ்ணா ரெஸிடென்ஷியல் பள்ளியிலே உத்தியோகமேற்ற ஸ்ரீ சுப்பிரமணியம், மாணவர்களுக்கு ஆசிரியராக — 'ஸார்'—ஆக இல்லாமல், தம்மை அண்ணாவாக்கிக்கொண்டு, அவர்களை அப்படியே அழைக்கச் செய்தார். பிற்பாடு தி. நகரின் புகழ் கொண்ட ராமகிருஷ்ணா ஹைஸ்கூல் (மெயின்) தலைமை ஆசிரியராக நற்பணி ஆற்றினார்.

பள்ளி ஆசிரியர் மட்டுமல்ல; சமயாச்சாரியரும் ஆவார் நம் அண்ணா. ஆதியிலிருந்தே 'கிருஷ்ண கர்ணாம்ருதத்தி'லும், தாயுமானவர் பாடலிலும் ஆழத் திளைத்திருந்த அண்ணா பிற்பாடு ஆன்மிக — ஆஸ்திக நூல்களிலெல்லாம் வல்லுநர் ஆனார். தாம் பெற்ற இன்பத்தைத் தரணிக்கெல்லாம் தரும் எழுத்தாற்றலாலும், பேச்சாற்றலாலும் அரும்பணி செய்திருக்கிறார். இன்று எண்ணிலடங்காத தமிழர்கள் கீதை, உபநிஷதங்கள், ஸஹஸ்ர நாமாதி ஸ்தோத்திரங்கள், தேவீ மாகாத்மியம், ஸ்ரீ வித்யா நூல்கள், பூஜா பக்தி, பாகவதம் இவற்றை அண்ணாவின் தமிழுரைகளால்தான் அறிந்து, அரிய பயன் பெற்றிருக்கிறார்கள். மூலத்தை வெகு அழகாகவும், நயமாகவும் மொழிபெயர்ப்பதோடு வடமொழி, தென்மொழி மேற்கோள்களால் அவர் ஆங்காங்கும் ஒப்புவமை காட்டுவது கற்றோரையும் மற்றோரையும் வெகுவாக ஈர்ப்பதாகும்.

காஞ்சி உபநிஷத் பிரம்மேந்திர மட சம்பிரதாயத்திலிருந்து அரிய மந்திரோபதேசங்களைப் பெற்று, அவற்றில் ஸித்தி எய்திய அண்ணா அநேகருக்கு மந்திரோபதேச குருவாகவும் விளங்குகிறார்.

ஓரளவு காலப் போக்குக்கு வளைந்து கொடுக்கும் சீர்திருத்த அம்சங்களைக் கொண்ட ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தில் அவர் சங்கமித்தபோதிலும் அதே போதில் தூய வைதிக நெறிகளைத் தனி வாழ்வில் பின்பற்றி வரும் செவ்வியை நம் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களே பதினெட்டாண்டுகளுக்கு முன் சென்னையில் பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.

தற்போது மயிலை மாணவர் இல்லக் காரிய தரிசியாகவும், விவேகானந்தக் கல்லூரிக் குழுத் தலைவராகவும் இருக்கிறார்.

சுத்தாத்மாவான அண்ணாவின் வாய்மொழி போதனையில் மட்டுமின்றி அவரது வாழ்க்கை உதாரணத்தாலேயே பலர் அவரிடம் கவரப்பட்டு அன்பும் ஆழ்ந்த மரியாதையும் செலுத்தி வருகின்றனர். கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில் பகவான் கூறும் ஸ்திதப் பிரக்ஞ லக்ஷணம், 12ம் அத்தியாயத்தில் கூறும் பக்த லக்ஷணம், 13ம் அத்தியாயத்தில் கூறும் ஞானி லக்ஷணம், 14ம் அத்தியாயத்தில் சொல்லும் குணாதீதன் லக்ஷணம், 16ம் அத்தியாயத்தில் விளக்கும் தெய்வ சம்பத்துடன் பிறந்தவனின் லக்ஷணம் இவை யாவும் கிட்டத்தட்ட ஒருபோலத்





செய்தி மணிகள்



● பெருமளவு உயிர்ச் சேதத்தையும், பொருட் சேதத்தையும் ஏற்படுத்துவது 'பூகம்பம்'. பூகம்பம் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் ஓர் ஆண்டில் சராசரி எத்தனை பூகம்பங்கள் ஏற்படுகின்றன என்ற விஷயம் தெரியுமா? ஓர் ஆண்டில் சராசரி ஒரு மிகப் பெரிய பூகம்பம் ஏற்படுகிறது. 10 பெரிய பூகம்பங்கள் ஏற்படுகின்றன. அழிவை விளைவிக்கும் 100 நில நடுக்கங்களும், சேதத்தை ஏற்படுத்தும் 1000 நில நடுக்கங்களும், 10,000 சிறிய — அதே நேரத்தில் வலுவான நில நடுக்கங்களும் ஏற்படுகின்றன. இப்படிப் பெரிய அகன்ற நிலப்பரப்பில் மொத்தம் சுமார் 1 லட்சம் நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன. மிகச் சிறிய நில அதிர்ச்சிகளையும் கணக்கில் சேர்ப்போமானால் நில நடுக்கங்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 10 லட்சத்தை எட்டிப் பிடிக்கும். அடே...ங்... க...ப்பா! இந்திய பூகம்ப பொறியியல் வல்லுனர்கள் தரும் பட்டியல் — 'பூகம்பம்' பற்றிய இந்தப் புள்ளி விவரம்!

● 'விமானக் குறிப்பேடு' — விமான ஓட்டிகளுக்குத் தேவையான தகவல்களைக் கொண்டது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி இலாகா இக் குறிப்பேட்டை வெளியிட்டுள்ளது. இப்படியொரு குறிப்பேடு இந்தியாவில் வெளியிடப்படுவது இதுவே முதல் முறை. ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலத்தில் விண்வெளி கிரகங்களின் அமைப்பு இக்குறிப்பேட்டில் விவரிக்கப்பட்டுள்ளது. விமானம் செல்வதற்கான வழிகளைத் தீர்மானிக்க இக்குறிப்பேடு பெரிதும் உதவியாக அமையும். இந்தக் குறிப்பேடு முன்பு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. இனி அதற்கு ஒரு முற்றுப்புள்ளி.

● கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்று போலந்து. சோவியத் ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக இதற்கும் ஒரு பெருமை உண்டு. அதாவது இந்தியாவுடன் பெரும் வர்த்தகத் தொடர்பு கொண்டுள்ள 2-வது நாடு — போலந்து. 1975-ம் ஆண்டில் இந்தியா — போலந்து நாடுகளுக்கு இடையில் ரூ. 200 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளது.

● விவசாயத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து உணவு உற்பத்தியைப் பெருக்கும் விவசாயிகளுக்குக் கல்வி அறிவூட்டும் பணி மத்திய அரசின் திட்டம். விவசாயிகளுக்குக் கல்வி அறிவூட்டும் பணி 144 மாவட்டங்களில் தீவிரமாக அமுல் நடத்தப்பட்டு வருகிறது. சுமார் 3 லட்சத்து 24 ஆயிரம் முதியோர்கள் கல்வி அறிவு பெற்று வருகின்றனர். பசுமைப் புரட்சிக்கு இது மிகவும் அவசிய மல்லவா? கல்வி அறிவு உள்ள விவசாயிதானே நவீன விவசாய நுணுக்கங்களை உணர்ந்தறிந்து பயன்படுத்த முடியும்?

● ''பச்சைப் பசேலென்று இந்தியாவைப் பசுமையாக்குங்கள்'' — 1976, ஜூன் மாதம் தேசிய அளவில் விடப்பட்ட ஒரு வேண்டுகோள், இது. 'மரங்கள் நடுதல்' என்பதே இந்த வேண்டுகோள். 1976—77 ஆண்டில் இதுவரை நாம் நட்டிருக்கும் மரங்களின் எண்ணிக்கை என்னவாக இருக்கும்? 10 கோடியே 20 லட்சம் மரங்கள். 'நிஜமாகவா' என்கிறீர்களா? இது போதாது. மேலும் நடுங்கள்!

தான் இருக்கும். அது எப்படி இருக்கும் என்றால், அண்ணாவைப் போல் இருக்கும் என்று சொல்லி விடலாம். வெளி வாழ்வில் அவருக்கும் இடிகள் இடித்தது உண்டுதான். ஆயினும் சாந்தி குலையாமல், பக்தி தளராமல் இன்னியல்பினராக, இன்பராக வாழ்ந்து வருகின்றார். பொருள், பதவி, எதிலும் பற்றில்லாமல், இல்லறத்திலேயே துறவறத்தைச் சிறப்புற நடத்திக் காட்டி வருகின்றார்.

இப் பெரியாரிடம் நாம் கொண்டுள்ள நன்றிக் கடனையும் அன்பையும், ஆழ் மதிப்பையும் உருக் கொடுத்துக் காட்ட இப்போது ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எண்ணி மகிழ்வதற்கு இனிய எண்பதாண்டுகளைக் கடந்த அண்ணா சமீபத்தில் சகஸ்ர சந்திர தரிசனம் செய்து சதாபிஷேகத்துக்கு உரியரானார். அவர்களைப் போற்றி, விழா எடுத்து, காணிக்கை செலுத்துவதற்காக டாக்டர் வி. ராகவாச்சாரியின் தலைமையில் பெருமக்கள் குழுவாக அமைந்து ஏற்பாடுகள் செய்து வருகின்றார்கள். அதிலே கலந்து கொண்டும்,

Treasurer: Sri Anna Subramaniam Satabhishekam Celebration Committee, C/o Sri Ramakrishna Mission Students Home, Mylapore, Madras-600 004

என்ற முகவரிக்குப் பொருள் அனுப்பி வைத்தும் அண்ணாவுக்கு நம் உள்ளார்ந்த நமஸ்காரங்களைத் தெரிவிப்போமாக!

அவன் பார்த்துப்பான்

காட்சி 14

(சிவராமன் வீடு. ஆனந்த் அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே வருகிறான். கல்யாணி கோவிலிலிருந்து வருகிறாள். அவளை நோக்கி ஆனந்த் வெறுப்புடன் அறைச் சாவியை விட்டெறிகிறான்.)

கல்யாணி: சாவி மேலே ஏன் இந்தக் கோபம்?

ஆனந்த்: கோபம் சாவி மேலே இல்லே. உங்க மேலதான்.

கல்யாணி: ஏன்?

ஆனந்த்: இரண்டு நாளா ஆள் கண்ணுலேயே தட்டுப்படக் காணுமே!

கல்யாணி: உங்க முன்னாடி நிக்க எனக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை.

ஆனந்த்: தாழ்வு மனப்பான்மையா? ஏன்?

கல்யாணி: ஏன்னு மட்டும் கேட்காதீங்க.

ஆனந்த்: கல்யாணி! நான் எதாவது தப்பாச் சொல்லியிருந்தா மன்னிச்சிடுங்க.

கல்யாணி: நீங்க எதுவும் தப்பா சொல்லல்லே! ஆனா...ஆனா நீங்க விரும்பறது.

ஆனந்த்: எங்கே? என்னைப் பார்த்துச் சொல்லுங்க. நான் மட்டும்தானா?

கல்யாணி: நாம விரும்பறது நடக்காது...

ஆனந்த்: ஏன்....?

கல்யாணி: என் வாழ்க்கை ஓர் இறந்தகாலம்.

ஆனந்த்: பாஸ்ட் இஸ் பாஸ்ட்... நடந்தது நடந்து போச்சு! உங்கள் கடந்த காலம் எப்படி இருந்தாலும் எனக்கு அக்கறை யில்லே.

கல்யாணி: என் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் உங்களுக்குத் தெரியுமா?

ஆனந்த்: தெரியாது. தெரிஞ்சுக்கணும்கிற அவசியமில்லே.

கல்யாணி: உங்களால ஜீரணிக்க முடியாத பயங்கரமான நிகழ்ச்சிகள் என் வாழ்க்கையிலே நடந்திருக்கு.

ஆனந்த்: அதான் சொல்லிட்டேனே! என்னைப் பொறுத்த வரையில் கடந்த காலம் செத்துப்போச்சு. எதிர்காலம் இன்னும் பிறக்கல்லே. இரண்டைப் பத்தியும் கவலைப்படப் போறதில்லே. நிகழ்காலம் நின்னால் சரி! -சாயந்தரம் சந்திக்கிறேன்.

(ஆனந்த் போகிறான். அவன் போன திசையையேபார்த்த வண்ணம் கல்யாணி நிற்கிறாள். சர்மா வருகிறார்.)

சர்மா: கல்யாணி! நான் வந்ததைக் கூடக் கவனிக்காம என்ன பார்த்துக்கிட்டு நிக்கிறே?

கல்யாணி: உங்க பையன் ஆபீசுக்குப் போறார்; சாவியைக் கொடுத்துட்டுப் போனார்.

கோமல் சுவாமிநாதன்



"என்னைப் பொறுத்த வரையில் கடந்த காலம் செத்துப் போச்சு. எதிர்காலம் இன்னும் பிறக்கல்லே. இரண்டைப் பத்தியும் நான் கவலைப் படப் போறதில்லே. நிகழ் காலம் நின்னால் சரி!"



(கண்களைத் துடைத்துக் கொள்கிறான்)
சர்மா: என்ன கண்ணுல கலக்கம்?
கல்யாணி: ஒண்ணுமில்லே.
சர்மா: சொல்லும்மா, என்ன விஷயம்?
கல்யா: எட்டாத பழத்துக்கு ஆசைப்பட்டு ஏங்கிப் போறது எவ்வளவு தவறு மாமா?
சர்மா: பொதுவா ஆசையை வளர்த்துக் கறதே தப்புதாம்மா.
கல்யாணி: தனி மனிதனுக்கு ஆசைகளே உருவாகாம இருந்தா இந்த உலகம் இவ்வளவு முன்னேறியிருக்குமா?
சர்மா: ஆசைகளிலே இரண்டு விதம் உண்டு. எல்லாத்தையும் தானே அடையணும் கிறது சுயநல ஆசை. எல்லாரும் அடைய



ணும்கிறது பொதுநல ஆசை. இந்த உலகம் முன்னேறினது பொதுநல ஆசையால்; அழியப் போறது தனி மனித ஆசையால்.....
கல்யாணி: அழிக்கப்பட்ட ஒருத்திக்கு ஆசை உருவாறது தப்பா....?
சர்மா: நிச்சயமாகத் தப்பு இல்லே.... ஏன் அம்மா இப்படிக் கேக்கறே?
கல்யாணி: மாமா! உங்க பையன் என் மேலே அளவுகடந்த மதிப்பும் மரியாதையும் வச்சிருக்கார்.
சர்மா: அப்படித்தான் தெரியுறது. அதனாலே.....?
கல்யாணி: அதனால என் வாழ்க்கையில ஏற்பட்ட கோர நிகழ்ச்சியைப் பத்தி அவருக்குத் தயவுசெய்து தெரியப் படுத்திடுங்க.

சர்மா: அப்படித் தெரிஞ்சா அவன் உன்னை வெறும் கீழ்க்கடைன்னு நெனைச்சிடுவானு?
கல்யாணி: அப்படி நினைக்கலாம் இல்லையா?
சர்மா: ஆனால் கல்யாணி.....
[சிவராமன் வருகிறான்]
சர்மா: சிவராமா, போன காரியம் என்ன ஆச்சு?
சிவராமன்: என்ன ஆச்சு? பெரிய முட்டுக் கட்டை விழுந்திரிச்சு!
சர்மா: எப்படி?
சிவராமன்: லீடிங் கிரிமினல் லாயர் வெங்கடாத்திரியைக் கன்சல்ட் பண்ணினேன், இந்தக் கேஸைப் 'ப்ரூவ்' பண்ண ஆதாரமே இல்லையாம். கேசை எடுக்க மறுத்துட்டார்!

சர்மா: என்ன? கண்ணுக்கு நேரே நடந்த இந்த நிகழ்ச்சிக்கு ஆதாரம் இல்லையா?
சிவராமன்: கண்ணுக்கு நேரே நடந்த நிகழ்ச்சி தான். ஆனா யார் கண்ணுக்கு நேரே? இந்தப் பொண்ணு கண்ணுக்கு நேரே; அந்த மூணு அயோக்கியன்கள் கண்ணுக்கு நேரே. ஆனா கோர்ட்டில வந்து சாட்சி சொல்லத் தகுதி பெற்ற நாலாவது நபர் கண்ணுக்கு நேரே நடக்கல்லியே! அதனால அந்த மூணு பேரும் கோர்ட்டுலே வந்து 'இது கற்பழிப்பு இல்லே. அந்தப் பெண்ணே பணத்துக்காக இணங்கி வந்தாள்'னு சொன்னா அதை மறுக்க நம்மகிட்டே ஆதாரமேகிடையாது.
ஏழுமலை (கேட்டுக் கொண்டே வந்து): கோர்ட்டில 'பப்ளிக்'கா சொல்லுவாங்களா?

சிவராமன்: எதுக்கும் துணிஞ்சவங்க. சொல்ல மாட்டாங்கங்குறது என்ன நிச்சயம்? மான அவமானத்துக்குப் பயந்தவனுக இல்லேயே அவனுக.

[தீபாவும் நித்யாவும் வருகிறார்கள்.]

நித்யா: அண்ணு, நாம தேடின தடயம் கிடைச்சுப் போச்சு; தடயம் கிடைச்சுப் போச்சு!

சிவராமன்: என்ன தடயம்?

தீபா: சம்பவம் நடந்த அன்னிக்கு அவுங்க கார் எடுத்துக்கிட்டு நந்தி ஹில்சுக்குப் போயிருக்காங்க. நந்தி ஹில்சுக்குப் பக்கத்தில காருக்கு பெட்ரோல் போட்ட பில் எங்கிட்ட கிடைச்சிருக்கு. திரும்பும் போது கார் ரிப்பேர் ஆகிட்டது. அதைப் பெங்களூரில் விட்டுட்டுத் தங்களுடைய பெயரில முதல் வகுப்பிலே ரிசர்வ் பண்ணிண்டு வந்திருக்காங்க. அவுங்க தங்கின ஹோட்டல்லேயிருந்து அப்பாவுக்கு டிரங் கால் புக் பண்ணிப் பேசியிருக்காங்க.

சிவராமன்: வெரிகுட்! சம்பவம் நடந்த அன்னிக்கு நாங்க அங்கே இல்லேன்னு 'அலிபை கிரியேட்' பண்ண முடியாது. சர்மாஜி! நான் இப்பவே போய் இன்னொரு தரம் லாயரைப் பார்த்துட்டு வந்துடறேன்.

கல்யாணி: நில்லுங்க. நீங்க வக்கீலைப் பார்க்கப் போக வேண்டாம்.

சிவராமன்: வக்கீலைப் பார்க்கலேன்னு இந்த வழக்கு எப்படிக் கோர்ட்டுக்குப் போறது?

கல்யாணி: இந்த வழக்கு கோர்ட்டுக்கேபோக வேண்டாம்னுதான் நான் சொல்றேன்.

சிவராமன்: கல்யாணி....

சர்மா: நீ என்னம்மா சொல்றே... அவங்களை எதிர்த்து வழக்காட வேண்டாமா? உனக்கு நியாயம் கிடைக்க வேண்டாமா?

கல்யாணி: நியாயம் எப்படி மாமா கிடைக்கும்?

தீபா: ஏன் கிடைக்காது...?

கல்யாணி: வக்கில் சொன்ன மாதிரி அந்த மூணு பேரும் கோர்ட்டுலே கூண்டேறிப் பணத்துக்காக நானே இணங்க விரும்பி இந்தச் செயலுக்கு உட்பட்டேன்னு வாக்கு மூலம் கொடுத்துட்டா....? அதை இல்லேன்னு நிரூபிக்க நம்ம கிட்டே என்ன சாட்சி இருக்கு?

சர்மா: சாட்சி இல்லேதான். 'என்ன நடந்தாலும் பரவாயில்லே; அவங்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கணும்'னு சொன்னியே அந்த வேகம் இன்னிக்கில்லையேம்மா.

கல்யாணி: புரியலேயா மாமா? பட்டுப் போன என் மனசிலே நம்பிக்கை துளிர் விட ஆரம்பிச்சிருக்குதுன்னு சொன்னீங்களே. அதுதான் மாமா காரணம். நம்ம நாலஞ்சு பேருக்குள்ளே, இந்த நாலு கவருக்குள்ளே என்னைப் பத்தின இந்த விஷயம் தெரிஞ்சிருக்கப்போ எனக்கு



வாழ்வு கொடுக்க ஒருத்தர் முன் வரலாம். ஆனா விஷயம் கோர்ட்டுப் படியேறி ஊருக்கெல்லாம் தெரிஞ்சா எனக்கு வாழ்வு கொடுக்க முன்வருவாரா?

(கல்யாணி விருட்டென்று போகிறாள்.)

ஏழுமலை: பரமபதத்திலே வேகமா மேலே ஏறிப் பாம்பு வழியா சர்ன்னு புறப்பட்ட இடத்துக்கே வந்தாப்போல ஆயிடுச்சே... இப்ப என்ன செய்யுறது?

சர்மா: இஷ்டத்துக்கு விரோதமாகப் பலவந்தப்படுத்தித்தான் நடந்ததுன்னு நிரூபிக்க..

சிவராமன்: கண்கண்ட சாட்சிதான் எதுவுமே இல்லேன்னு திட்டவட்டமாத் தெரியுதே, சர்மாஜி.

சர்மா: எப்படிச் சொல்ல முடியும்! இந்த அயோக்கியப் பசங்க செய்த அக்கிரமத்தைப் பார்க்கத் தன் பிரதிநிதியா யாரையாவது அவன் அனுப்பி வைச்சிருப்பான்!

சிவராமன்: இது ஒரு மூடத்தனமான நம்பிக்கை!

சர்மா: இல்லேப்பா ... என் மனசுலே ஏதோ ஒரு உள்ளுணர்ச்சி தோணுது! ஒருத்தன் இந்த அக்கிரமத்தைப் பார்த்துக் கிட்டிருந்திருக்கான். ஆமா, நிச்சயமா அவன் பார்த்திருக்கான். அவன் யாரு?

ஏழுமலை: என்ன ஐயரே ஆருடம் சொல்ற மாதிரி சொல்றீங்களே. அவன் யாருன்னு நீங்களே சொல்லிடுங்களேன்!

சர்மா: அவன் யாரு! ஆண்டவன் ஒருத்தனுக்குத்தான் தெரியும்.

சிவராமன்: ஆண்டவனுக்குத் தெரிஞ்சா மட்டும் போதுமா! நமக்குத் தெரிய வேண்டாமா?

சர்மா: அவன் கருணையை வேண்டிக் கதறி அழுதா அவன் நமக்கும் தெரியப்படுத்துவான்.

சிவராமன்: அதுக்கு என்ன செய்யணும்?

சர்மா: அவனை நோக்கிப் பிரார்த்தனை பண்ணணும். உன்னை விட்டா எனக்கு வேற வழியில்லேன்னு சரணடையணும்.

சிவராமன்: இந்தப் பைத்தியக்காரத்தனத்தை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. அந்தச் சாட்சி யாருன்னு நாமதான் கண்டுபிடிக்கணும்.

சர்மா: அந்தச் சாட்சி இருக்கிறது உனக்கு எப்படித் தெரியும்?

சிவராமன்: நீங்க தானே சொன்னீங்க.

சர்மா: நான் நேரிலே பார்த்ததாகச் சொல்லலியே. உள்ளுணர்ச்சி இருக்கிறதாகத் தானே சொன்னேன். அதை நீ நம்புறியா?

சிவராமன்: நம்பறேன்.

சர்மா: ஆகவே ஒரு நம்பிக்கையிலே தான் உன் முயற்சியை ஆரம்பிக்கணும்கிறது புரியுதா? ஏதோ ஒண்ணு இருக்கு. அது என்ன — இதுதானே இப்ப உன் கேள்வி. முதலில் ஏதோ ஒண்ணு இருக்குங்கிறதை ஒப்புக் கொள்ளு. அது என்னன்னு தன்னாலே தெரியும். அதற்கு வழி, பிரார்த்தனை.

சிவராமன்: (குழம்பி) சர்மாஜீ....

ஏழுமலை: சாமி... நான் பிரார்த்தனை பண்றேன் சாமி!

ரங்கநாயகி (பிரவேசித்து) வேங்கடாசலபதிக்குக் காணிக்கையும் முடிஞ்சு வைப்போம். அவன் மனசு வச்சாச் சாட்சியைக் கொண்டு வந்து நிறுத்துவான்.

ஏழுமலை: நல்ல யோசனை! உண்டியலைக் கொண்டு வா.

(ரங்கநாயகி விரைந்து சென்று உண்டியலோடு வருகிறாள்.)

ஏழுமலை: ஐயரே! இந்தாங்க ஒரு ரூபாய். உங்க கையாலே முடிஞ்சு வையுங்க.

(ஒரு மஞ்சள் துணியை அவிழ்க்கிறான். அதிலிருந்து மோதிரம் விழுகிறது.)

சர்மா: என்ன மோதிரம்?

ஏழுமலை: அட! பெங்களூர்லே ஐந்து தலை விநாயகரைப் பார்க்கப் போயிருந்த போது அந்த ஆள் யாரோ ஒரு பொண்ணு கிட்டேயிருந்து இந்த மோதிரத்தை அடிச்சாந்தான். அதை எங்கிட்ட போட்டுட்டு ஓடிட்டான். திருப்பதி உண்டியல்லே போடலாம்னு முடிஞ்சு வைச்சிருக்கிறோம்.

சர்மா: நீங்க எப்ப பெங்களூர் போனீங்க?

ஏழுமலை: காஞ்சிபுரம் போனோமே, அதுக்கு மறுநாள்!

ரங்க: அந்தப் பையனைப் பிரசாத் வீட்டிலே கூடப் பார்த்தோமே!

சிவராமன்: பிரசாத் வீட்டிலே பாத்தீங்களா? அவன் பேரு?

ஏழுமலை: இளமுருகு.

சிவராமன்: இளமுருகுவை நீங்க பெங்களூரில் சந்திச்சீங்களா?

ஏழுமலை: ஆமா... சிவராமப்பா... காரை விட்டுட்டு அவங்க முதல் வகுப்லே வந்ததாகத் தீபா சொல்லிச்சே; அதையும், முதலாளி காரை ரிப்பேர் பண்றதுக்காக பெங்களூரிலே தங்கினதாக அந்தப் பையன் சொன்னதையும் முடிபோட்டுப் பார்த்தா முடிச்சு அவிழ்ந்தாற் போலத் தோணுது!

சிவராமன்: கல்யாணி, கல்யாணி! (கல்யாணி வருகிறாள்) இது உன் மோதிரமா?

கல்யாணி: (வாங்கிப் பார்க்கிறாள்) ஆமா... என் மோதிரம்தான்... சம்பவம் நடந்த அன்னிக்கு இதையும் நான் இழந்துட்டேன்.

சிவராமன்: அப்ப நிச்சயமா இளமுருகு அவங்ககூடப் போயிருக்கான். நடந்த சம்பவத்தை அவன் கண்ணாலே பார்த்திருக்கலாம். இளமுருகு தான் நேர்முகச் சாட்சி.

ரங்க: வேங்கடாசலபதி என்னமா கொண்டாந்து சாட்சியை நம்ப கண்ணு முன்னாலே நிறுத்திட்டார், பார்த்தீங்களா? என்ன ஆச்சரியம் பாருங்க!

சர்மா: அவனைப் புரிஞ்சிண்டவங்களுக்கு எதுவுமே ஆச்சரியமில்லே.

ஏழுமலை: ஆமா...இளமுருகு கோர்ட்லேவந்து சாட்சி சொல்லச் சம்மதிப்பானா?

சர்மா: காணிக்கை செலுத்தறத்துக்குமுன்னாலேயே சாட்சியை நம்ப முன்னால காட்டின ஆண்டவன், அவன் மனசுலயும் புகுந்து வேலை செய்வான்.

சிவராமன்: சர்மாஜி! அவன் புகுந்து வேலை செய்யறானோ இல்லையோ! நாம் புகுந்து வேலை செய்வோம். அவனைக் கண்டு பேசிப் பார்ப்போம்.

ஏழுமலை: கவலையை விடுங்க. உண்டியல் ரூபமா வந்து உதவிய தெய்வம் அதையும் பார்த்துக் கொள்ளும். (தொடரும்)



கண்ணாடியின்றி கூர் பார்வை பெறலாம்!



உங்கள் கண் வைத்தியரை
ஆலோசனைக்கு அணுகுங்கள்

உங்களுக்கு இதைவிட மட்டற்ற மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு செய்தியும் வேறு உண்டோ!

'காண்டாக்ட் லென்ஸ்'களை உபயோகியுங்கள்.

இந்த காண்டாக்ட் லென்ஸ்'கள் கிட்டப்பார்வை, தூரப்பார்வை மற்றும் அப்பாகிக் (காடராக்ட் ஆப்ரேஷனுக்குப்பின்) கெராடோ கோனஸ், அனிஸோமெட்ரோபியா, அனிஸ்கோனியா, பாலிகோபியா, போன்ற பார்வை குறைபாடு உடையவர்களுக்கு மிகவும் சிறந்தது.


'காண்டாக்ட்லென்ஸ்'களை வெகுசுலபமாக நீங்களே உங்கள் கருவிழிகளில் பொருத்திக்கொள்ளலாம். . . கழற்றியும் விடலாம்—சில நாட்கள் பழகிய பின்! உங்கள் விழிகளில் பொருத்தப்பட்ட இச்சிறு 'காண்டாக்ட்லென்ஸ்'கள் மற்றவர்கண்களுக்கு தெரியாது. ஆகவே உங்கள் எழில் மிகு முகத் தோற்றத்தில் எவ்வித மாறுதலும் இல்லை!

மற்ற விபரங்களுக்கு

ஆசியா காண்டாக்ட் லென்ஸ் லாபரெட்டரி
4/1, ஆண்டர்ஸன் ரோடு,
சென்னை-600 006. போன்: **87865**

---

35 வயதிலே ஒகாஸா: மூச்சுத் திணறுத தென்புக்கு



35 வயதிலே மூச்சு திணருவானேன்! வயது ஏற ஏற மூலாதாரமான சத்துக் கள் உடம்பில் பற்றுது போய்விடலாம். அந்தக் குறையை ஈடு செய்கிறது ஒகாஸா டானிக் மாத்திரை. துள்ளிவரும் தென்பு. வலு. ஆரோக்கியம்.

ஒகாஸா

டானிக் மாத்திரைகள்

உடல்நலத்திற்கு மறுமலர்ச்சி

OKASA CO. PVT. LTD., 12K, Gunbow Street,
P. B. No. 396, Bombay 400 001.

மாயவரம்
பைனான்ஷியல் கார்ப்பரேஷன் லிட்.

பதிவு அலுவலகம் :

13-H, கச்சேரி ரோடு, மாயவரம்-609001

நீண்டகால சீட்டுக்களின் பலன்கள்

1. ஐம்பது அல்லது நூறு மாதங்கள் என நீண்டகாலத்தில் எளிய தவணைகளில் பணத்தைச் செலுத்தி மொத்தமாக நிறைந்த தொகையைப் பெறுதல் சீட்டு முறைத் திட்டத்தால் ஏற்படும் நன்மையாகும். அது எல்லா நிலையினருக்கும் ஏற்றதாகும்.

2. ஏலம் எடுத்த தொகையை வியாபாரத்தில் முடக்கினால் / முதலீடு செய்தால் பெருமளவு லாபம் கிடைக்கும். அப்படிக் கிடைக்கும் லாபம் சீட்டுக்குரிய எஞ்சிய தவணைகளை எவ்வித சிரமமும் இன்றி எளிதில் கட்டவும் உதவியாக இருக்கும்.

3. சீட்டுக் கேள்விகளுக்கான வரையறை எல்லை இல்லை. எந்தக் கேள்விக்குத் தொகையளிக்கப்படலாம் என்பது முத்திரையிடப்பெற்ற உரிய ஒப்பந்தப் புள்ளிகளைக்கொண்டே முடிவு செய்யப்படுகிறது.

4. ஏலம் எடுத்த, எடுக்காத உறுப்பினர்களில் இடை நிறுத்தம் இல்லாமல் தொடர்ந்து கட்டிய அனைவரும் சீட்டின் பங்கீட்டு ஊதியத்தை அடைகிறார்கள்.

5. பகிர்வு ஊதியத்தில் இருபத்தி நான்கு சத விகிதம் உறுப்பினர்களுக்கெனத் தீர்மானிக்கப் பெற்று பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

6. ஏலம் பெறும் வாய்ப்பிழந்த உறுப்பினர்களில் இறுதிவரைத் தவணைகளை முறையாகச் செலுத்தியவர்கள் சீட்டு நிறைவு பெறும்போது முழுத் தொகையினைப் பெறுகிறார்கள்.

7. எளிய தவணைகளில் நீண்ட காலத்தில் கட்டக்கூடிய ஏலத் தொகையினைப் பெறுவதன் மூலம் திருமணங்கள், பிள்ளைகளின் மேற்படிப்பு வீடு கட்டுதல், பெருமளவில் பழுது பார்த்தல், நெடுங்காலமாகத் தங்கிவிட்ட அடமானங்களை மீட்டுக் கொள்ளுதல் போன்றவற்றை எளிதில் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

நடைபெறும் சீட்டுக்களின் விபரங்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்

R. கல்யாணசுந்தரம்
மானேஜிங் டைரெக்டர்

வழியை விளக்குகிறார் பெயரிலேயே ஆனந்தமுடையவர், தயை கொண்டு:

'இன்று ஒருவன் வேலை செய்கிறான், சம்பாதித்து, சேமித்து வைத்து எதிர்காலத்தில் மகிழ்ச்சியுடன் இருக்கலாம் என்று. வேறு சிலர் முதல் தேதி தரும் ஆனந்தத்தை எண்ணி இன்று உழைக்கிறார்கள். இவர்கள் இன்றைக்கு மகிழ்ச்சியாக இல்லை. வேறு ஒருவன், செய்யும் காரியத்திலேயே மகிழ்ச்சி காண்கிறான். இவன் இன்றைக்கும் சில நேரங்களில் ஆனந்தமாக இருக்கிறான். மூன்றாவதாக ஒருவன், மகிழ்ச்சியே தானாகிவிடுகிறான். இவன் எப்போதும் ஆனந்தமாக இருக்கிறான்.

'இந்த மிக உயர்ந்த நிலை எப்படி, எப்போது வரும்?

'பாடுபவர்களைக் கவனியுங்கள். பாடி, பணம் சம்பாதித்து அதனால் கிடைக்கக்கூடிய பலன்களைக் கருதிப் பாடுகிறார்கள் சிலர். இவர்கள் எதிர்கால மகிழ்ச்சிக்காகப் பாடுகிறார்கள். வேறு சிலர் பாடுவதிலேயே ஆனந்தம் காண்கிறார்கள்.

'நாம் எல்லோருமே பாடுகிறோம். பாடத் தெரியாதவர்கள்கூட, மற்றவர் முன் பாடக் கூச்சப்படுபவர்கள் கூட ஒரு சந்தர்ப்பத்தில் பாடுவோம். அது எந்த இடத்தில்?'



"ராஜகுமாரனா? ராஜேஷ் கன்னாவா?"

கேள்வியைக் கேட்டு விட்டுப் பதிலை எதிரே உள்ள மக்களிடம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் சுவாமி தயானந்தா.

பதில் வருகிறது: 'குளியலறையில்!'

தயானந்தர் தொடர்கிறார்: 'ஆம். குளியலறையில் நாம் தனித்திருக்கையில், சுற்றம் சூழல் எல்லாம் பாதிக்காத தருணத்தில், தலையில் நீர் கொட்டப் போகும் சமயத்தில், எல்லாவற்றையும் துறந்து விட்டு நிற்கும் போது பாட்டு பீய்த்துக் கொண்டு கிளம்புகிறது! ஆனந்தமாகப் பாடுகிறோம்!'

இதிலிருந்து நமக்குப் புரிந்து விடுகிறது. லோகாயத வாழ்க்கையில் உழலும்போதே படிப்படியாகப் பற்றற்ற நிலையை வளர்த்துக்கொள்வோமேயானால் நித்யானந்தத்தை அடையலாம் என்று.

சினிமா நட்சத்திரங்களைச் சொற்பொழிவில் இழுக்கிறார் தயானந்தா, வேடிக்கையாக: 'ராஜேஷ் கன்னா ஒரு படத்தில் ராஜகுமாரனாக வருகிறார். யார் இந்த ராஜகுமாரன்? ராஜேஷ் கன்னா. அடுத்து அவரே மந்திரியாகத் தோன்றுகிறார். யார் இந்த மந்திரி? ராஜேஷ் கன்னா. மூன்றாவதாக ஒரு பிச்சைக்காரனாகத் தோன்றுகிறார் அவர். யார் இந்தப் பிச்சைக்காரன்? ராஜேஷ் கன்னா!

'பலவித வேஷங்களில் வரும் ராஜேஷ் கன்னா தாம் வேஷதாரி என்பதை மறந்து ஷூட்டிங் முடிந்தபிறகும் பிச்சைக்காரனாகவே நடந்து கொண்டால், 'ஐயோ பாவம்' என்று சொல்ல மாட்டோமோ? தம்மை யார் என்று அவர் உணரவில்லையே என்று வருந்த மாட்டோமோ? அதே போல்தான் நாமும் பலவித சூழல்களில் பலவித பாத்திரங்களாக நடிக்கிறோம் என்பதை உணர வேண்டும். நாம் யார் என்பதைப் புரிந்து கொண்டு காரியங்களைச் செய்து கொண்டு

என். எஸ். கிருஷ்ணன் சிலை முதல் பனகல் பூங்கா வரை தெருவின் இரு பக்கங்களிலும் கார்கள் வரிசையாக நிற்கின்றன. நூற்றுக் கணக்கான சைக்கிள்கள் பாதையோரம் நிறுத்தப்பட்டுள்ளன. பஸ்களிலும் கால்நடையாகவும் வருவோர் ஏராளம்.

எதற்கு வருகிறார்கள், மாம்பலம் கோபதி நாராயணசாமி செட்டித் தெருவுக்கு?

சுவாமி தயானந்தாவின் கீதை யக்ஞம் சொற்பொழிவுத் தொடரைக் கேட்பதற்கு!

என்னது? வேதாந்த விசாரத்தில் இத்தனை ஈடுபாடா மக்களுக்கு? ராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப் பள்ளி விளையாட்டுத் திடல் பாதிக்கு மேல் நிரம்பி வழிகிறதே!

அங்கு எரியும் பிரகாசமான விளக்குகளின் உதவியுடன் கூட்டத்தின் மீது கண்ணோட்டம் செலுத்தும்போது நமது வியப்பு பன்மடங்காகிறது. காரணம், குழுமியிருப்பவர்களில் பெரும்பாலோர் இளைஞர்கள்!

சுவாமி தயானந்தா தமது கம்பீரமான குரலில் ஆங்கிலச் சொற்பொழிவைத் தொடங்குகிறார். நமது வியப்பெல்லாம் நீங்கி விடுகிறது. இந்தக் குரலின் ஆகர்ஷண சக்தியில் கட்டுப்படாதவர்கள் இருக்க முடியாது என்று தோன்றுகிறது. அதுமட்டுமல்ல; சொல்லுகிறபடி சொன்னால் பெரிய பெரிய வேதாந்த விஷயங்கள் கூட மிக எளிதாகி இளைஞர்களின் உள்ளங்களையும் கவர்ந்து விடும் என்று புரிகிறது.

வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமைய வேண்டும் என்று விரும்பாதவர் யார்? அதற்கான



போக வேண்டும். இல்லாத போனால் மறைகழன்றவராவோம்!

'பிள்ளைக்கு அப்பாவாக இருப்பவன், தன் அப்பாவுக்குப் பிள்ளையாக இருக்கிறான். எஜமானனுக்குப் பணியாற்றுபவன், தன் வேலையாளுக்கு எஜமானனாக விளங்குகிறான். குருவின் சிஷ்யன், தன் சிஷ்யனுக்குக் குருவாக இருக்கிறான். அண்ணனாகவும் தம்பியாகவும் மாமாவாகவும் மருமகனாகவும் ஒருவனே பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு விதமாக விளங்குகிறான். ஆக இவன் யார்?

'இவன் அறிந்து கொள்பவன். இவன் எதிரே உள்ளவை அறியப்படுபவை. ஒரு மரத்தை இவன் பார்க்கிறான். அது மரம் என்று அறிகிறான். எனவே இவன் மரம் அல்ல. இவன் ஒரு கழுதையைப் பார்க்கிறான். அது கழுதை என்று உணர்கிறான். எனவே இவன் கழுதையல்ல. (நல்லவேளை!) இவன் ஒரு சைக்கிளைப் பார்க்கிறான். சைக்கிள் என அறிகிறான். எனவே இவன் சைக்கிள் அல்ல. இப்படியே இவன் பல பொருள்களைப் பார்க்கிறான். அவையெல்லாம் தானல்ல, தான் வேறு என அறிகிறான். தன் உடலையும் கடைசியாகப் பார்க்கிறான். அது தன் உடல் என அறிகிறான். இவன் உடலே அறியப்படும் பொருளாகிறது. இவன் அறிந்துகொள்பவனாகிறான். ஆக இவன் யார்?'

இப்படித் தர்க்கரீதியாக ஒரு கேள்வியை எழுப்பிவிட்டுப் புன்சிரிப்புடன், 'இந்தக் கேள்விக்கு விடையைத்தான் கீதையின் பதின்மூன்றாவது அத்தியாயத்தில் காணப் போகிறோம்' என்கிறார் தயாநந்தா.

தம்முடன் சேர்ந்து கீதையைப் படிக்குமாறு எதிரே உள்ள அனைவரையும் கேட்டுக் கொள்கிறார். சந்தி பிரித்து லகுவாக்கி அவர் படிக்க, எதிரே உள்ள மக்கள் ஒரே குரலில் திருப்பிச் சொல்கிறார்கள்.

எளிதான அர்த்தம் சொல்கிறார்; அடுத்த அடிக்கு வருகிறார் தயாநந்தா. கீதை யக்ஞம் தொடர்கிறது.

சுவாமி தயாநந்தா சென்னை நகர மக்களின் மனங்களைத் தம் வசப்படுத்தி விட்டதில் வியப்பேதுமில்லை, அவர் சுவாமி சின்மயாநந்தாவின் முதல் சீடர் என்பதை நோக்கும்போது. சுவாமி சின்மயாநந்தாவின் சொற்பொழிவுகளைக் கேட்டு வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொண்டவர்கள் ஏராளம். குழப்பம் நீங்கி மனத் தெளிவும் அமைதியும் பெற்று, கீதை காட்டும் வழியில் அவரவருக்கும் உண்டான காரியங்களைச் செய்துகொண்டே பேரின்பத்தை உணர்ந்தவர்கள் எத்தனையோ பேர்.

குறிப்பாக இளம் உள்ளங்களிலேயே கீதையின் உயர்ந்த தத்துவங்களைத் தெளித்துவிட்டால் வாழ்நாள் முழுவதும் மனச் சாந்தியுடன் விளங்குவார்கள் என்ற பெரு நோக்குடையவர் சுவாமி சின்மயாநந்தா.

கீதை கூறுவது போன்ற உயர்ந்த, ஆனால் கடைப்பிடிக்க எளிமையான தத்துவங்களை உணராததால்தான் இன்று பல இளைஞர்கள் எதெதிலெல்லாமோ ஆனந்தம் இருப்பதாக நினைத்துப் போலியான அந்த மகிழ்ச்சியில் மூழ்கிக் கெட்டலைகிறார்கள்.

இதைத் தவிர்க்க வேண்டியதைக் கடமையாக எண்ணி சின்மயா மிஷன் செயல்படுகிறது. சுவாமி சின்மயாநந்தாவின் அருளுரைகளையும் வேறு பல அரிய நூல்களையும் பதிப்பித்துக் குறைந்த விலைக்கு விற்கிறது. மற்றும் பல அரிய பணிகளையும் மேற்கொண்டிருக்கிறது. சின்மயா மிஷனின் பணிகளால் முழுப் பயன் பெறவும், அப்பணி சிறக்க ஒத்துழைக்கவும் விரும்புவோர் பின் வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்:

சின்மயா பவுண்டேஷன் ஆப் எஜுகேஷன் அண்ட் கல்ச்சர், (Chinmaya Foundation of Education and Culture.) 64, சாந்தோம் ஹைரோடு, சென்னை—4.

சின்மயா மிஷனின் லட்சியப் பணிகளுக்கு நிதி திரட்ட ஏப்ரல் 12ந் தேதி திருச்சூரில் உதவிக் கச்சேரி வழங்குகிறார் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி.

சாந்திதரும் ஓம்கார நாதம் உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற கோட்பாட்டைக் கொண்டு, அதற்கேற்பச் சின்னமும் அமைத்துக் கொண்ட சின்மயா மிஷனுக்கு உதவ, நாதோபாஸனையால் சமூகத்துக்கு நலன் பயப்பதையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்ட ஸ்ரீமதி எம். எஸ். முன்வந்ததில் வியப்பில்லையல்லவா?

இவ்விதம் மேலட்டையில் சுவாமி சின்மயாநந்தா அவர்களையும் தயாநந்தர் அவர்களையும் சின்மயா மிஷனின் ஓம்காரச் சின்னத்தையும் பிரசுரித்துக் கல்கி வாசகர்கள் தங்கள் தங்கள் இதயங்களுக்குள்ளேயே பேரானந்தப் பெருவெளியினை உணர வகை செய்துள்ளோம்.

சேரமான் காதலி

அத்தியாயம் 11

மறு பிறப்பு

திருவஞ்சைக் களத்தில் என்றுமில்லாத ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

'இரவிலிருந்து சேரமான் பெருமாளைக் காணவில்லை' என்பதே அது.

'போர்வையைப் போர்த்திக்கொண்டு அவர் வெளியேறியதைப் பார்த்ததாக' மட்டுமே வாயில் காப்போர் கூறினார்கள்.

அவருக்கு அது பழக்கம்தான் என்றாலும் பொழுது விடிந்த பிறகும் அரண்மனைக்குத் திரும்பாமல் இருப்பது அவரது பழக்கமல்ல.

அதிலும் யூஜியானுவுக்காக மட்டுமே இரவில் அப்படி அவர் வெளியேறுவது பழக்கம். இப்போது யூஜியானுவும் இல்லையே?

'கடற்கரைப் பக்கம் பார்த்ததாக'ச் சிலர் கூறினார்கள்.

'ஒருவேளை அவர் இஸ்ரவேலுக்கே போயிருக்கக் கூடுமோ?' — நாராயண நம்பூதிரி திகைப்படைந்த நிலையில் இருந்தார்.

சுறுசுறுப்பான அவரது மூளை வேலை செய்யத் தொடங்கியது.

தேட வேண்டிய இடமெல்லாம் தேடியாகி விட்டது; பின் எங்கே அவர் போயிருப்பார்?

அன்று சலீமாவின் உருவம் பொதித்த தங்கப்பதக்கத்தைத் தான் பார்த்தது நாராயண நம்பூதிரிக்கு நினைவுக்கு வந்தது.

அந்த இரண்டு மகமதியப் பெண்கள்— யார் அவர்கள்?

யானையிட மிருந்து காப்பாற்றப்பட்டது; அரண்மனையிலேயே மருத்துவம் பார்த்தது; அவர்களில் ஒருத்தி விடைபெற்றுப் போகும்போது அரசரையே பார்த்துக் கொண்டு தடுமாறியது—அவரது சிந்தனை முடிச்சு அங்கேயே விழுந்தது.

அவர் ருத்திராட்சத்தை ஒரு தடவை ஓங்கித் தட்டினார்.

அவர் எவனை நினைத்தாரோ—அவனே அங்கே தோன்றினான்.

அவனே — மானிச்சன்.

''எனக்கொரு சந்தேகம்'' என்றார் நாராயண நம்பூதிரி.

''எனக்கும் அதுவே'' என்றான் மானிச்சன்.

''அந்த மகம்மதியப் பெண்கள்...'' என்று இழுத்தார் அவர்.

''அராபியக் கப்பலில் அவர்கள் வந்திறங்கி வழி தெரியாமல் திண்டாடிய போது, மகமதுவின் வீட்டை நானே காட்டினேன். 'சிக்கல் இல்லாத ஒன்றைப் பார்க்கும்போதுகூட எதிர்காலத்தில் இதனால் சிக்கல் நேரலாம்' என்று எனக்குத் தோன்றுவது வழக்கம். அந்தப் பெண்ணைப் பார்த்தபோது, 'காலதேவதையே திருவஞ்சைக் களத்தில் விளையாட வந்ததுபோல் எனக்குத் தோன்றிற்று. ஆனால் அரண்மனை அவளுக்குப் பக்கத்தில் இல்லை என்று நான் அமைதி யடைந்து விட்டேன். பட்டத்து யானை அவளைத் தூக்கி எறிய முற்பட்டது பகவதியம்மன் ஆணையோ என்று நான் நினைக்கிறேன்.

''தொடர்ச்சியாக நடைபெற்ற விவரங்களை நான் அறிவேன். ஆயினும் 'யூஜியானுவை மறக்க முடியாத மன்னர் அவளை நினைக்க முடியாது' என்றே நான் கருதினேன். அப்படியே அவர் மயக்கமுற்றிருந்தாலும் இருவரும் எங்கே போயிருக்கக் கூடும்? அரண்மனையை மறந்து ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு போகும் அளவுக்கு அவர் பலவீனமானவர் அல்ல. இருப்பினும் சலீமாவின் இல்லத்துக்குச் சென்று நான் விசாரித்து வருகிறேன்''. என்று புறப்பட்டான் மானிச்சன்.

சலீமாவின் இல்லம் களையிழந்து போய்க் கிடந்தது.

அகமதுவும் மகமதுவும் தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தனர்.

பாத்திமா அழுது கொண்டிருந்தாள்.

மானிச்சன் உள்ளே நுழைந்ததுமே, இந்த அலங்கோலத்தைப் பார்த்தான்.

அகமதுவைப் பார்த்து, ''என்ன கவலை? ஏன் இந்தக் கலக்கம்?'' என்று கேட்டான் அவன்.

கண்ணதாசன்

''தளபதி ஐயா! எங்கள் பெண்கள் இருவரையும் காணவில்லை. இரவு நிலா வெளிச்சத்தில் கடலில் குளிப்பதென்றால் சலீமாவுக்குப் பிடிக்கும். அவளும் ஜெபுன்னிசாவும் யார் துணையும் இல்லாமல் போய் விட்டார்கள். அது அவர்களுக்குப் பழக்கம்தான் என்பதால் யூசுப் கூடப் போகவில்லை'' என்று சொல்லி அழுதார் அகமது.

'மன்னரைக் கடற்கரைப் பக்கம் பார்த்ததாகச் சிலர் சொன்னதற்கும், இதற்கும் சம்பந்தம் இருக்குமோ?' என்று எண்ணத் தலைப்பட்டான் மாணிச்சன். அப்படியே சலீமா மயக்குற்று அரசரைச் சந்திக்க விரும்பியிருந்தால் ஜெபுன்னிசாவை அழைத்துச்சென்றது எதற்காக?

அப்படியே இருந்தாலும் அவர்கள் கடற்கரையில் ஏன் சந்திக்க வேண்டும்?

யூஜியானு தங்கியிருந்த மாளிகை தான் வசதியாக இருக்கிறதே?

—சிந்தனைகளில் ஆழ்ந்த மாணிச்சன், அகமதுவுக்குப் பதில் சொல்லாமலேயே நின்று கொண்டிருந்தான்.

பிறகு திரும்பி, ''நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

இப்போது நாராயண நம்பூதிரி, சேரமான், ஓவியம் எழுதும் இடத்தில் நின்று கொண்டிருந்தார்.

சேரமான் எழுதிய ஓவியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதில் — யூஜியானுவின் உடை, சலீமாவின் முகம்.

சேரமான் அதை விரும்பித்தான் எழுதினாரா?

''சலீமாவையும் காணவில்லையாம்'' என்ற குரல் கேட்டது.

மாணிச்சன் இடுப்பில் கை வைத்து நின்று கொண்டிருந்தான்.

''சந்தேகித்தது சரியாகப்போயிற்று'' என்றார் நாராயண நம்பூதிரி.

''எங்கே போயிருக்கக் கூடும்?''என்று கேட்டான், மாணிச்சன்.

''சலீமா எங்கே போனாளாம்?''

''அவளும் கடற்கரைப் பக்கம்தான் போனாளாம். கூட ஜெபுன்னிசாவும் போனாளாம்.''

''வெள்ளிக் கிழமை காதலித்துச் சனிக்கிழமை விடைபெற்றுக் கொள்ளும் அளவுக்கா மன்னர் மாறியிருப்பார்?''

''ஏதாவது ஒரு கப்பலில் சந்திக்க முடிவு கட்டியிருக்கலாம்.''

''சந்திப்பது மட்டுமே நோக்கமென்றால் பொழுது விடியுமுன்னே திரும்பி விடுவதுதானே மன்னவர் வழக்கம்?''

''கடற்கரையில் பேசி முடித்து, நாட்டின் உட்பகுதியிலே கூட எங்காவது சென்றிருக்கலாம்.''

''இங்கே மன்னவர், அங்கே சலீமா அதோடு ஜெபுன்னிசா — ஒரே நேரத்தில் இவர்களைக் காணவில்லை என்பதால் தானே சேர்த்துக் கணக்குப் போட்டுப் பார்க்கிறோம். ஒருவேளை இவர்கள் தனித்தனியாகப் பிரிந்தும் இருக்கலாம் அல்லவா?''

''அதுவும் நடந்திருக்கக் கூடியதே!''

''நல்லது! எதற்கும் சில கலங்களை அனுப்பிக் கடலில் தேடச் சொல்லுங்கள். ஏதாவது கப்பலில் அவர்கள் இருக்கிறார்களா என்று பார்க்கச் சொல்லுங்கள்'' என்றார் நாராயண நம்பூதிரி.

மாணிச்சன் விடை பெற்றுக் கொண்டான்.

திரும்பிப் பார்த்த நம்பூதிரியின் கண்களில் கண்ணீர்க் கடலாய்த் தட்டுப்பட்டாள் பத்மாவதி.

''நாயகன் —அரக்கர் குலமாகவும், நாயகி தேவர் குலமாகவும் அமைந்து விட்டால் அழ வேண்டியவள் தேவிதான், அரக்கனல்ல. கர்மத்தின் விளைவுகள் எவை எவையோ, காத்திருந்துதான் பார்க்க வேண்டும். பூர்வ ஜன்மத்தை நம்புவது நமது சமயம். சேரமான் சீர்வல்லபன் சொன்ன கதைகள் இப்போது உண்மை வடிவத்தைப் பெறு



கின்றன. சத்தியம் தழைத்து நிற்க வேண்டிய திருவிஞ்சைக்களத்தில் அதற்கு அடிக்கடி இடையூறு ஏற்படுகிறது. பரசுராமன் உருவாக்கிய பூமியை இனி அவனே வந்துதான் காப்பாற்ற வேண்டும். திருவிதாங்கோட்டில் மார்த்தாண்டவர்மன் சைவத் திருமேனியாகி விட்டான். இங்கே மன்னவர் இப்படியும் அப்படியுமாக ஊசலாடுகிறார். இன்றிரவுக்குள் மன்னவர் திரும்பவில்லை யென்றால், எதிர்காலத்தைப் பற்றிய கேள்வி பெரிதாகத்தான் விழும். ஆசை உணர்வுகளை அடக்கிக் கொள்ளும்படி அழுத்தமாகப் போதிப்பது நம் சமயம். 'அது ஏன் அப்படிப் போதிக்கிறது' என்பது இப்போது எனக்குப் புரிகிறது. பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை மூன்றுமே குல கௌரவத்தை மறக்கடிக்கின்றன. என்ன ஆசையோ? என்ன நோக்கமோ? எங்கு சென்றாரோ? பகவதியம்மனே அறிவாள்.

''பத்மாவதி! நற்குடிப் பிறந்த பெண்கள் தினமும் பாடித் தீர வேண்டிய சங்கீதம் அழுகை ஒன்றே. நீ அழு! எந்தக் கண்ணீருக்கும் அணை கட்டி விட முடியும். கணவனால் கை விடப்பட்ட மனைவியின் கண்ணீருக்கு அணை கிடையாது. ஒருவேளை ஒரு நிலையான முடிவுக்கு வருவதற்கு இதுவே சூசகமாக இருந்தாலும் இருக்கலாம்'' என்றார் நாராயண நம்பூதிரி.


யாரையும் அவர் அமைதிப்படுத்த முயலவில்லை.

'இன்னதுதான் நடந்தது' என்று தெரிந்தால், என்ன பரிகாரமும் செய்துவிட முடியும்.

'இப்படியா, அப்படியா' என்று சிந்தனை ஓடும்போது, எப்படி என்று முடிவுகட்டுவது?

மார்த்தாண்டவர்மனுக்குச் செய்தி அனுப்பினார் நாராயண நம்பூதிரி.





திருவிதாங்கோட்டுச் சாலையிலே குதிரை வீரன் வரும்போதே, ஒரு பெருங் கூட்டம் சென்று கொண்டிருப்பதைக் கண்டான்.

திறந்த திருமேனியாய், மார்பிலும் நெற்றியிலும் சந்தனப் பூச்சோடும், இடையிலே பொற்பட்டோடும் மன்னவர் முன்னால் செல்ல, அருகிலே மெல்லிளங்கோதை செல்ல, பெரும் அடியவர் கூட்டம் பின்னால் சென்று கொண்டிருந்தது.

வழியிலே நிறுத்தி ஓலையைக் கொடுக்கக் குதிரை வீரன் விரும்பவில்லை.

அவன் முன்கூட்டியே கோவிலுக்குச் சென்று, கோவில் மதில் சுவரின் அருகே குதிரையைக் கட்டிவிட்டு, கையைக் கட்டிக் கொண்டு நின்றான்.

கோவில் வாசலிலேயே செண்டைகள் முழங்க, 'வேணாட்டு அடிகள்' என்ற மார்த்தாண்ட வர்மன் வரவேற்கப்பட்டார்.

அவர் எழுதிய திருவிசைப் பாக்களைப் பாடி, இசை பாடுவோர் கூட்டம் அவரை வரவேற்றது.

அமைதி நிறைந்த ஆனந்த மூர்த்தியாக விளங்கும் அனந்த பத்மநாப சுவாமி, இருந்த இடத்திலேயே வேணாட்டு அடிகளை வரவேற்பது போலிருந்தது.

பூஜை தொடங்கிற்று.

கோவில் மணி ஓங்கி ஒலித்தது.

ஒன்பது முறை அதை ஓங்கி அடித்த போது, பிரம்மாண்டமான அந்த மணி அறுந்து கீழே விழுந்தது.

இரண்டு துண்டாக உடைந்தது.

'அபசகுனம், அபசகுனம்' என்று அடியவர்கள் கருதினார்கள்.

அப்போது, திருவிஞ்சைக் களத்துக் குதிரை வீரன் உள்ளே நுழைந்தான். மார்த்தாண்ட வர்மன் கையில் ஓலையைக் கொடுத்தான்.

ஓலையைப் பிரித்துப் பார்த்த மார்த்தாண்ட வர்மன், ''இந்தச் செய்தியைப் பத்மநாப சுவாமி எனக்கு முன்கூட்டியே சொல்லி விட்டார். இதோ பார்—'' என்று உடைந்து கிடந்த மணியைக் குதிரை வீரனுக்குக் காட்டினான்.

ஆனால் ஓலையில் இருந்த செய்தியை யாருக்கும் சொல்லவில்லை.

ஏன்? மெல்லிளங் கோதைக்குக்கூடச் சொல்லவில்லை.

அரண்மனைக்குத் திரும்பிய மார்த்தாண்ட வர்மன் மனத்தில், 'சேரமான் எங்கே போயிருப்பார்?' என்ற கேள்வியே எழுந்தது.

அந்தக் கேள்வி நாலாபுறமும் எழுந்த போது....

அங்கே அந்தத் தீவில்....

பெருவழுதியும், எயினியும் நீண்ட காலமாக உறங்கிக் கொண்டிருக்கும் கல்லறையின் மீது...

தம்மை மறந்து அமர்ந்திருந்தார்கள், சேரமானும் சலீமாவும்.

அந்தக் கல்லறையின்மீது அமர்ந்ததும் தங்களது பூர்வ ஞாபகங்களை அவர்களுக்கு அறுபட்டுப் போயின.

'தாம் சேர நாட்டு மன்னன்' என்பது சேரமானுக்கு மறந்து போயிற்று. 'தான் ஒரு மகம்மதியப் பெண்' என்பது சலீமாவுக்கு மறந்து போயிற்று.

''கடந்த கால பந்தங்கள் ஒன்று சேருகின்றன.

''இந்த ராஜ பல்லவத் தீவுக்கு நீங்கள் வருவீர்கள் என்பதும், இதுவே உங்கள் காதலுக்கு நிலைக்களன் என்பதும் எனக்கு முன்கூட்டியே தெரியும்'' என்றொரு குரல் கேட்டது.

பிரக்ஞையற்ற நிலையில் சேரமானும் சலீமாவும் திரும்பிப் பார்த்தார்கள்.

அங்கே அழகான இளம் பெண் ஒருத்தி வந்து கொண்டிருந்தாள்.

'ராஜபல்லவத் தீவின் தெய்வம் அவளே' என்பதையும், அந்தத் தீவில் யாரையும் நிரந்தரமாகக் குடியிருக்க விடாமல் தடுத்தது அந்தத் தெய்வமே' என்பதையும் அவர்கள் அறிய மாட்டார்கள்.

இளம் பெண் வடிவில் வந்த அந்தத் தெய்வம், ''எழுந்திருங்கள், நீங்கள் தங்க வேண்டிய இடத்துக்குப் போகலாம்'' என்றது. (தொடரும்)

சதாபிஷேகம்



கோவிலகத்து தெக்கேமடம் அப்பு அய்யர் என்கிற **அனந்த நாராயண அய்யர்** அவர்களுக்கு கொச்சி வடக்கஞ்சேரியிலுள்ள அவரது இல்லத்தில் **சதாபிஷேகம்** சிறப்பாக நடைபெற்றது. இந்த வைபவத்துக்கு ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் பிரமுகர்கள் பலரும் வருகை தந்து சிறப்பித்தனர்.



திருவாரூர் 'கல்கி' ஏஜண்ட் ஸ்ரீ ஜி. நடராஜன் அவர்கள் குமாரத்தி சௌ. **வைஜயந்திக்கும்**, தஞ்சாவூர் 'கல்கி' ஏஜண்ட் ஸ்ரீ ஜெயராமன் அவர்களின் சகோதரர் சிரஞ்சீவி **முத்துசாமிக்கும்** சமீபத்தில் திருவாரூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்

அன்னமிட்ட கை!

அன்னம்



என்னை வரவேற்க ரயிலடியில் பெருங் கூட்டம். .

இருபது வருஷங்களுக்கு முன் இந்த ஊரை விட்டுப் போனவன் இப்போதுதான் திரும்பி வந்திருக்கிறேன். போகிறபோது சாதாரணமாக வேலை தேடிப் போனவன் இன்றைக்குப் பெரிய நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டராகத் திரும்பி வந்திருக்கிறேன்.

நான் முதன் முதலில் வாழ்ந்த ஊர். என் வாழ்க்கை எப்படியெல்லாம் அமையப் போகிறதோ என்பது என்னை ஒரு பெரிய வினாவாக ஆட்டி வைத்துக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில் என் இருப்பிடமாக இருந்த ஊர். அங்கே தங்குவதற்கு வசதியாக லாட்ஜ் ஏதும் கிடையாது. நான் தங்கப் போவது என்னமோ ஒரே வாரம்தான். எனக்காக ஒரு பெரிய வீட்டையே ஏற்பாடு செய்திருந்தனர். என்னுடைய பி. ஏ.வுக்கும் என் சேவகனுக்கும் சேர்த்து அந்த வீடு ஒரு பெரிய மாளிகையாகத் தெரிந்தது.

நான் ரயிலை விட்டு இறங்கியதும் முதன் முதலாக மாலை போட்டவர் கனகசபை. அன்றைக்கும் பெரிய மனிதர்; இன்றைக்கும் பெரிய மனிதர்தான். பஞ்சாயத்து யூனியன் பிரஸிடெண்ட். நன்னடத்தை சர்டிபிகேட்டுக்காக நான்கு நாட்கள் அவரிடம் நடையாக நடந்திருக்கிறேன். இப்போது எனக்காக அவர் காத்திருக்கிறார்.

அடடே! நம் டாக்டர் ரங்கநாதனா இத்தனை வயதானவராகத் தெரிகிறார்! என் கைகளைக் குலுக்கி, என்னால் அந்த ஊருக்குப் பெருமை என்கிறார். நான் முன்பு தங்கியிருந்தபோது என் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒரு பெண். இல்லாததாக ஒன்றைக் கற்பனை செய்துகொண்டு அது எனக்குத் தத்துப் பித்து என்று கடிதம் எழுதியது. என் கையில் அது சேருமுன் இந்த டாக்டர் கையில் சிக்கிவிட்டது. ''இவனைப் போன்ற காலிப் பசங்கள் எல்லோரையும் ஊரை விட்டு ஓட்டினால்தான் ஊர் உருப்படும்!'' என்று அன்று பேசியவர் இன்று இப்படிப் பேசுகிறார்.

''நம்ம காரிலேயே போகலாம்'' என்கிறார் வக்கீல் வரதராஜன். அநியாயமாக என் தாயாதிகள் என் தாய்க்குச் சேர வேண்டிய சொத்தைப் பறிக்கக் கோர்ட்டுக்குப் போனார்கள். ''கேஸ் முடியட்டும். ஃபீஸ் தருகிறோம்'' எனக் கெஞ்சினேன். ''பச்சை நோட்டைப் பார்த்தால்தான் என் கை கறுப்புக் கோட்டையே தொடும்!'' என்றவர்தான் இன்று எனக்கு ரத்தினக் கம்பளம் விரிக்காத குறையாக அழைக்கிறார்.

''ஸார்! வழியை விடுங்கள். முதலில் அவர் ஒரு கப் காப்பி சாப்பிடட்டும்!'' என எல்லோரையும் கையமர்த்தி நிறுத்தினார் சாமா ஐயர். பெரிய கடைத் தெரு ஹோட்டல் முதலாளி. வேலை இல்லாத காலத்தில் ஒரு சர்வர் வேலைக்காக நான் இவர் முன் கை ஏந்தி நின்றதுண்டு. 'கிளீனர்' வேலை கூடக் கிடையாது என எச்சரித்தவர் இன்று எனக்கு நுரை பொங்கக் காப்பி ஆற்றிக் கொண்டிருக்கிறார்.

அதோ கோவில் தர்மகர்த்தா கோதண்டபாணி. நான் தங்கியிருந்த அறையில் வெளிச்சம் இல்லை என்பதற்காகக் கோவிலில் படித்துக் கொண்டிருந்தேன். அங்கேயிருந்த பல்பைக் கழற்றச் சொன்ன புண்ணியாத்மா. நான் உட்காரப் போகும் காரின் சீட்டைத் தம் அங்கவஸ்திரத்தால் துடைக்கிறார்.

எல்லோரும் பழகிய முகங்கள். 'என் பார்வை அவர்கள் மேல் விழாதா? அவர்களைப் பார்த்து நான் ஒரு புன்சிரிப்புச் சிரிக்க மாட்டேனா' என்று ஏங்குகிறார்கள். அத்தனை பேருக்கும் என்னால் காரியம் ஆக வேண்டியிருந்தது.

காரணம், நான் இப்போது பெரிய மனிதன். எங்கள் ஊருக்குப் பக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பெரிய ரசாயனத் தொழிற்சாலையின் பலதரப்பட்ட வேலைகளுக்கு நான் 'காண்ட்ராக்ட்' முடிவு செய்ய வந்திருந்தேன். அத்தனை பேருக்கும் என்னால் காரியம் ஆக வேண்டியிருந்தது. ''உதவாக்கரை மூதேவி'' என்று நேருக்கு நேர் திட்டியவர்களெல்லாம் ''நம்ம தியாகு'' என்று நொடிக்கு ஒரு முறை உரிமை கொண்டாடுகிறார்கள்.

காரில் ஏறப் போகும் தருணம், ''மாமா, சௌக்கியமா?'' எனக் குரல் கேட்கிறது. அழைத்தவனுக்கு இருபத்தைந்து வயது இருக்கும். அழுக்கு வேஷ்டி. அழுக்குச் சட்டை. தலைமுடி காடு போல் வளர்ந்திருந்தது. தன்னையும் அறியாமல் மாமா முறை வைத்து அழைத்த அந்த வாலிபனை ஏற இறங்கப் பார்க்கிறேன்.

''நான்தான் மாமா சீனு.... மறந்து போச்சா?'' எனக் கேட்ட அவன் சிரிக்கிறான்.

அவனுடைய ஏழைமைக் கோலம் என்னைக் குழப்புகிறது. பார்த்த முகம் போலத்தான் தெரிகிறது. ஆனால் சட்டென்று நினைவுக்கு வரவில்லையே!

''வழியை விடுடா, சீனு!.... முந்திரிக் கொட்டை மாதிரி எல்லோரையும் இடித்துத் தள்ளிக் கொண்டு....'' டாக்டர் அவனைக் கடிந்து கொண்டார்.

''யார் இந்தப் பையன்?'' என்று கேட்கிறேன்.

''தைலாப் பாட்டி பேரன். முன்பு சாப்பாட்டு மெஸ் நடத்தினாளே அந்தப் பாட்டி.''

எனக்குக் கவனம் வருகிறது. எத்தனையோ மாதங்கள் நான் அந்த ''மெஸ்ஸில்'' சாப்பிட்டிருக்கிறேன். பாட்டியின் கையும் மணக்கும்; பேச்சும் இத்திக்கும். பணம் கொடுக்க இயலாத நிலையில் நான் சில நாட்கள் போகாதபோது அந்த மாமியே— இப்போதுதானே பாட்டி — கையில் பிசைந்து எடுத்துக் கொண்டு என்னைத் தேடி வந்து விட்டாள்.

''மாமி சௌக்கியமா அப்பா?'' என்று கேட்கிறேன், பழைய எண்ணங்களில் மூழ்கிப் போனவனாக.

''வயதாகி விட்டது. இருந்தாலும் உங்களைப் பார்க்க ஆசைப்படறா... எங்கள் வீட்டில் ஒரு வேளையாவது சாப்பிட்டு...'' என அழைக்கிறான், சீனு.


''கிழவிக்குத் தான் யார்னு இன்னும் புரியறதில்லே... பெரிய மனுஷி... பேரனைத் தூது அனுப்பி விட்டாள்!'' எனச் சாமா முணுமுணுத்தார்.

''போடா அந்தண்டை! ஸாருக்குச் சாப்பாடு இந்த ஒரு வாரமும் நம்ம 'லாட்ஜ்'லே ஏற்கெனவே ஏற்பாடு செய்தாகி விட்டது'' என்று அவனை விரட்டுகிறார்.

''ஏய் சாமா!... பேசாமல் இரும்!... அதற்கெல்லாம் நான் தனியாக ஏற்பாடு செய்து விட்டேன். உம் ஹோட்டல் சாப்பாடு ஒரு வாரம் சாப்பிட்டால் சார் அப்புறம் நம் ஊர்ப் பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்க மாட்டார்!'' என அட்டகாசமாகச் சிரிக்கிறார் கனகசபை.

நான் புன்னகை செய்கிறேன். ''ஏன் உங்களுக்குள் கோபம்? எல்லோர் வீட்டிலும் ஒவ்வொரு நாள் விருந்தாளியாக இருக்கிறேன் என்கிறேன்.''

''மாமா! எங்கள் வீட்டில்?'' என்று கேட்கிறான் சீனு. பெரிய விடாக்கண்டன். ''கட்டா





லண்டனில் பிக்கடல்லி சர்க்கஸ் என்ற கூட்டமான இடத்தில் ஒரு நாள் இரவு சில இளைஞர்கள் ஒரு பெரிய குழி தோண்டிவிட்டுக் கம்புகளை வெல்லாம் கட்டி அதில் 'ஆட்கள் வேலை செய்கிறார்கள்' (Men at work) என்று ஒரு போர்டையும் எழுதி வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். பல நாட்கள் வரை அங்கு போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது. இது யாரோ செய்த வேடிக்கை என்று கண்டு பிடிக்க போலீஸ் இலாகாவுக்குப் பல நாட்கள் பிடித்தன.

இந்தியன் எக்ஸ்பிரஸ் - 'பாலி

யம் வருகிறேன். மாமியிடம் சொல்!'' என்கிறேன். சொன்ன மறு கணம் அதை மறந்தும் விடுகிறேன்.

• • •

மறுநாள் முதல் எனக்குச் சரியான வேலை. தொழிற்சாலை கட்டப்பட வேண்டிய இடம் ஊருக்குப் பத்து மைல்கள் தள்ளி இருந்தது. அங்கே தாற்காலிகமாகப் போடப்பட்ட ஷெட்டில் எங்கள் அலுவலகம் நடந்து கொண்டும் இருந்தது. காலை எட்டு மணிக்குப் புறப்பட்டுப் போனால், பகல் பன்னிரண்டு மணிக்குத்தான் திரும்புவேன். இன்னும் நேரம் ஆனால் கூடப் பெரிய மனிதர்கள் காத்திருந்து மதிய உணவுக்கு அழைத்துப் போவார்கள். ஒவ்வொரு நாளும் சீனுவும் அங்கே காத்திருப்பான்.

''மாமா!'' என அழைப்பான்.

''நாளைக்குவருவதாக மாமியிடம் சொல்!'' எனக் கூறிவிட்டுப் போவேன். அவனும் தலை அசைத்து விட்டுப் போவான்.

• • •

இன்று நான் கட்டாயம் ஊர் திரும்பி ஆக வேண்டும். ஏழு நாட்கள் திட்டமிட்டு வந்தவன். பன்னிரண்டு நாட்கள் தங்கி விட்டேன். முதல் நாள் வந்த சீனுவிடம் இன்று நான் கட்டாயம் தைலாப் பாட்டியைப் பார்க்க வருவதாகச் சொல்லியிருந்தேன்.

தொழிற்சாலையில் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு நான் புறப்படும்போது பகல் ஒரு மணிக்கு மேல் ஆகிவிட்டது. நான் என் இருப்பிடம் திரும்பும்போது எனக்காக ஒரு கார் காத்திருந்தது. அதில் இருந்தவன் என் பால்ய நண்பன் ராமு. என்னைப் பார்த்தவுடன் ஓடி வந்து என்னைக் கட்டிக் கொண்டான்.

''உன்னால் என்னை வந்து பார்க்க முடியாது என்று எனக்குத் தெரியும். ஆகையால் குடும்பத்துடன் உன்னைப் பார்க்க வந்து விட்டேன். புறப்படு. எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்!'' என்று அவசரப் படுத்தினான் ராமு.

ஏக்கத்துடன் வெளியே நின்று கொண்டிருந்தான் சீனு.

''என்னை மன்னித்துவிடு ராமு!... நான் இவனுடன் இன்று வருவதாக...''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்போது நீயாக வருகிறாயா இல்லை... உன்னை அப்படியே அலாக்காகத் தூக்கிக் கொண்டு போகட்டுமா?'' எனப் பயமுறுத்தினான் ராமு.

சொன்னபடி செய்தாலும் செய்வான். நல்ல உடற்கட்டு அவனுக்கு.

சீனுவுடன் போகாவிட்டால் என்ன? அந்தப் பாட்டிக்கு என்னைப் பார்க்க வேண்டும் என்று இருந்தால் நான் தங்கும் இடத்துக்கு வந்திருக்க முடியாதா?

''சீனு! என்னை மன்னித்துவிடு! பாட்டியிடம் சொல்லு!'' என்றேன்.

''மாமா! பாட்டி உங்களை ரொம்பவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்'' என்று சீனு கெஞ்சினான்.

''போடா! பெரிய மகாராணி உன் பாட்டி. இயாரு வந்து தர்பாரில் ஆஜராக வேண்டுமோ?'' என்று அவனை அப்புறம் தள்ளி விட்டு என்னை இழுத்துப் போனான் ராமு.

ராமுவும் அவன் மனைவியும் பக்கத்து ஊர் பயணியர் விடுதியில் குடும்பத்துடன் என்னை உபசரித்தார்கள். அவன் மனைவி என்னுடைய மனைவிக்குத் தோழி. ஏதேதோ பேசிவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தபோது மணி மூன்று அடித்து விட்டது.

சமையல் அமிர்தமாக இருந்தது.

''ராமு! நீ கொடுத்து வைத்தவன். உன் மனைவியின் கை ருசி தனிதான். எங்கள் வீட்டில் சமையல்காரர் லீவு என்றால் ஹோட்டல் எடுப்புத்தான்!'' என்று பாராட்டினேன்.

''இங்கே மட்டும் என்ன வாழ்கிறது?... இது என்ன சாமா ஐயர் ஹோட்டல் சரக்கா?'' எனக் கேட்டான் ராமு தன் மனைவியிடம்.

''இல்லை. இன்று அவா ஹோட்டல் லீவு. தைலாப் பாட்டின்னு ஒருத்தி இருக்காளாம். அவள் கிட்டக் கேட்டுப் பாருங்கன்னு சொன்னார். யாருக்காகவோ அவள் சமைத்து வைத்துக் கொண்டு காத்திருந்தாள். நல்ல தாராள மனசு.... 'எடுத்துக் கொண்டு போ, அம்மா!' எனக் கொடுத்தாள். பாவம், அந்தப் பாட்டி... ஒரு கையும் காலும் சுவாதீனம் இல்லை. உடம்பை இழுத்து இழுத்துக் கொண்டு போய் ஒற்றைக் கையால் சமைத்து வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறாள். அந்தப் பாவி 'வரேன், வரேன்'னு பத்து நாட்களா ஏமாத்தறானாம்!'' என்றாள்.

'அந்தப் பாவி' எழுந்து விட்டேன். ''எங்கேடா?'' என்று கேட்டான் ராமு. நான் நிற்கவில்லை. என் அன்னையை விட மேலான, தெய்வத்தை விட உயர்ந்து நின்ற தைலாப் பாட்டியின் கால்களில் என் தலையை வைத்து அப்போதே மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

பின்னால் ராமு சொல்லிக் கொண்டிருந்தான். ''பெரிய மனிதர்கள் என்றால் இப்படித்தான். எங்கேயாவது ''மறை'' கழன்று விடுகிறது!''

நான் இலட்சியம் செய்யவில்லை.

கோவலனைப் பற்றித் தனக்குள்ள வேதனையைக் கண்ணகியும் வெளிப்படுத்தவாளுள்:

"அறவோர்க்கு அளித்தலும்
அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும்
தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்
இழந்தேன்..."

என்று இதயக் குமுறலோடு எடுத்துக் கூறினாள்.

புகாரில் கோவலன் பிரிவால் தனது இளமை பாழானதற்காகக் கண்ணகி வருந்தவில்லை. "கணவனோடு கூடி இன்பம் துய்க்க வேண்டிய பருவத்திலே துன்பத்தைச் சுமந்து கொண்டு வாழ்நாளைக் கழித்தேனே" என்று அவள் கூறவில்லை. "ஒரு மனைவிக்குரிய அறங்களைச் செய்வதற்கு உதவியாகத் தாங்கள் என்னுடன் வாழவில்லையே?" என்றுதான் கூறினாள். இதனால் ஒருத்தனும் ஒருத்தியும் கூடி நடத்தும் மனை வாழ்க்கையின் மாண்பினைத் தமிழர் சமுதாயத்துக்கு நினைவூட்டுகின்றார் இளங்கோ.

கண்ணகி நிகழ்த்திய கடைசி உரையாதலால், அவளை பேசக் கேட்போம்:

............நும்
பெருமகள் தன்னொடும்
பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெரும் சிறப்பின்
மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா
முனிவு இகந் தனனா,
அற்புளம் சிறந்தாங்கு,
அருண்மொழி அளைஇ,
எற்பா ராட்ட..
யானகத்து ஒளித்த
நோயுந் துன்பமும்
நொடிவது போலுமென்
வாய்அல் முறுவற்கு
அவர் உள்ளகம் வருந்தப்
போற்றா ஒழுக்கம்
புரிந்தீர்; யாவதும்



சிலம்புச் செல்வம்

ம.பொ.சி

"நும்மைப் பிரிந்த வருத்தத்தால், மிகுந்த வேதனையோடு வாழ்நாட்களைக் கழித்த போது, இருநிதிக் கிழவனான நுமது தந்தையும் தாயும் என்னைக் காண வந்தனர். அவர்கள் என்பால் அன்புடையவர்களாக, அருள் நிறைந்த சொற்களைக் கூறி, என்னைப் பாராட்டினர்.

"நுமது பிரிவால் என் மனத்துள் துயரமே நிறைந்திருந்த தென்றாலும், நுமது பெற்றோர் அறியா வண்ணம் அதனை மறைத்துக் கொண்டு என் உதட்டிலே புன்சிரிப்பை வரவழைத்து, அவர்களை மகிழ வைக்க முயன்றேன். ஆனால் நிறை மதியரான நுமது பெற்றோர் என் மனத் துயரத்தை அறிந்து வருந்தினர். என்ன செய்வது? குலத்திற்கு ஒவ்வாத ஒழுக்கக் கேடுகளைத் தாங்கள் புரிந்தீர்கள். யான் பெண்களுக்கே உரிய கற்பு நெறியைக் கடைப்பிடித்து, 'எழுக' என்று தாங்கள் ஆணையிட்டவுடன், அந்த ஆணையை ஏற்றுத் தங்களைப் பின்பற்றி வந்தேன்" என்றாள் கண்ணகி. இதுதான் கோவலனுடன்

மாற்றா உள்ள
வாழ்க்கையேன் ஆதலின்,
ஏற்றெழு ந்தனன், யான்.

கோவலனும் கண்ணகியும் மாதரி இல்லத்திலிருந்த காலை, வினைகளிலிருந்து விடுபடுவதற்கான பக்குவத்தைப் பெற்றுவிட்ட பரிசுத்த ஆன்மாக்களாக நமக்கு அறிமுகம் ஆகின்றனர். கண்ணகியை விட்டுக் கோவலன் பிரிவது கதைப் போக்கின்படி சிலம்பு விற்றுப் பொருள் தேடித் திரும்புவதற்காகத்தான் என்றாலும், இது 'மீளாப் பிரிவு' என்பதை அவனுடைய ஆன்மா அறிந்து கொள்கின்றது.* அப்படியே கதைப் போக்கின்படி, கோவலன் சிலம்பு விற்று மீண்டு வருவான் என்று கண்ணகி நம்ப வேண்டியவளாக இருந்தும், இது மீளாப் பிரிவு என்பதனை அவளுடைய ஆன்மாவும் அறிகிறது. (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

இதோ! நீங்கள் துடிதுடிப்புடனும், ஊக்கத்துடனும் விளங்க சக்தியளிக்கும் 'எரிபொருள்'



பூஸ்ட்

மால்ட் சாக்லெட் மில்க் ட்ரிங்க்

ரயிலுக்கு எரிபொருள் தேவைப்படுவது போன்றே, உங்களுக்கும் நீங்கள் ஒவ்வொரு தினத்தையும் சுறுசுறுப்புடன் தொடங்கவும், நாள் முழுவதும், சீராக நல்ல வேகத்துடன் செயலாற்றவும், ஒரு சக்தியளிக்கும் 'எரிபொருள்' தேவை. இதற்கு, நீங்கள் தினமும் காலையில் பூஸ்ட் பருக வேண்டியது அவசியம். முக்கியமாக பள்ளி வேலையிலும், விளையாட்டிலும் அதிக சக்தியை செலவழிக்கும் உங்கள் குழந்தைகளுக்கு பூஸ்ட் அவசியம் அளியுங்கள்.

பூஸ்ட் ஒரு புதிய, மால்ட், சாக்லெட், பால் சேர்ந்துள்ள பானம்.

உடலுக்குத் தேவையான போஷாக்கினைப் பற்றி அனைத்தையும் அறிந்துள்ள 'ஹார்லிக்ஸ்' தயாரிப்பாளர்கள் அளிப்பது.

பூஸ்ட், முழு ஆடைப்பால், கோதுமை, பார்லி மால்ட், கோகோ மற்றும் இயற்கையான வைட்டமின்கள், கனிஜச் சத்துக்கள் முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

மற்ற எந்த சாக்லெட் பானத்தையும்விட பூஸ்ட்டில் அதிக அளவு பால் சேர்க்கப்பட்டுள்ளது.
பூஸ்ட்டில் உள்ள அதிக அளவு பால், உங்கள் குழந்தைகளுக்கு அதிக போஷாக்கினையும், அதிக அளவு புரதச்சத்துக்களையும் அளித்து, அவர்கள் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஸ்ட்டில் உள்ள அதிக அளவு பாலினை, பூஸ்ட் பானத்தை அருந்தும் போது நீங்களே உணரலாம்.

பூஸ்ட்டின் மால்ட், சாக்லெட் கலந்த திருச்சுவையை உங்கள் குடும்பத்தினர் அனைவரும் விரும்புவர்.

பூஸ்ட், உங்களுடைய ஒவ்வொரு தினத்தையும் துடிதுடிப்பான முறையில் தொடங்குவதற்கு ஒரு அருமையான பானம்.

'ஹார்லிக்ஸ்' தயாரிப்பாளர்கள் அளிப்பது

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு

